Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.
34°C 28°C



# சிங்கள வாக்குகளுக்கு வடக்கில் இடம்வேண்டும்

## வலியுறுத்துகிறது சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம்

கொழும்பு, மே 6

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்கு வடமாகாண சபைத் தேர்தலில் வாக்களிப்பதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் வடக்குத் தேர்தலை நடத்த விடமாட்டோம் என்று சிங்கள தேசிய அமைப்புகளின் ஒன்றியம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பத் தீர்மானித்துள்ளது. இதன் பிரகாரம் இம்மாத இறுதிக்குள் குறித்த கடிதம் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும், இந்த விவகாரம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காக சிங்கள தேசிய ஒன்றியத்தின் முக்கிய கூட்டம் இவ்வார இறுதியில் இடம்பெறவுள்ளது என்றும் அறிய முடிகின்றது.

இது குறித்துதேசிய அமைப்புகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்ததாவது:

''வடக்குத் தேர்தலை செப்ரெம்பரில் நடத்துவது நல்லதல்ல. நாம் முன்வைத்துள்ள கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரையில் அங்கு தேர்தல் நடைபெறக் கூடாது என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவே உள்ளோம்.

போரின் போது வடக்கிலிருந்து சுமார் 20 ஆயிரம் சிங்கள மக்கள் வெளியேற்றப்பட்டனர். அவர்கள் அங்கு மீள்குடியமர்த்தப்பட வேண்டும். அத்துடன் இவ்வாறு வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட சிங்கள மக்கள் வட மாகாணத் தேர்தலில் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறு எமது இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றாமல் அரசு வட மாகாண சபைத் தேர்தலை நடத்த முயன்றால் அதனை நாம் தடுத்து நிறுத்துவோம். இது தொடர்பாக நாம் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை இந்த வார இறுதிக்குள் அனுப்பவுள்ளோம்.

- என்றார். (ங-சி)



> “ நாம் முன்வைத்துள்ள கோரிக்கைகள் நிறைவேற்றப் படும் வரையில் அங்கு தேர்தல் நடை பெறக்கூடாது என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவே உள்ளோம். எமது கோரிக்கைகளை நிறைவேற்றாமல் அரசு வடமாகாண சபைத் தேர்தலை நடத்த முயன்றால் அதனை நாம் தடுத்து நிறுத்துவோம்.

**உள்ளூர்**



பாஷையூர் இறங்குதுறை விரிவாக்கம் பக். 09

**செய்திகள்**




நற்பிட்டி முனையில் நூலகம் எரிப்பு பக். 08

**விளையாட்டு**



தொப்பிகள் சென்னையிடம் பக். 23



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை விரட்டியடிப்போம் என்ற தலைப்பில் போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தினர் வடக்கில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மன்னார் போன்ற பகுதிகளில் துண்டுப் பிரசுரங்களை விநியோகித்து வருகின்றனர். கிளிநொச்சி பஸ்நிலையத்தில் குறித்த இயக்கத்தினால் நேற்று துண்டுப்பிரசுரங்களை மக்களுக்கு விநியோகித்தனர். (ங-4)

## காணி சுவீகரிப்பு பலாத்காரமானதே

### ஆதாரங்களுடன் நிரூபிக்கத் தயார் கூட்டமைப்பு சவால்

யாழ்ப்பாணம், மே.6

''வடக்கில் நடைபெறுவது அரசின் பலாத்கார காணி சுவீகரிப்புத்தான். இவ்வாறு சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு அரசு ஒருபோதும் நட்ட ஈடு வழங்கவில்லை. இதை நாங்கள் ஆதாரங்களுடன் நிரூபிக்கத் தயார். தமது சொந்தக் காணிகளை இராணுவத்தினர் ஆக்கிரமிப்பதை எதிர்க்கும் தமிழ் மக்கள். ஒருபோதும் அரசின் நட்ட ஈட்டை வாங்கமாட்டார்கள்''. இவ் வாறு தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

வடக்கில் ஓர் அங்குலக் காணியைக் கூட அரசு பலாத்காரமாக எடுக்கவில்லையென்றும், நட்ட ஈடு வழங்காமல் காணிகள் எதனையும் அரசு எடுத்திருக்குமாயின், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதனை நிரூபித்துக் காட்டட்டும் என்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார். இது குறித்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த அமைச்சர் தனது வாதங்கள்தான் சரி என்றால் உயர் நீதிமன்றத்தில் நாம் காணி அபகரிப்புக்கு எதிராக வழக்குகளைத் தாக்கல் செய்த பின்னர் அங்கு வந்து தனது வாதங்களை முன்வைக்கட்டும்'' - என்றும் மாவை சேனாதிராசா கூறினார். (ங-சி)

## காணி சுவீகரிப்பு; வழக்கு இந்த வார இறுதியில்

### சுமந்திரன் எம்.பி தகவல்

யாழ்ப்பரணம், மே 6

வலி.வடக்கில் படைத் தரப்பால் பொதுமக்களின் காணி சுவீகரிக்கப்படுவதற்கு எதிரான வழக்கு இந்த வார இறுதியில் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்படவுள்ளது - என்று சட்டத்தரணியும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

வலி.வடக்கு மற்றும் வலி.கிழக்கில் 6 ஆயிரத்து 381 ஏக்கர் காணியை இராணுவத்தினர் படைத் தலைமையகம் அமைப்பதற்காக சுவீகரிக்கவுள்ளனர். இந்தக்காணி சுவீகரிப்பு தொடர்பான அறிவித்தல்கள் கடந்த மாதம் 22 ஆம் திகதி வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் ஒட்டப்பட்டுள்ளன.

இதனை எதிர்த்து வலி.வடக்கு மக்கள் கடந்த 29 ஆம் திகதி தெல்லிப்பழை பிரதேச செயலகத்தின் முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தியிருந்தனர். அத்தோடு உயர் நீதிமன்றில் 5 ஆயிரம் வழக்குகள் தாக்கல் செய்வதற்கும் இதன்போது முடிவு செய்யப்பட்டிருந்தது.

இதற்கமைய வலி.வடக்கு மக்களினால் வழக்குத் தாக்கல் செய்வதற்குரிய ஆவணங்கள், மற்றும் அவற்றின் பிரதிகள் என்பன வலி.வடக்கு பிரதேச சபையினரிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன.

''இது வரை இரண்டாயிரம் பேர் வரையில் சரியான ஆவணங்களுடன் பதிவு செய்துள்ளனர்.

தொடர்ச்சி: பக்கம் 24

## யாழ்.வர்த்தகர்களிடம் கப்பம் வாங்கியோர் கைது

யாழ்ப்பாணம், மே.6

யாழ்.நகர வர்த்தகர்கள் சிலரை மிரட்டி கப்பமாக பல லட்சம் ரூபாவை சுருட்டிய மூவர் குழுவை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

சிங்களவர் ஒருவரும், யாழ்ப்பாண இளைஞர்கள் இருவருமே இவ்வாறு பொலிஸாரிடம் நேற்று மாட்டினர்.

தொடர்ச்சி: பக்கம் 24

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கையில் ஐ.தே.க.தீவிரம்

## இம்மாத இறுதிக்குள் முக்கிய பேச்சு என்கிறார் ரணில்



கொழும்பு, மே.6
நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைகளுக்கமைய புதிய அரசமைப்பொன்றை உருவாக்கி நாட்டில் புதிய அரசியல் கலாசாரமும், பொருளாதார சமூகமும் உருவாக்கப்படவேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.
இதற்கமைய புதிய அரசமைப்பொன்றை உருவாக்கும் நடவடிக்கையில் தமது கட்சி தீவிரமாக ஈடுபட்டு வருகிறது எனவும் குறிப்பிட்ட அவர் இந்தப் புதிய அரசமைப்பு குறித்து இம்மாத இறுதிக்குள் பேச்சு நடத்துவதற்கும் நாட்டிலுள்ள சகல தரப்பினரதும் கருத்துகளைக் கேட்டறிவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.
கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தின் 41ஆவது ஆண்டு பூர்த்தி வைபவத்தின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-
அரசியல் என்பது அரசமைப்பு, நாடாளுமன்றம் மற்றும் அதற்குள் அடங்கும் நிறுவனங்கள் மட்டுமல்ல, ஜனநாயகத்தை நிலைநிறுத்தும் அரசியல் கட்சிகள், ஊடகங்கள், சிவில் அமைப்புகள், அரச சேவை, பொலிஸ், இராணுவம் ஆகியவை உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் அதற்குள் அடங்கும். தற்போது அரசியல் முறைமையும், அனைத்து நிறுவனங்களும் நாசமாகியுள்ளன. ஊடகங்கள் அரசின் பைகளுக்குள் விழுந்துள்ளன.
நாட்டிலுள்ள அனைத்துச் சட்டத்தரணிகளும் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதால் அதனை நாம் ஒரு நிலையில் வைத்துக்கொள்ள வேண்டும். ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ, சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் என்ற வகையில் அந்தக் கடமையைச் சரியாகச் செய்தார்.
ஏகாதிபத்திய ராஜபக்ஷ ரெஜிமென்ட்டைத் தோற்கடித்து நாட்டில் ஜனநாயகத்தையும், நீதித்துறையின் சுயாதீனத்தையும் நிலைநிறுத்துவதற்காக தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தினர் செயற்படுகின்றனர். அதேபோல் நாமும் செயற்படுகின்றோம்.
எமது போராட்டம் நாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்காக அல்ல. நாட்டில் புதிய அரசியல் முறைமையை நிலைநிறுத்த வேண்டும், பொருளாதாரத்தைப் பலப்படுத்த வேண்டும் என்பதற்காகவே.
இவ்வாறான பின்னணியில் புதிய அரசமைப்புத் திருத்தமொன்றை நாட்டுக்காக முன்வைத்து அதனை நிறைவேற்றுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியால் மட்டுமே முடியும். அப்படியெனில், அது என்ன என்பது குறித்தும் நாம் சிந்திக்கவேண்டும்.
நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் அரசமைப்புக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை. இந்தப் பிரச்சினைகளுக்கு அரசியல் முறைமையும் காரணமாகியுள்ளது.
அவ்வாறெனில், புதிய அரசியல் முறைமை, பொருளாதார முறைமையை உருவாக்க வேண்டும். அரசியல் முறைமையை மறந்து யாப்பை உருவாக்க முடியாது. இவை இரண்டும் சமாந்தரமாகப் பயணிக்க வேண்டும்.
நாட்டுக்கும் மக்களுக்கும் அவசியமான அரசமைப்பை உருவாக்குவதற்கான ஆலோசனைகள் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் இருக்கின்றன. நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையை ஏற்கும் நாம், அதன் பரிந்துரைகளுக்கமைய புதிய அரசமைப்பொன்றை உருவாக்குவது குறித்து தீர்மானிக்க வேண்டும்.
நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைக்கமைய நாட்டுக்குப் புதிய அரசமைப்பை உருவாக்கி, நாட்டில் புதிய அரசியல், பொருளாதார சமூகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே எனது தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடு.
நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறைமையா அல்லது நிறைவேற்றதிகார பிரதமர் முறைமையா என்பது குறித்து புதிய அரசமைப்பில் பிரச்சினை இல்லை. எவ்வாறாயினும், மக்கள் ஆணை மனித உரிமைகளை எவ்வாறு பாதுகாப்பது என்ற காரணிகளே இதில் முக்கியத்துவம் பெறுகிறது. அப்படியாயின், சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாத்து ஊழல் இல்லாத நல்லாட்சியை எவ்வாறு ஏற்படுத்துவது என்பது குறித்து நாம் சிந்திக்க வேண்டும். இந்தக் காரணங்கள் உள்ளடங்காவிட்டால் எந்த அரசமைப்பு இருந்தாலும் அது நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மையை ஏற்படுத்தாது.
எனவே, புதிய அரசமைப்புத் திருத்தமொன்றை முன்வைப்பதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொண்டு வருகிறது. இதற்கமைய இம்மாத இறுதிக்குள் இது குறித்துக் கலந்துரையாடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இந்தப் புதிய அரசமைப்பு தொடர்பில் நாட்டிலுள்ள அனைத்து தரப்பினருடனும் பேச்சு நடத்துவதற்கும் நாம் தயாராக உள்ளோம் - எனத் தெரிவித்துள்ளார்.

# குடும்ப ஆட்சியை நீடிக்கவே பெருமெடுப்பில் வெற்றி விழா

## ஐக்கிய சோஷலிஸக் கட்சி கடும் சாடல்

கொழும்பு, மே.6
சிங்கள மக்களை மடையர்களாக்கி குடும்ப ஆட்சியைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதற்காகவே ராஜபக்ஷ அரசு போர் வெற்றி விழாவை பெருமெடுப்புடன் கொண்டாடுகின்றது எனக் குற்றஞ்சாட்டும் ஐக்கிய சோஷலிஸக் கட்சி, போர் முடிவுடைந்தாலும் தமிழர்களின் பிரச்சினை இன்னும் தீரவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.
அதேவேளை, ராஜபக்ஷ அரசின் இந்தக் கபடதனத்தை அறிந்துகொண்டு குடும்ப ஆட்சிக்கு எதிராக தெற்கு மக்கள் வீதியில் இறங்கிப்போராடும் நாள் வெகு தொலைவில் இல்லை என்றும் அந்தக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.
போர் முடிவடைந்து எதிர்வரும் 19ஆம் திகதியுடன் நான்கு வருடங்களாகின்ற போதிலும், நாட்டில் போர் ஏற்படுவதற்குக் காரணமாகவிருந்த பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணாது, அரசு மேலும் மேலும் இனவாதத்தைத் தூண்டிக்கொண்டிருக்கின்றது என்று ஐக்கிய சோஷலிஸக் கட்சியின் பொதுச் செயலாளர் சிறிதுங்க ஜயசூரிய தெரிவித்தார்.

> “19ஆம் திகதியுடன் நான்கு வருடங்களாகின்றபோதிலும், நாட்டில் போர் ஏற்படுவதற்குக் காரணமாகவிருந்த பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணாது, அரசு மேலும் மேலும் இனவாதத்தைத் தூண்டிக்கொண்டிருக்கின்றது

போர் வெற்றிவிழாவை இம்முறையும் கொண்டாடுவதற்கு அரசு முன்னெடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பாகக் கருத்து வெளியிடுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த சிறிதுங்க ஜயசூரிய,
''பிரபாகரன் இருக்கும்வரையில் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணமுடியாது என அன்று காரணம் கூறிவந்த அரசு, போர் முடிவடைந்து நான்கு வருடங்களாகப்போகின்ற நிலையிலும் தமிழர்களுக்குத் தீர்வை வழங்க முன்வரவில்லை. தமக்குத் தமிழ், முஸ்லிம் மக்களின் ஆதரவு' தேவையில்லை என்ற மமதையிலேயே ராஜபக்ஷ அரசு செயற்படுகின்றது.
''குறிப்பாக, சிங்கள மக்களை மடையர்களாக்கி அவர்கள் மத்தியில் போர் மாயையைத் தோற்றுவித்து குடும்ப ஆதிக்கத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்காகவே நாட்டில் போர் வெற்றிவிழா கொண்டாடப்படுகின்றது.
நல்லிணக்கத்தை நோக்கிப் பயணிக்கவேண்டிய இந்தத் தருணத்தில் நாட்டில் இடம்பெற்ற கொடூர போரை நினைவுபடுத்துவது தகுமா?
''தமிழர்களுக்குக் கடந்தகால கசப்பான சம்பவங்களை இந்த போர் வெற்றிவிழா மீண்டும் மீண்டும் ஞாபகப்படுத்தும். இதனால் தமிழர்கள் விரக்தியடைவர். அதேவேளை, இந்த அரசுக்கு எதிராக தெற்கு மக்களும் வீதியில் இறங்கிப் போராடும் காலம் உதயமாகும். அந்தக் காலம் தொலைவில் இல்லையென்றே நாம் கருதுகின்றோம்'' - என்றும் சிறிதுங்க கூறினார்.

# தந்தை உயிர் காக்க உங்கள் கையால் ஒரு குவளை தண்ணீர் கொடுங்கள்

## ஜனாதிபதியிடம் மன்றாடுகிறார் அஸாத்தின் மகள் அமீனா



கொழும்பு, மே.6
''உங்கள் கைகளால் கொடுக்கும் ஒரு குவளை தண்ணீரால் நாட்டின் சமாதானத்துக்காகப் போராடும் உங்களது நெருங்கிய நண்பரது உயிரைப் பாதுகாக்க முடியும் என நாம் உறுதியாக நம்புகிறோம்.''
- இவ்வாறு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயருமான அஸாத் சாலியின் மகள் அமீனா சாலி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கடிதம் மூலம் அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.
கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள நிலையில், உண்ணாவிரதம் இருந்து வரும் அஸாத் சாலியின் உயிரைக் காப்பாற்றுமாறு அவரின் மகள் அமீனா சாலி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-
''நான் அஸாத் சாலியின் மகள் அமீனா சாலி. இந்த விசேட அவசர கோரிக்கையை உங்களது அவதானத்துக்குக் கொண்டுவர நான் இக் கடிதத்தை எழுதுகிறேன்.
''எனது தந்தையான அஸாத் சாலியின் தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் அரசியல் வாழ்க்கை பற்றி நீங்கள் நன்றாக அறிவீர்கள்.
''நாட்டின் ஜனநாயகத்துக்காகவும், சமாதானத்துக்காகவும் மட்டுமே போராடும் எமது அன்புத் தந்தையை அநீதியாகக் கைதுசெய்துள்ளனர்.
''கைதுசெய்யப்பட்ட நாள் முதல் இன்றுவரை (நேற்று) நீராகாரமின்றி உண்ணாவிரதமிருக்கும் எமது அன்புத் தந்தையின் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளது.
இவ்வாறான நிலையில் நானும், எனது அம்மாவும் அவரைப் பார்த்து நீராகாரம் உட்கொள்ளுமாறு விடுத்த கோரிக்கையை அவர் முழுமையாக நிராகரித்துவிட்டார்.

> ''நீங்கள் நாட்டின் ஜனாதிபதியாவதற்கு எனது தந்தை எந்தளவுக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார் என்பதை நீங்களும், இந்த நாட்டிலுள்ள மக்களும் நன்கு அறிவீர்கள்.

''நீங்கள் எமது குடும்பத்தின் நெருங்கிய நண்பர் என்பதை நான் எனது சிறுவயதுமுதல் நன்கு அறிவேன். அதனால் எனது தந்தைக்கு உங்களது கைகளால் ஒரு குவளை தண்ணீர் கொடுத்தீர்களானால் நிச்சயமாக அவரின் நிலை வழமைக்குத் திரும்பும்.
''நீங்கள் நாட்டின் ஜனாதிபதியாவதற்கு எனது தந்தை எந்தளவுக்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார் என்பதை நீங்களும், இந்த நாட்டிலுள்ள மக்களும் நன்கு அறிவீர்கள்.
''அதனால் உங்கள் கைகளால் கொடுக்கும் ஒரு குவளை தண்ணீரால் நாட்டின் சமாதானத்துக்காகப் போராடும் உங்களது நெருங்கிய நண்பரின் உயிரைப் பாதுகாக்க முடியும் என நாம் உறுதியாக நம்புகிறோம்.
''இந்தக் கடிதத்தினூடாக எமது கோரிக்கையை உங்களது கவனத்திற்குக் கொண்டுவருவதுடன், எனது தந்தைக்காக நாம் விடுக்கும் இந்தக் கோரிக்கையை நீங்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் நான் மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்'' - என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார் அமீனா சாலி.

(ந-சி)

# சிகை ஒப்பனையாளர் சங்க ஒன்றியம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மே.6
யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்க ஒன்றியத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறவுள்ளது.
க.சிறிராஜன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் அனைத்து சிகை ஒப்பனையாளர் சங்கங்களைச் சேர்ந்த தலைவர், செயலாளர், உறுப்பினர்கள், தொழிலாளர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளும்படி சங்கத்தின் செயலாளர் அ.அல்பேட் அறிவித்துள்ளார்.
அங்குரார்ப்பண நிகழ்வுக்காக சகல சிகை ஒப்பனை நிலையங்களையும் நாளை செவ்வாய்க்கிழமை மூடி நிகழ்வில் கலந்துகொண்டு ஒத்துழைக்குமாறும் அவர் வேண்டியுள்ளார். இதில் கலந்துகொள்ளாதவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-16)

# துமிந்த மீண்டும் வைத்தியசாலையில்



கொழும்பு, மே.6
ஜனாதிபதியின் ஆலோசகர் பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திர உட்பட நால்வர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரான நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா சுகவீனம் காரணமாக மீண்டும் நவலோகா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் நேற்றுமுன்தினம் இரவு சேர்க்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வா, பின்னர் நேற்றுக் காலை சாதாரண விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளார் என அவரது உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

(ந-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# பொருளியல் வளர்ச்சி தறுக்கணிக்காது தடுக்க...!

வெளிநாடுகளில் இருந்து கடன் பெறுவதற்காக வழங்கப்படும் சேவைக் கொடுப்பனவாக மட்டும் கடந்த [2012 ஆம்] ஆண்டில், நாட்டின் வருமானத்தில் 21.2 சத வீதம் கரைந்து போயுள்ளது. அதற்கு முந்திய ஆண்டில், கடன் சேவைக் கொடுப்பனவு 12.7 சத வீதமாக இருந்தது.

இந்தப் புள்ளி விவரத்தை, இலங்கை மத்திய வங்கி தனது 2011 ஆம் வருடத்துக்கான அறிக்கையில் மிக வெளிச்சமாகத் தொட்டுக்காட்டி உள்ளது.

எமது நாடு, மொத்தம் 2,840 கோடி அமெரிக்க டொலர்களை, குறிப்பிட்ட வருடத்தில், வெளிநாடுகளில் இருந்து கடனாகப் பெற்றுள்ளது.

இத்தனைக்கும், அனைத்துலக நிதிச் சந்தைகளில் இருந்து தனியார் வர்த்தக வங்கிகளும் கடன் வசதிகளைப் பெற்றுள்ளன என்பது கருத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும்.

மொத்தத்தில், அனைத்துலக நாடுகளில் இருந்தும் அனைத்துலக நிதிச் சந்தைகளில் இருந்தும் பெறப்படும் கடன் தொகைகளின் வீதாசாரம் அதிகரித்துச் செல்வது, ஏற்கனவே நலிந்து, மெலிந்து போயுள்ள மக்கள் மீது மேலும் தலையில் அடித்து அமிழ்த்தித் துன்புறுத்துவதற்குச் சமமானதாகும்.

நாட்டின் நிகர உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் வெளிநாட்டுக்கடன் நிலுவை 47.9 சதவீதமாக உயர்ந்துள்ளது. இத்தனைக்கும், வெளிநாட்டுக் கடன்களை இலங்கை திரும்பச் செலுத்துவதற்கான வாய்ப்புக்கள் மிகவும் அருகி வருவதாக பொருளியல் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

அத்தோடு நாட்டின் நிகர உள்நாட்டு உற்பத்தியில் 6.4 வீதம் மட்டுமே அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதும் சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இது மோசமான விளைவுகளை உருவாக்கம் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஏன், இந்த அரசாங்கத்தின் கீழ் - தொடரப்போகும் அதன் பதவிக் காலத்தில் -நாடு வங்குரோத்து நிலைக்குள் வீழ்த்தப்படும் சாத்தியத்தையும் இலகுவில் புறந்தள்ளி விட முடியாது.

நாட்டின் நிகர உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதாசாரத்தை, வெளிநாட்டுக் கடன் தாண்டிப் போவதற்கு அனுமதித்தால், இது விடயத்தில் ஆட்சியாளர்கள் ஆழ்ந்து அக்கறை செலுத்தாவிடில், நாடு பெரும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்திக்க நேரிடும்; வங்குரோத்து, நிலைக்குக் கூடப் போகலாம்.

ஏற்றுமதியை அதிகரித்து, இறக்குமதியைக் குறைப்பதன் மூலமே எந்த நாடும் பொருளாதாரத்தில் வேண்டிய இலக்கை எய்த இயலும். ஆனால் எங்கள் நாட்டில் வாய்ப்பாடு வளம் மாறியே காணப்படுகின்றது.

இலங்கை அந்நியர் ஆட்சியிலிருந்து 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது. சுதந்திரத்தின் பின்னர் பொருளாதார வளர்ச்சிக்கு முன்னுரிமை வழங்குவதற்குப் பதிலாக, சிறுபான்மை இனங்களை இரண்டாம் தரப் பிரசைகளாக்குவதற்கே முதனுரிமை வழங்கப்பட்டது.

அதன் விளைவே, இன்றைய அரசியல் பூசல்களுக்கும், பொருளாதாரம் சரிந்து தாழ்ந்து போவதற்கும் மூல காரணம்.

பெரும்பான்மை இன அரசுகள் யாவுமே, அதனை மனதில் வாங்க விரும்பாமல் இன்று வரை அதே மார்க்கத்திலேயே ஆழக் கால் பதித்து வந்தன. இப்போதைய அரசு அந்த வழியில் நடப்பதை வேகப்படுத்தி வருகிறது.வெளிநாட்டுக் கடனிலிருந்து நாடு மீள முடியாது போனால் 2001 இல் நாடு எதிர்நோக்கிய மோசமான நிலைமை மீண்டும் உருவாகலாம்.

அதேவேளை-

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் முதல் தடவையாக நாட்டின் நிகர உள்நாட்டு உற்பத்தி, அப்பொழுது அடி மட்ட நிலைக்குக் கீழ் 1.4 சதவீதமாக வீழ்ச்சி கண்டது. அனைத்துலக மற்றும், உள்நாட்டு பொருளாதார நெருக்கடிகள் விடுதலைப்புலிகளுடனான போர் என்பன அதற்கான காரணங்களாக அப்பொழுது கருதப்பட்டன; முன்வைக்கப்பட்டன.

நாட்டின் பொருளாதாரக் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டிய அவசியத்தை அது வலியுறுத்தியது.விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு, அப்போதைய ரணில் விக்கிரமசிங்க அரசைத் தூண்டியதும் இந்தப் பொருளாதார வங்குரோத்து நிலைமையே என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

அதேவேளை, இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் 1958, 1983 இனக்கலவரங்கள், 1971, 1987-89 ஜே.வி.பி கிளர்ச்சிகள், 1983-2009 உள்நாட்டுப் போர் , 2004 ஆழிப்பேரலை ஆகியன ஊடாக நாடு அழிவுகளைச் சந்தித்தது. இதனால் நாட்டின் பொருளாதார வளம் பாதிக்கப்பட்டது என்பதனையும் மனதில் கொண்டாக வேண்டும்.

நான்கு வருடங்களுக்கு முன்னர் போர் முடிவுறுத்தப்பட்ட போதிலும், ஆயுதங்களுக்காகப் பெற்ற கடனை திரும்பிச் செலுத்த வேண்டி உள்ளதால் மக்களினதும் நாட்டினதும் வளர்ச்சி தானாகவே தறுக்கணிக்கும்.

வருட எல்லைகளைக் கொண்ட பொருளாதார வளர்ச்சித் திட்டங்களை வகுத்துச் செயற்பட்டால் வெளிநாட்டுக் கடன் பளுக்களைக் குறைக்க குறிப்பிடக்கூடிய அளவில் உதவும்.

மக்களின் பிரிக்க முடியாத ஜனநாயக உரிமைகளுக்கு மதிப்பளித்து, அதனைச் செயலளவில் கட்டிக் காப்பதில் உண்மையான அக்கறை இந்த நாட்டு அரசுக்கு, அரசுகளுக்கு என்று பிறக்கிறதோ-அப்போது தான் நாடும், மக்களும் பலன் அடைய இயலும்; முன்னேற்றப் பாதை வெளிச்சமாகத் தெரியும். இல்லையேல் பொருளாதார வளர்ச்சி கந்தறுந்த நிலையிலேயே தொடரும்; மிஞ்சும்....!

# வலி. வடக்கில் மீளக் குடியமர தயாராக 6,400 குடும்பங்கள்

## யாழ். செயலக மீளாய்வின் மூலம் தகவல்

யாழ்ப்பாணம்,மே 6

வலி.வடக்கில் மீளக்குடியமர்வதற்கு தயாராக யாழ். மாவட்டத்தில் 6 ஆயிரத்து 400 குடும்பங்கள் வரையில் இருப்பதாக யாழ். மாவட்டச் செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் மீளக்குடியமர வேண்டியவர்கள் தொடர்பான சரியான தகவல்கள் இல்லையென அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்திருந்தார். இதன் பின்னர் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாகவும் வலி. வடக்கில் மீளக்குடியமர வேண்டியவர்கள் தொடர்பான விவரங்கள் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

இதனடிப்படையில் யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 6 ஆயிரத்து 400 குடும்பங்கள், வலி.வடக்கில் மீளக் குடியமர்த்துவதற்கு தயாராக இருப்பதாக தெரிய வந்துள்ளது. பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த மீளாய்வுகள் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை , தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் கடந்த 2004 ஆம் ஆண்டு நீதிமன்ற உத்தரவுக் கமைய 7 ஆயிரத்து 500 குடும்பங்கள் வரையில் பதிவு செய்திருந்தன.

இருப்பினும் தற்போது யாழ். மாவட்ட செயலகத்தால் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வுகள் யாழ். மாவட்டத்தில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டமையால், வெளி மாவட்டங்களில் வசிப்பவர்கள், வெளிநாடுகளில் வசிப்பவர்கள் பதிவு செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

“ யாழ். மாவட்டத்தில் மாத்திரம் 6 ஆயிரத்து 400 குடும்பங்கள், வலி.வடக்கில் மீளக் குடியமர்த்துவதற்கு தயாராக இருப்பதாக தெரியவந்துள்ளது. பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்பட்ட இந்த மீளாய்வுகள் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# மிதவாதிகளை மிதிக்கும் செயலை உடன் நிறுத்திக்கொள்ள வேண்டும்

அண்மைக்காலமாக ஜனநாயக கட்சிகளின் தலைவர்கள் தமது மக்களின் குறைகளையும், தமிழ், முஸ்லிம் ஒற்றுமையையும் எடுத்துரைக்கும்போது அவர்களின் செயற்பாட்டை முடக்க அரசு அவர்களை மிதிக்கும் மிலேச்சத்தனமான செயற்பாடுகளை நிறுத்தவேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணி ஊடகச் செயலாளரும், கொழும்பு மாநகர சபை உறுப்பினரும், வீடமைப்பு நிலையியற் குழுத் தலைவருமான சி. பாஸ்க்கரா தெரிவித்தார்.

உலக மயமாக்கலில் உலகம் பேச்சு வார்த்தை மூலமாக தீர்வு என்பதை விரும்பும் சூழ்நிலையில் தமது மக்களின் பிரச்சினைகளைத் தெரிவிக்கும்போது, அந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க அரசு முயல வேண்டும். அந்த வேளை நல்லிணக்கத்துக்கான சூழ்நிலை உருவாகும். அதை விடுத்து பிரச்சினைகளைத் தீர்க்காமல் இருப்பதும் அந்தக் குறைபாடுகளைக் கூறும் அரசியல் தலைவர்களை மௌனமாக்க முயல்வதும் ஜனநாயக பண்பு கொண்ட நாட்டுக்கு ஏற்புடையது அல்ல. நல்லிணக்க சூழ் நிலையை என்றும் ஏற்படுத்தாது அசாதாரண சூழ்நிலைக்கே இட்டுச் செல்லும்.

தந்தை செல்வா காலத்து அகிம்சைப் போராட்டத்தை அன்றே அன்றைய அரசு செவிமடுத்திருந்தால், பிற்கால இரத்தக்களரிகள் தவிர்க்கப்பட்டிருக்கலாம். அந்த வரலாற்றுத் தவறுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க ஜனநாயக அரசியல் தலைவர்கள் மீதான இம்சை தவிர்க்கப்பட வேண்டும்.

இந்த வேளையில் நல்லிணக்க அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் மீதான நெருக்குதலை நீக்குவதுடன் அஸாத் சாலியையும் விடுதலை செய்து நிரந்தர சமாதான சூழ்நிலையை ஐக்கிய இலங்கைக்குள் ஏற்படுத்த வேண்டும் என்றும் பாஸ்க்கரா தெரிவித்திருக்கிறார். (ஓ)

# இந்து குருமாருக்கு இந்தியாவில் பயிற்சி

யாழ்ப்பாணம், மே 6

இந்து குருமார்கள் இந்தியா சென்று குருமார்களுக்கான பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்கமைப்புகளை அகில இலங்கை இந்து மாமன்றம் மேற்கொள்ளவுள்ளது.

இந்து குருமார்கள் சிறப்பான பயிற்சிகளைப் பெற்று எதிர்காலத்திலும் இந்து சமயப் பண்பாடுகளை ஆலயக் கிரியை முறைகளை முறைப்படி பின்பற்றுவ தற்கு ஏதுவாக இந்து மாமன்றம் இந்த முயற்சியை மேற்கொண்டுள்ளது.

தகுதியுடைய குருமார்களைத் தெரிவு செய்து பயிற்சிக் கட்டணம் உட்பட, விமானப் பற்றுச் சீட்டையும் வழங்கி இந்தியாவில் பொருத்தமான இடத்தில் பயிற்சி நெறிகளை வழங்கவுள்ளது. ஆர்வமுடையவர்கள் இல 91/5 சேர் சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தை, கொழும்பு-2 எனும் முகவரி கொண்ட இலங்கை இந்து மாமன்றத்தின் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளலாம் என்று மாமன்றத்தின் பொதுச் செயலாளர் மு.கதிர்காம நாதன் அறிவித்துள்ளார். (ஓ-14)

## யாழ்.மாவட்டத்தில் 4 மாதங்களில் மட்டும்

# களவாக மின்சாரம் பெற்ற 137 பேர் தண்டப் பணம் செலுத்தினர் ரூ.60 லட்சம்

யாழ்ப்பாணம், மே 6

யாழ்.மாவட்டத்தில் கடந்த 4 மாத காலப் பகுதிக்குள் மட்டும் களவாக மின்சாரம் பெற்ற 137 பேர் 60 லட்சத்து 56 ஆயிரம் ரூபா தண்டப்பணம் செலுத்தினர் என்று மின்சார சபை வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளனர்.

மின்சார சபையின் அனுமதி பெறாமல் மின் பாவனைக்காக சட்ட விரோதமாக மின்சாரம் பெற்று வந்த 137 பேரும் பொலிஸாரின் உதவியுடன் மின்சார சபை உத்தியோகத்தர்களின் தேடுதல் நடவடிக்கைகளின் போது மாட்டிக் கொண்டனர்.

கைதுசெய்யப்பட்ட இவர்கள் அந்தந்தப் பகுதி நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட்ட போது களவாக மின்சாரம் பெற்றமைக்காக 60 லட்சத்து 56 ஆயிரம் ரூபா தண்டப் பணமாக செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

மின்சார சபையின் அனுமதி பெறாமல் சட்ட விரோதமாக உயிர் ஆபத்துக்களுக்கு மத்தியிலும் மின் இணைப்பு வயர்களைப் பயன்படுத்தி தொடர்ச்சியாக மின்சாரம் பெற்று வந்ததுடன் ஏனைய மின்பாவனையாளர்களுக்கும் அசௌகரியங்களை ஏற்படுத்தியுள்ளனர்.



மின்சார சபையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் பொலிஸாரின் உதவியுடன் இந்த 137 பேரும் கடந்த 4 மாத காலப் பகுதிக்குள் கைது செய்யப்பட்டனர்.

“ மின் பாவனைக்காக சட்ட விரோதமாக மின்சாரம் பெற்று வந்த 137 பேரும் பொலிஸாரின் உதவியுடன் மின்சார சபை உத்தியோகத்தர்களின் தேடுதல் நட வடிக்கைகளின் போது மாட்டிக் கொண்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் ஜனவரி மாதம் கைது செய்யப்பட்ட 53 பேர் 18 லட்சத்து 14 ஆயிரம் ரூபாவும், பெப்ரவரி மாதம் கைது செய்யப்பட்ட 39 பேர் 22 லட்சத்து 43 ஆயிரம் ரூபாவும், மார்ச் மாதம் கைது செய்யப்பட்ட 29 பேர் 13 லட்சத்து 74 ஆயிரம் ரூபாவும், ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்ட 16 பேர் 6 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவும் தண்டப் பணமாகச் செலுத்தியுள்ளனர். (ஓ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி பறிப்பை மீள்பரிசீலனை செய்க

## அரசிடம் வலியுறுத்துகிறது தேசிய சமாதானப் பேரவை

கொழும்பு, மே.6

வடக்கில் தமிழர்களின் காணிகளை கையகப்படுத்துவது தொடர்பான அரசின் திட்டம் அவசர மீள்பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியிருக்கும் தேசிய சமாதானப் பேரவை, கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளுக்கமைய அரசு செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளது.

வடக்கில் தமிழர்களின் காணிகளை கையகப்படுத்தும் அரசின் செயற்பாடுகள் குறித்து தேசிய சமாதானப் பேரவை நேற்று அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, வடக்குத் தேர்தல் வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்காக சுமார் மூவாயிரம் குடும்பங்கள் முல்லைத்தீவை அண்டிய கிராமங்களான வண்ணார்குளம், ஊரடிக்குளம், பண்ணையண்டியகுளம், அக்கரைவெளி, வேதமடு, கமங்குளம், அமையங்குளம் ஆகிய இடங்களில் குடியமர்த்தப்படுகின்றன என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

யுத்ததால் பாதிக்கப்பட்ட மக்களின் காணிகளைக் கைப்பற்றும் அரசின் திட்டம், பாதிக்கப்பட்ட மக்களின் மத்தியில் அச்சத்தையும் கிளர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் விரைவில் அவர்களின் சொந்த இடங்களிலேயே மீள் குடியமர்த்தப்படுவர் என்று 2009 இல் யுத்தம் முடிவடைந்தவுடனேயே அரசு கூறியது. இதன் அடிப்படையில் பார்த்தால் தனியார் காணிகள், அவற்றின் சொந்தக்காரர்களிடம் வழங்கப்பட வேண்டும். இது அரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகளில் ஒன்றாகும்.




பொதுத் தேவைக்காக நிலத்தைக் கைப்பற்ற அரசு விரும்பினால் பாதிக்கப்படும் மக்களுடனும் அவர்களின் பிரதிநிதிகளுடனும் பேசுவதுதான் நாட்டில் உள்ள பொதுவான நடைமுறை. அத்தோடு நீதித்துறையின் ஊடான சட்ட ஏற்பாடுகளுக்கும் அவகாசம் வழங்கப்படும்.

ஆனால், நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசு அரசின் செயற்பாடுகளுக்கு எதிரானதாகவுள்ளது.

அத்தோடு வடக்கின் சிவில் நிர்வாகம் இராணுவ நிர்வாகத்தில் இருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்றும் பாதுகாப்புப் படையினரால் கைப்பற்றப்பட்டுள்ள தனியாரின் காணிகள் அவற்றின் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் நல்லிணக்க ஆணைக் குழு சிபாரிசு செய்துள்ளது.

ஆகவே, வடக்கில் பொதுமக்களின் காணியைக் கைப்பற்றும் தீர்மானத்தை அரசு மீள்பரிசீலனை செய்ய வேண்டும் என்று நாம் அரசைக் கேட்டுக்கொள்கிறோம். - இப்படி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### அஸாத் சாலி கைது;

# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டனம்

யாழ்ப்பாணம், மே.6



தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளர் அஸாத் சாலி கைது செய்யப்பட்டதற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

அஸாத் சாலி மட்டுமன்றி முஸ்லிம் மக்களுக்கு எதிரான மோசமான செயற்பாடுகளை நிரந்தரமாகத் தடுக்க முடியாத நிலையே காணப்படுகிறது என்று கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவரது அலுவலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ், முஸ்லிம் நிலைப்பாட்டில் பொதுவானதொரு நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். முஸ்லிம் மக்கள் தாம் சிறுபான்மையினம் என்ற சிந்தனையிலிருந்து விடுபட வேண்டும். தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் சிங்கள மக்களுக்குச் சமத்துவமானவர்களே. இந்த விடயத்தில் உரிய தீர்வை முஸ்லிம் தலைமைகள் முன்வைத்து நடந்தால் மாத்திரமே அவர்களுக்கு பாதுகாப்பும், சுயமரியாதையும் இருக்கும். - என்றார். (ங-4)

### லயன் எயாருக்குள் தங்கப் பல்



14 வருடங்களுக்கு முன் சுட்டு வீழ்த்தப்பட்ட லயன் எயார் விமானத்தின் பாகங்களை மீட்கும்போது மனிதர் ஒருவரின் தங்கப் பல்லும் கண்டு பிடிக்கப்பட்டது.

# அஸாத் சாலியை உடனடியாக விடுவிக்க ஹக்கீம் வலியுறுத்து

கொழும்பு, மே.6



கொழும்பு மாநகரசபையின் முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலி, உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். அஸாத் சாலி பயங்கரவாதியாக அல்லது பயங்கரவாதத்தை உருவாக்குபவராக இருந்தால் இவரை விட இன்னும் எத்தனையோ பேரை கைதுசெய்திருக்க வேண்டும். அஸாத் சாலி கைது செய்யப்பட்டமை வெட்கித்தலைகுனிய வேண்டிய ஒரு விடயம்- என்று தெரிவித்துள்ளார் நீதி அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம்.

வவுனியாவில் நேற்று நடைபெற்ற மு.கா. வட மாகாண புனரமைப்புக்கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

அரசில் நீதி அமைச்சராக இருக்கும் எனக்கு அரசு செய்யும் எல்லாவற்றிலும் உடன்பாடாக இருக்க முடியாது.

அஸாத் சாலி எமது கட்சியின் சார்பில் கடந்த கிழக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டவர். அந்தத் தேர்தல் மேடைகளில் கடிவாளம் இல்லாமல் பேசியபோது, அரசோடு முரண்பாடுகளை தோற்றுவிக்கின்ற வகையில் பேசுவதைத் தவிர்த்துக் கொண்டால் நல்லதென நான் அவரிடம் கூறியிருந்தேன்.

இருந்தாலும் அவரது அரசியல் செய்யும் பாணி அவ்வாறாக இருந்தபடியால் தேர்தல் முடிவுகளின் பின்பும் அவரது அரசியல் அவ்வாறே தொடர்ந்தது. ஆனால் அண்மைக் காலமாக முஸ்லிம்களுக்கு எதிராக சில தீவிரவாத அமைப்புகள் முன்னெடுத்த பிரசாரங்கள் இனமுறுகலை ஏற்படுத்த கூடியனவாக அமைந்தன. அந்தத்தருணத்தில் அஸாத் சாலியின் கருத்துகள் இலங்கை முஸ்லிம்களுக்கு பெரும் ஆறுதலாக இருந்தன.

என்ன குற்றத்துக்காக அஸாத் சாலி கைது செய்யப்பட்டார் என பொலிஸ் தரப்பில் இதுவரை சொல்லப்படாத நிலையில் அவரை கைதுசெய்து இருப்பது படுபாதகமான விடயமாகும்-என்றார். (ங-ரி)

# வைத்தியர்கள் இன்றுமுதல் தொழிற்சங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே.6

அரசில் பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் மற்றும் பதில் வைத்தியர்கள் ஆகியோர் இன்று முதல் தொடர் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

தமக்குரிய தொடர்பாடல் கொடுப்பனவு வழங்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே தாம் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும் உரிய தீர்வு கிடைக்கும் வரை தமது தொழிற்சங்க நடவடிக்கை தொடரும் எனவும் வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (ங-400)

# கவிழ்ந்தது சென்னை



மும்பை, மே.6

மும்பை அணிக்கு எதிரான போட்டியில், சென்னை அணி 60 ஓட்டங்களால் படுதோல்வியடைந்தது. நேற்றைய போட்டியில் 79 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்தது சென்னை அணி. ஐ.பி.எல். வரலாற்றில் அவ்வணி பெற்ற மிகக்குறைந்த ஓட்டமாக இது பதிவாகியது.

ஐ.பி.எல். தொடரின் 49ஆவது போட்டி நேற்று மும்பையில் நடந்தது. இதில் சென்னை, மும்பை அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வென்ற மும்பை அணித்தலைவர் ரோகித் சர்மா முதலில் துடுப்பெடுத்தாடுவதாக அறிவித்தார்.

இதன் படி துடுப்பெடுத்தாட களமிறங்கிய மும்பை அணி ஆரம்பத்திலேயே சரிவை சந்தித்தது. சச்சின் (15), ஸ்மித் (22) நீடிக்கவில்லை. பின்னர் வந்த பொலார்ட் (1), தினேஷ் கார்த்திக் (23) இருவரும் ஜடேஜாவின் சுழலில் சிக்கி வெளியேறினர். அடுத்து வந்த ராயுடு (10) அஷ்வின் சுழலில் சிக்கினார். அணியின் இக்கட்டை உணர்ந்து ரோகித் சர்மா, ஹர்பஜன் ஜோடி நம்பிக்கை அளித்தது. இறுதியில் மும்பை அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. ரோகித் சர்மா (39), ஹர்பஜன் (25) ஆட்டமிழக்காமல் இருந்தனர். சென்னை அணி சார்பில் ஜடேஜா 3, பிராவோ, அஷ்வின் தலா 1 இலக்குகளை வீழ்த்தினர்.

இலகுவான இலக்கை துரத்திய சென்னை அணிக்கு அதிர்ச்சியை கொடுத்தார் ஜோன்சன். முரளி விஜய் (2) ரெய்னா, பத்ரிநாத் ஆகியோர், ஓட்டமெதனையும் பெறாமலும் ஜோன்சனின் பந்தில் நடையைக்கட்டினர், அடுத்துவந்த பிராவோ (9), அஷ்வின் (2) நிலைக்கமுடியவில்லை..

ஓஜாவும் தனது சுழல் ஜாலத்தை காட்ட சென்னைக்கு அடிமேல் அடி விழுந்தது. மைக்கேல் ஹசி (22) டோனி (10) பெவிலியனுக்கு அனுப்பப்பட்டனர். முன்னணி வீரர்களை அடுத்தடுத்து இழந்து தவித்தது சென்னை. மோரிஸ் (1), மோகித் சர்மா (0) மலிங்கா வேகத்தில் விழ. ஜடேஜா 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க சென்னையின் ஆட்டமே முடிவுக்குவந்தது. இறுதியில் சென்னை அணி 15.2 பந்துப்பரிமாற்றங்களில் 79 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து படுதோல்வியடைந்தது.

60ஓட்டங்கள் [illegible] மும்பை அணி சார்பில் ஜோன்சன், ஓஜா தலா 3 இலக்குகளை [illegible] ஆட்டநாயகனாக மும்பை அணியைச் சேர்ந்த மைக்கல் ஜோன்சன் தெரிவானார். (ங-16)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேல் வான் தாக்குதல்

## சிரியாவின் ஆயுத நிலைகள் தகர்ப்பு

நியூயோர்க், மே 6
சிரியாவின் ஆயுத களஞ்சிய நிலைகளை இலக்கு வைத்து இஸ்ரேல் வான்வெளித் தாக்குதல்களை நடத்தியுள்ளது.
சிரியா மீது இஸ்ரேல் வான் வெளித் தாக்குதல்நடத்தியதை உறுதிப்படுத்தியுள்ள அமெரிக்கா, கடந்த வார இறுதியில் இரு தினங்கள் இந்த வான்வெளித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளது.



இஸ்ரேல் நடத்திய வான்வெளித் தாக்குதல்களால் தீப்பிழப் பாகக் காட்சியளிக்கும் வான்பரப்பு.

### உறுதிப்படுத்தியது அமெ.

"இஸ்ரேல் சிரியா மீது வான் வெளித் தாக்குதல்களை மேற்கொண்டதை உறுதிப்படுத்த முடிகின்றது. அந்தத் தாக்குதல்கள் சிரியாவின் ஆயுத களஞ்சிய நிலைகளை இலக்குவைத்தே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனினும் இரசாயன ஆயுத நிலைகளை இலக்காகக் கொண்டு அந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டனவா என்பது குறித்து உறுதியான தகவல்கள் எமக்குக் கிடைக்கவில்லை'' என்று அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்றனர்.
இதேவேளை, இது குறித்துக் கருத்துத் தெரிவிப்பதற்கு இஸ்ரேல் தூதரக செய்தித் தொடர்பாளர் ஆரோன் சகுய் மறுத்துவிட்டார். எனினும் "லெபனானைச் சேர்ந்த ஹிஸ்புல்லா பயங்கரவாதிகளுக்கு சிரிய ஜனாதிபதி பசார் அல் அசாத் ஆயுத உதவிகள் வழங்குவதை தடுக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வோம்'' என்று அவர் தெரிவித்தார்.

### இரசாயன ஆயுதங்கள்

இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்றுவரும் சிரிய உள்நாட்டுப் போரில் தற்போது சிரிய அரசால் இரசாயன ஆயுதங்கள் பிரயோகிக்கப்படுகின்றன என்று ரஷ்யா கடந்தவாரம் குற்றஞ்சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

## மின்பிறப்பாக்கி அதிர்வே விபத்துக்கு காரணம்

டாக்கா, மே 6
"அனுமதியின்றி இயக்கப்பட்ட மின்பிறப்பாக்கியின் அதிர்வுகளாலேயே வணிக வளாகம் இடிந்து வீழ்ந்துள்ளது'' என்று பங்களாதேஷ் வணிக வளாக முதற்கட்ட விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
கடந்தவாரம் இடம்பெற்ற இந்த விபத்துக் குறித்த விசாரணைக்காக அமைக்கப்பட்ட விசேட குழு தனது முதற்கட்ட விசாரணைகளை முடித்துள்ளது. முதற்கட்ட விசாரணை குறித்து அறிக்கையிட்டுள்ள அந்தக் குழு,
"வணிக வளாகத்தின் மாடிகளில் அனுமதி பெறாது மிகப் பெரிய மின்பிறப்பாக்கிகளை இயக்கியுள்ளனர். அதனால் ஏற்பட்ட அதிர்வுகள் மற்றும் ஆயிரக்கணக்கான தையல் இயந்திரங்களால் ஏற்பட்ட அதிர்வுகள் என்பனவற்றாலேயே கட்டடம் இடிந்து வீழ்ந்துள்ளது'' என்று தெரிவித்துள்ளது.
மீட்புப் பணிகள் தற்போதும் நடைபெற்றுவருவதால் விசாரணைகளின் இறுதி அறிக்கையைத் தயாரிக்க முடியாதுள்ளது என்று தெரிவித்துள்ள விசாரணைக்குழு, மீட்புப் பணிகள் நிறைவு பெற்றதும் இறுதி அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படும் என்றும் கூறியுள்ளது. (ற)



பங்களாதேஷ் தலைநகர் டாக்கா அருகே 8 மாடி வணிகவளாகம் கடந்த மாதம் 24ஆம் திகதி இடிந்து விழுந்தது. அந்த விபத்தில் 509 பேர் உயிரிழந்தனர். ஆயிரக்கணக்கானோர் காயமடைந்தனர்.



## இராணுவ ஆராய்ச்சி மையம் அருகே தாக்குதல் – சிரியா

டமாஸ்கஸ், மே 6
சிரிய இராணுவ ஆராய்ச்சி மையம் அருகே இஸ்ரேல் வான்வெளித் தாக்குதல்களை நடத்தியுள்ளது என்று சிரிய அரச தொலைக் காட்சி தெரிவித்துள்ளது.
தலைநகர் டமாஸ்கஸ் அருகே உள்ள இராணுவ ஆராய்ச்சி மையத்தின் அருகிலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டபோதும் அங்கு ஏற்பட்ட சேதங்கள் குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (ற)

## ஆப்கன் தாக்குதல்களில் 7 நேட்டோ வீரர்கள் சாவு

காபூல், மே 6
ஆப்கனில் இடம்பெற்ற தாக்குதல்களில் ஏழு நேட்டோ படையினர் உயிரிழந்துள்ளனர். தலிபான் தீவிரவாதிகள் நடத்திய இரண்டு தாக்குதல்களிலேயே அவர்கள் உயிரிழந்துள்ளனர்.
மேற்கு பாரா பிரதேசத்தில் ஆப்கான் படைவீரர் உடையில் இருந்த ஒருவர் திடீரென நேட்டோ படையினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். இந்தத் தாக்குதலில் இரண்டு நேட்டோ படையினர் உயிரிழந்தனர்.
அதற்கு முன்னர் கந்தஹார் மாநிலத்தில் வீதியோரக் குண்டு வெடித்ததில் ஐந்து அமெரிக்கப் படையினர் உயிரிழந்தனர்.
வெளிநாட்டுப் படையினரை இலக்கு வைத்து தலிபான்கள் அண்மைய நாள்களாக தீவிர தாக்குதல் நடத்தி வருகின்றனர். இந்த வாரம் அதிகளவில் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளது என்று நேட்டோ பேச்சாளர் ஜெனரல் குன்டர் காட்ஸ் தெரிவித்துள்ளார்.

> “வெளிநாட்டுப் படையினரை இலக்கு வைத்து தலிபான்கள் அண்மைய நாள்களாக தீவிர தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

ஆப்கனில் தொடர்ந்தும் 100, 000 த்திற்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் படையினர் நிலை கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)



கலிபோர்னியாவில் ஏற்பட்ட காட்டுத் தீ வேகமாக பரவி வருகின்றது. லொஸ்ஏஞ்சல்ஸின் வடமேற்குப் பகுதிகளில் 4 ஆயிரம் வீடுகளில் இருந்தவர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். காட்டுத் தீ காரணமாக, கடுமையான வெப்பம் மற்றும் புகைமூட்டம் ஏற்பட்டுள்ளது. தீயைக் கட்டுப்படுத்தும் பணிகள் இரவு, பகல் பாராது நடைபெற்று வருகின்றது.



## இராணுவம் அனுப்பும் தேவை ஏற்படவில்லை

### ஒபாமா கருத்து

வோஷிங்டன், மே 6
சிரியாவுக்கு அமெரிக்க இராணுவத்தினரை அனுப்ப வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என்று தாம் இதுவரை கருதவில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.
சிரியாவில் இடம்பெற்றுவரும் உள்நாட்டுப் போரில் அரசுக்கெதிராகப் போராடி வரும் கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்குவது குறித்து ஆராய்ந்து வருவதாக அமெரிக்க பாதுகாப்புச் செயலர் அண்மையில் கருத்து வெளியிட்டிருந்தார். இதுதொடர்பில் கருத்து வெளியிடும்போதே ஒபாமா மேற்கண்டவாறு கூறினார்.
"சிரிய அரசு பொது மக்களுக்கு எதிரான தாக்குதல்களில் இரசாயன ஆயுதங்களை பாவித்துள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம். எனினும் அதற்காக அமெரிக்க இராணுவத்தினரைத்தான் அங்கு அனுப்ப வேண்டும் என்று தாம் கருதவில்லை'' என்று அமெரிக்க ஜனாதிபதி குறிப்பிட்டார். (ற)

## தேர்தல் புறக்கணிப்பு

### முஷாரப் கட்சி முடிவு

இஸ்லாமாபாத், மே 6
எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவுள்ள பாகிஸ்தான் நாடாளுமன்றத் தேர்தலைப் புறக்கணிக்கப் போவதாக அறிவித்துள்ளது முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் தலைமையிலான அனைத்து பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி.
பல்வேறு குற்றச்சாட்டுகளின் கீழ் முஷாரப் கைது செய்யப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அந்தக் கட்சி மேலும் குறிப்பிட்டுள்ளது. (ற)

## பலஸ்தீனத்துக்கு 'கூகுள்' அங்கீகாரம்

நியூயோர்க், மே 6
பிரபல தேடல் இணையத்தளமான கூகுள், பலஸ்தீனத்துக்கு புதிய அங்கீகாரம் ஒன்றை வழங்கியுள்ளது.
இதுவரை காலமும் கூகுள் இணையத்தளத்தில் பலஸ்தீன் பிராந்தியம் என குறிப்பிடப்பட்டிருந்த சொற்பதம் தற்போது பலஸ்தீன் என்று மாற்றப்பட்டுள்ளது.



இதன் பிரகாரம் இனி வரும் காலங்களில் கூகுள் தேடல் இயந்திரத்தில் பலஸ்தீன் என்றே பதிவுகள் காணப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.
ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தரமற்ற பார்வையாளர் அந்தஸ்து என்ற நாடு பலஸ்தீனத்துக்கு வழங்கப்பட்டிருந்த நிலையில், கூகுளின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. சர்வதேச அரசியல் அரங்கத்தில் தாக்கம் செலுத்தும் ஒரு விவகாரமாக இது அமைந்துள்ளது என அரசியல் அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.
அமெரிக்காவும் இஸ்ரேலும் இதற்கு தொடர்ந்தும் எதிர்ப்பு வெளியிட்டுவரும் நிலையில், கூகுள் பலஸ்தீனத்துக்கு மீண்டும் ஓர் அங்கீகாரத்தை வழங்கியுள்ளது. (ற)

## மலேசிய வாக்குப்பதிவு விறுவிறுப்பாக ஆரம்பம்

கோலாலம்பூர், மே 6
மலேசிய நாட்டின் 13ஆவது நாடாளுமன்றத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.
நேற்றுக் காலை தொடங்கிய பொதுத்தேர்தலில், வாக்காளர்கள் நீண்ட வரிசைகளில் நின்று ஆர்வமுடன் வாக்களித்து வருகின்றனர்.
ஆளும் கட்சியும், எதிர்கட்சியும் கடும் பிரசாரங்களை மேற்கொண்ட போதிலும், கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக மலேசியாவில், ஆட்சி புரிந்து வரும் தேசியக் கூட்டணியை வீழ்த்துவது கடினம் என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். (ற)

## ரயில் விபத்து

### பெல்ஜியத்தில் இருவர் சாவு

புரூசெல்ஸ், மே 6
பெல்ஜியத்தில் இரசாயனப் பொருள்களை ஏற்றி வந்த ரயில் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. அதில் இருவர் உயிரிழந்தனர்.
நெதர்லாந்தில் இருந்து பெல்ஜியத்தின் ஜெண்ட் நகரை நோக்கி வந்து கொண்டிருந்த சரக்கு ரயிலே விபத்தில் சிக்கியது. ரயிலில் பல இரசாயனப் பொருள்கள் ஏற்றிவரப்பட்டன என்று கூறப்படுகிறது. தடம்புரண்ட ரயில் உடனேயே தீப்பிடித்து எரியத் தொடங்கியது. அதையடுத்து அதிலிருந்த இரசாயனப் பொருள்கள் வெடித்துச் சிதறத் தொடங்கின. அந்தப் பகுதியில் இருந்த மக்கள் உடனடியாகப் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர். தற்போது தீயை அணைத்து போக்குவரத்தை சீர்படுத்தும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொல்கத்தாவில் பாரதிய ஜனதா கட்சி தொண்டர்கள் பிரதமர் மன்மோகன் சிங் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி கோல் பவன் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# ஜார்கண்ட் சட்டசபைக்குத் தேர்தல்

## மத்திய அரசு திடீர் முடிவு

ஜார்கண்ட் மாநில சட்டசபையைக் கலைத்து விட்டு மத்திய அரசு, ஜார்கண்ட் மாநிலத்துக்கு எதிர்வரும் ஜூன் மாதம் தேர்தல் நடத்த ஆலோசித்து இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜார்கண்ட் மாநிலத்தில் கடந்த 18 ஆம் திகதி வரை பா.ஜ.க. மற்றும் ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சிகளின் கூட்டணி ஆட்சி நடைபெற்று வந்தது. பா.ஜ.கவை சேர்ந்த அர்ஜுன் முண்டா முதல்வராக இருந்தார். ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சியை சேர்ந்த ஹேமந்த் அப்போது துணை முதல்வராக இருந்தார்.

'முதல்வர் பதவியை விட்டுத் தரக் கேட்டு, ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா கெடு விதித்தது.

இதனை பா.ஜ.க. ஏற்கவில்லை. இதைத் தொடர்ந்து அரசுக்கு அளித்து வந்த ஆதரவை ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா விலக்கிக் கொண்டது. முதல்வர் பதவியை ராஜினாமாச் செய்த அர்ஜுன் முண்டா, சட்ட சபையையைக் கலைக்க பரிந்துரை செய்தார். முதல்வர் ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஜனாதிபதி ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், சட்டபேரவை கலைக்கப்படவில்லை.

ஜனாதிபதி ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டு 3 மாதங்கள் ஆகியும் வேறு எந்தக் கட்சியும் ஆட்சி அமைக்க உரிமை கோர வில்லை. சட்டசபையைக் கலைத்து விட்டு, ஜார்கண்ட் மாநிலத்துக்கு உடனடியாகத் தேர்தல் நடத்த வேண்டும் என்கிற பா.ஜ.க. கோரிக்கைதான் தற்போது நிறைவேற உள்ளதாகத் தெரிய வருகிறது. அதன்படி, சட்டசபையைக் கலைத்து விட்டு எதிர்வரும் ஜூன் மாதம் ஜார்கண்ட் மாநிலத்துக்கு தேர்தல் நடத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

அடுத்த வாரத்தில் நடைபெற உள்ள மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் இது குறித்து ஆலோசித்து முடிவுஎடுக்க உள்ளதாகவும் தெரிய வருகிறது. (வ)

### மருத்துவமனையில் சௌந்தரராஜன்



சென்னை, மே.6

பழம்பெரும் பின்னணிப் பாடகர் ரி.எம். சௌந்தரராஜன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சென்னையில் வசித்து வரும் பழம்பெரும் பின்னணி பாடகர் ரி.எம். சௌந்தராஜனுக்கு நேற்று முன் தினம் காலை திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டது.

அதையடுத்து, சென்னையில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (வ)

### ஜம்மு சிறையில் தாக்கப்பட்டார் பாக்.கைதி

ஜம்மு சிறையில் அடைக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் கைதி மீது கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

50 இற்கும் மேற்பட்ட பாகிஸ்தான் கைதிகள் குறித்த சிறையில் அடைக் கப்பட்டுள்ளனர். அவர்களில் சனாவுல்லா ஹக் என்பவரும் ஒருவர். நேற்றுமுன்தினம் காலை கோட் பல்வால் சிறை கைதிகளுடன் ஏற்பட்ட மோதலில் சனாவுல்லா ஹக், சக கைதிகளால் தாக்கப்பட்டார். அதனையடுத்து, அவரை சிறை அதிகாரிகள் ஜம்மு அரச மருத்துவ கல்லூரி வைத்திய சாலையில் சேர்த்துள்ளனர்.

# தண்டனையை குறையுங்கள்

## மன்மோகனிடம் தி.மு.க. வலியுறுத்து




டில்லி, மே 6

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் தண்டனையைக் குறைக்கப்பட வேண்டும் என்று பிரதமர் மன் மோகன் சிங்கை சந்தித்து தி.மு.க. வலி யுறுத்தியுள்ளது.

நாடாளுமன்ற தி.மு.க. குழு தலைவர் டி.ஆர். பாலு தலைமையில் அந்தக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று முன்தினம் சந்தித்து அளித்த மனுவில் தெரிவித்திருப்பதாவது: -

தூக்குத் தண்டனை நாகரிக சமுதாயத்தின் உயர்ந்த பண்புகளை பிரதி பலிப்பதாக இல்லை. எனவே, தூக்குத் தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்று தி.மு.கவும் அதன் தலைவர் கருணாநிதியும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இம்மாதம் முதலாம் திகதி உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு ஒன்றில், மகேந்திர நாத் தாஸ் மரண தண்டனை குறித்த கருணை மனு 11 ஆண்டுகளுக்குப் பின் ஜனாதிபதியால் நிராகரிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டி மரண தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைத்து உத்தரவிட்டது.

மகேந்திரநாத் தாஸ் மரண தண்டனை வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பின்படி, முருகன், சாந்தன் மற்றும் பேரறி வாளன் ஆகியோரது மரண தண்டனை, மனிதாபிமான அடிப்படையில் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட வேண்டும்.

இதற்காக மத்திய அமைச்சரவை தீர்மானம் நிறைவேற்றி ஜனாதிபதிக்கு அனுப்ப வேண்டும்-என்றுள்ளது.

இதேவேளை மனுவைப் பெற்றுக் கொண்ட பிரதமர் மன்மோகன் சிங், 'உங்கள் உணர்வுகளை புரிந்து கொண்டேன். இந்த பிரச்சினையில் ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின்னர் அரசு உரிய முடிவு எடுக்கும் என்று தங்களிடம் தெரிவித்ததாக டி.ஆர். பாலு கூறினார். (வ)

# 'ஜெ' இன் குற்றச்சாட்டை நிராகரித்தார் கருணாநிதி

சென்னை, மே 6

கச்சதீவின் உரிமத்தை இந்தியா இலங்கைக்கு வழங்கியமைக்கு நான் உதவி செய்ததாகக்கூறிய தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் குற்றச்சாட்டைநிராகரித்துள்ளார் தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி.



முதலமைச்சர் ஜெயலலிதா சட்டசபையில் தெரிவித்த கருத்துகளுக்கு விளக்கம் அளிக்கும் வகையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கையிடம் இருந்து கச்சதீவின் உரிமத்தை இந்தியா மீளப்பெற வலி யுறுத்தி தமிழக சட்டசபையில் தீர்மானம் ஒன்று நிறை வேற்றப்பட்டது.

அதன்போது உரையாற்றிய முதல்வர் ஜெயலலிதா, கச்சதீவின் அதிகாரத்தை இலங்கைக்கு கையளிப்பதற்கு கருணாநிதி மத்திய அரசுடன் ஒத்துழைத் ததாக தெரிவித்திருந்தார். எனினும் இதனை மறுத்துள்ளகருணாநிதி, 40வருடங்களுக்கு முன்னர் கச்சதீவின் அதிகாரத்தை இந்தியா இலங்கைக்கு வழங்கும் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட மறுநாள், தாம் இந்த விடயத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த நாள்களில் பிரதமராக இருந்த இந்திரா காந்திக்கு கடிதம் எழுதி இருந்தாக தெரிவித்துள்ளார் -என்றுள்ளது. (வ)

# ஜனாதிபதிக்கு விளக்கமளித்தார் பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி

## சீனாவின் ஊடுருவல் குறித்து

டில்லி, மே 6

லடாக் பகுதியில் சீன இராணுவம் ஊடுருவல் குறித்தும் அது தொடர்பில் மத்திய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகுறித்தும் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியிடம் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி சந்தித்து விளக்கம் அளித்தார்.



காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் சீன இராணுவம் 19கி.மீ. தூரம் ஊடுருவி வந்து முகாம்கள் அமைத்துள்ளன. அதைஅங்கிருந்து வெளியேற்ற இந்தியா நடத்திய பேச்சில் பலன் ஏற்படவில்லை.

சீன இராணுவம் பிடிவாதமாக அங்கிருந்து வெளியேற மறுத்து வருகிறது. இந்த நிலையில், சீன இராணுவ ஊருவலை முறியடிக்குபடி, தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சி தலைவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை பா.ஜ. மூத்த தலைவர் அத்வானி தலை மையில் ஜனாதிபதியை சந்தித்து வலியுறுத்தினர்.

அதைத்தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினார். அப்போது, சீன இராணுவம் ஊடுருவல் பிரச்சினையால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையைச் சமாளிக்க மத்திய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை பிரணாப்பிடம் அந்தோனி விரிவாக விளக் கமளித்துள்ளார். (வ)

# சீனப் பொருள்களை வாங்க வேண்டாம்

## நடிகர் அரவிந்த்சாமி வேண்டுகோள்

சென்னை, மே 6

சீனப் பொருள்கள் எதையும் இந்தியர்கள் வாங்கக்கூடாது என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் நடிகர் அரவிந்த்சாமி.

இந்திய எல்லைப்பகுதியான லடாக்கில் 19 கி.மீ. தூரம் அத்துமீறி ஊடுருவியுள்ளது சீனப் படை. டில்லி மாநிலத்தின் பாதிப் பரப்பளவுக்கு இணையான பகுதி இது. இது பெரும் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்திய பிரபலங்கள் இதுகுறித்து தங்கள் கோபத்தை வெளிப்படுத்தி வருகின்றனர். தமிழ் நடிகர்களில் அரவிந்த் சாமி சீனாவுக்கு எதிராக தனது கண்டனங்களைப் பதிவு செய்துள்ளார்.

[illegible]

[illegible] யும் செய்யாமல் அமைதியாக பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் நாம் அப்படி இருக்க முடியாது.

இனி சீனாவிலிருந்து வரும் எந்தப் பொருளையும் நாம் வாங்கக் கூடாது என்று தெரிவித்துள்ளார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலுணவுக்கு கிராக்கி

## குடாநாட்டில் நிலவும் கடும் வெப்பத்தால்

யாழ்ப்பாணம், மே 6

யாழ்.குடாநாட்டில் கடலுணவுகளுக்குப் பற்றாக்குறை நிலவுவதால் திடீரென அதற்குக் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

தற்போதைய கடும் வறட்சி, வெப்பம் போன்ற காலநிலை மற்றும் கடல் வளத்தின் பெருக்கம் அருகிச் செல்வதாலும் இவ்வாறு கடலுணவுக்களுக்கான பற்றாக்குறை ஏற்படுவதற்கு முக்கிய காரணங்கள் என்று கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

நகரை அண்டிய மீன் சந்தைகளில் நேற்று கடலுணவுகள் போதியளவு வந்து சேராததால் கடலுணவுகளின் விலை மும்மடங்காக அதிகரித்துக் காணப்பட்டது.

பாஷையூர், கொட்டடி, குருநகர், நாவாந்துறை, கொழும்புத்துறை போன்ற மீன் சந்தைகளிலேயே கடலுணவுகளின் வருகையில் மிக வீழ்ச்சி ஏற்பட்டிருந்ததால் அவற்றுக்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டது.

இந்த நிலையில் நேற்றைய கடலுணவுகளின் சந்தை நிலவரத்தின் படி

| | |
|---|---|
| மீன் கிலோ- | 700 ரூபா |
| கணவாய் கிலோ | 800 ரூபா |
| இறால் கிலோ | 600 ரூபா |
| நண்டு கிலோ | 650 ரூபா |
| திருக்கை கிலோ | 400 ரூபா |

என்ற விலையில் விற்பனையாகின. (வ-17)



# பிள்ளைநேயப் பாடசாலை செயற்பாடு குறித்த சுற்றுலா

## யுனிசெப் ஏற்பாட்டில்

தென்மராட்சி, மே 6

ஆரம்பப் பிரிவில் முன்னிலை காணப்படும் கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் உள்ள பிள்ளைநேயப் பாடசாலைகளின் செயற்பாட்டு அணுகுமுறைகள் தொடர்பான கல்விச் சுற்றுலா ஒன்று யுனிசெப் நிறுவனத்தால் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் பிள்ளைநேயப் பாடசாலைகளின் ஆசிரியர்கள், அதிபர்கள், ஆரம்பப் பிரிவு முதன்மை ஆசிரியர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர் அடங்கிய 50 பேர் கொண்ட குழுவினர் நான்கு நாள்கள் கல்விச் சுற்றுலாவுக்காக நேற்று முன்தினம் புறப்பட்டுச் சென்றனர்.

அந்தக் குழுவினர் கிழக்கு மாகாணத்தில் சம்மாந்துறை கல்வி வலயத்துக்கும் ஊவா மாகாணத்தின் பதுளை கல்வி வலயத்துக்கும் சென்று பிள்ளைநேயப் பாடசாலைகளின் செயற்பாடுகள் மற்றும் தகவல் பரிமாற்றங்கள் தொடர்பாகப் பார்வையிடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# சாரதி தூக்கம்; கைதடியில் விபத்து



கைதடி, மே 6

வேகமாக வந்த 'ஹைஏஸ்' வாகனம் சாரதியின் திடீர் தூக்கத்தினால் பாதையை விட்டு விலகி பள்ளத்தில் பாய்ந்தது.

இந்தச் சம்பவம் கைதடி சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலைக்கு முன்பாக நேற்றுக்காலை 6.30 மணியளவில் இடம்பெற்றது.

புத்தளத்தில் இருந்து ஐந்து பேருடன் வந்த இந்த வாகனம் சாரதியின் நித்திரை காரணமாக கட்டுப்பாட்டை இழந்து பாதையை விட்டு விலகி பள்ளத்தில் இறங்கி சிறிது தூரம் சென்று சரிந்திருந்த மின்சாரக் கம்பம் ஒன்றுடன் மோதி நின்றது.

வாகனம் பலத்த சேதமடைந்ததுடன் அதில் பயணித்த பெண் ஒருவரும் தலையில் காயமடைந்தார். தெய்வாதீனமாக உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

வீதியால் சென்ற பொதுமக்களும் கைதடி சித்த ஆயுள்வேத போதனா வைத்தியசாலை ஊழியர்களும் பலத்த சிரமங்களின் மத்தியில் பயணிகளை மீட்டெடுத்தனர்.

சம்பவ இடத்துக்கு உடனடியாக வந்த சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (ஒ-288)

# தென்மராட்சி விபத்துக்களில் 3 பேர் காயம்

தென்மராட்சி, மே 6

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் காயமடைந்த மூவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மீசாலைப் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் நல்லூர் பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த திருநாவுக்கரசு குமரேசன் (வயது-26), மீசாலை கிழக்கைச் சேர்ந்த புவனேந்திரன் குபேரன் (வயது-20), கொடிகாமத்தில் மோட்டார் சைக்கிளால் வீழ்ந்ததாக எருவனைச் சேர்ந்த முருகையா பாரதிதாசன் (வயது-30) என்பவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு தி.குமரேசன், மு.பாரதிதாஸன் ஆகிய இருவரும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (வ-9)

# மன்னார்- முல்லைத்தீவு தனியார் பஸ் சேவை

## இன்று முதல் ஆரம்பம்

மன்னார், மே.6

மன்னாரில் இருந்து முல்லைத்தீவுக்கான தனியார் போக்குவரத்துச் சேவை ஒன்று இன்று திங்கட்கிழமை முதல் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் தலைவர் தர்மலிங்கம் ரமேஸ் தெரிவித்தார்.

பரந்தன் ஊடான பாதை மூடப்பட்டிருந்த காரணத்தினாலும் வீதியின் மோசமான நிலை காரணமாகவும் பஸ் சேவையை மேற்கொள்ள முடியாத நிலை நீண்டகாலமாக நீடித்தது.

எனினும் மக்களின் நலனையும், அவர்கள் தொடர்ந்தும் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகளையும் கருத்தில் கொண்டு மன்னார் தனியார் போக்குவரத்துச் சங்கம் இன்று திங்கட்கிழமை முதல் குறித்த புதிய சேவையை ஆரம்பிக்கவுள்ளது.

> மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்தில் இருந்து காலை 5.45 மணிக்கு முல்லைத்தீவு நோக்கிப் புறப்படும் குறித்த பஸ் முழங்காவில், பூநகரி, பரந்தன், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு ஊடாக முல்லைத் தீவைச் சென்றடையும்.

மன்னார் தனியார் பஸ் தரிப்பிடத்தில் இருந்து காலை 5.45 மணிக்கு முல்லைத்தீவு நோக்கிப் புறப்படும் குறித்த பஸ் முழங்காவில், பூநகரி, பரந்தன், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு ஊடாக முல்லைத் தீவைச் சென்றடையும்.

மீண்டும் முல்லைத்தீவில் இருந்து பிற்பகல் 1.45 மணியளவில் குறித்த பஸ் இதே பாதைகளினூடாக மன்னாரை வந்தடையும்.

இந்த பஸ் சேவை ஆசிரியர்கள், மாணவர்கள், பொது மக்கள் உட்பட அனைவரதும் நலன் கருதியும் உரிய நேரத்துடன் பயணங்களை தொடர்வதற்காக ஆரம்பிக்கப்படுகிறது என்றும் அவர் தெரிவித்தார். இதேவேளை குறித்த பாதைகளினூடாக எந்தவித அரச போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-12)

# டக்ளஸுக்கு எதிரான பிரசுரங்கள் கிளிநொச்சியில் நேற்று விநியோகம்

கிளிநொச்சி, மே 6

போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு எதிரான துண்டுப் பிரசுரங்களை நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் மக்கள் மத்தியில் விநியோகித்தது.

இது தொடர்பாக போரால் பாதிக்கப்பட்ட மக்கள் இயக்கத்தின் தலைவர் வி.சகாதேவனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது; ''அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டு வரும் செயற்பாடுகளுக்கு எதிராகவும் மக்களை விழிப்பூட்டும் வகையிலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் எனது தலைமையில் துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துள்ளோம். ஏனைய இடங்களில் எமது ஆதரவாளர்கள் வழங்கி வருகின்றனர் எனத் தெரிவித்தார்.

துண்டுப்பிரசுரத்தில் காணப்பட்ட வாசகங்கள் வருமாறு:-

★மகேஸ்வரிநிதியத்தினால் கடந்த 04 வருடங்களில் மண்கொள்ளை மூலமாகப் பொதுமக்களின் 4,000 மில்லியன் ரூபா பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

★2009இல் வடபகுதி மக்களின் கடலுணவு, விவசாயப் பொருள்களை கொழும்புக்கு அனுப்பிய போதும், அத்தியாவசியமான பொருள்களை கொழும்பிலிருந்து [illegible] கோடிக்கணக்கான பணம் கப்பமாகப் பெறப்பட்டுள்ளது.

★1995 இலிருந்து இன்று வரை தமிழர்களின் பாரம்பரிய பூமியில் இடம்பெறும் அடாவடித்தனங்களுக்கு அமைச்சரே பொறுப்பு கூற வேண்டும்.

★தமிழர் பகுதியில் நடைபெறும் கலாசார சீரழிவுகளுக்கும் அமைச்சர் பதில் கூற வேண்டும்.

★தமிழனைத் தனது சொந்த மண்ணில் தலைநிமிர்ந்து வாழவைக்க வக்கற்ற அமைச்சர் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும்.

★மண் வியாபாரத்தை நம்பி வாகனம் வாங்கிய உழவு இயந்திர உரிமையாளர்களுக்கும், [illegible] உரிமையாளர்களுக்கும், வருமானம் இல்லை. மக்களுக்குப் போட்டியாக நடத்தும் தொழில்களை அமைச்சர் கைவிட வேண்டும்.

★நம்பி வந்த இளைஞர்களை நடுத்தெருவில் விட்ட அமைச்சர் நாட்டை விட்டு வெளியேற வேண்டும்.

★தமிழ் மக்களை தொடர்ந்து பயப்பீதியில் வைத்திருக்கும் டக்ளஸ் தேவானந்தாவை விரட்டியடிப்போம்.

★தமிழ் மக்களுக்கு நடக்கும் அநீதிகளுக்கு துணைபோகும் டக்ளஸ் தேவானந்தாவே நாட்டை விட்டு வெளியேறு.

★புலிகள் இருந்தபோது மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற வீர வசனம் பேசினார் அமைச்சர். இப்போது மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் என்ன ஆட்சி? கொள்கையை என்ன விலைக்கு விற்றீர்?

தமிழ் மக்களுக்கு எதிரான அநீதிகளை ஒவ்வொன்றாக முறியடிப்போம்....! சாத்தானை விரட்டியடிப்போம்...!!

முதல் கட்டமாக வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் இடம்பெறும் டக்ளஸின மண்கொள்ளைக்கு எதிரான போராட்டத்துக்கு அனைவரும் அணிதிரள்வோம், தமிழ் மக்களைப் பயப்பீதியிலிருந்து மீட்டெடுப்போம்.

அமைச்சரின் அராஜக ஆட்சி ஒழிக! அதிகார துஷ்பிரயோகம் ஒழிக!! ஊழல் ஆட்சி ஒழிக!!! என்பனவே அவையாகும். (க-12)

# வடமராட்சிக்கு இரு ஐ.தே.க. அமைப்பாளர்கள்


வடமராட்சி, மே 6

ஐக்கிய தேசியக் கட்சியின் பருத்தித்துறைத் தொகுதி அமைப்பாளராக கற்கோவளத்தைச் சேர்ந்த வே.அருட்செல்வனும், உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளராக துன்னாலை தெற்கைச் சேர்ந்த சதானந்தம் கிருபைராசாவும் கட்சித் தலைமைப் பீடத்தினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரன் தலைமையிலான ஐ.தே.க. யாழ்.மாவட்ட செயற் குழுவிலும் அங்கம் வகித்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்முனை மாநகர முதல்வர் சிராஸ்ஸின் பிரத்தியேக செயலர் வீட்டின் மீது தாக்குதல்



கல்முனை,மே 6
கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப்பின் பிரத்தியேக செயலர் ஏ.எல்.எம். இன்சாதின் வீட்டின் மீது கல் வீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 9.45 மணிக்கு இடம் பெற்றுள்ளது.

சாய்ந்தமருது-11, ஹாஜா வீதியில் அமைந்துள்ள அவரின் வீட்டின் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதல் காரணமாக வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து நொருங்கியுள்ளன.

இதன்போது அவரும், அவரது மனைவி,பிள்ளைகளும் வீட்டில் இருந்த போதிலும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

சம்பவத்தைத் தொடர்ந்து அங்கு சென்ற கல்முனைப் பொலிஸார், முதல்வர் சிராஸ் மீராசாஹிப்பின் பிரத்தியேக செயலர் ஏ.எல்.எம்.இன்சாதிடம் வாக்கு மூலம் பெற்றுக் கொண்டதுடன், விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர். (ச)

# காணி பறிப்புக்கு இடையூறாக இருக்கும் பிரதேச செயலர்களுக்கு நெருக்கடி

## மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்கிறது

மட்டக்களப்பு,மே 6
மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் மக்களின் காணிகளை அபரிக்கும் நோக்கத்திலும், அதற்கு எதிராக இருக்கும் பிரதேச செயலர்களை இடமாற்றும் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன என்று தகவல்கள் தெரிவிக்கின்றன

மட்டக்களப்பு மாவட்டத்தில் காணி அபகரிக்கப்படும் இடங்களில் முதல் இடத்தில் உள்ள ஆரையம்பதி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலர் வாசுகி அருள்ராஜாவை அங்கிருந்து அப்புறப்படுத்தும் பணியில் காத்தான்குடியை சேர்ந்த அரசியல்வாதியொருவர் ஈடுபட்டுள்ளார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த காலத்தில் ஆரையம்பதியின் பல பிரதேசங்களில் உள்ள தமிழ் மக்களுக்கு சொந்தமான காணிகளை அபகரிக்கும் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குறித்த பிரதேச செயலரை இடமாற்றவேண்டாம் என்று ஆரையம்பதியில் உள்ள பொது அமைப்புகள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மாவட்ட அரச அதிபருக்கு மனுக்களை அனுப்பியுள்ளன.

ஆரையம்பதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் தொடர்ச்சியான நில அபகரிப்பு மற்றும் திட்டமிட்ட குடியேற்றங்கள் காரணமாக ஆரையம்பதி பிரதேச செயலகமும், முஸ்லிம் பிரதேச செயலகமாக எதிர்காலத்தில் மாறக்கூடிய அபாய நிலை தோன்றியுள்ளது என்று கிராம அபிவிருத்தி சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

அதன் காரணமாக எதிர்காலத்தில் இந்தப் பகுதியில் தமது சந்ததிகளுக்கு நிலம் பெறமுடியாத நிலையில் முற்றாக முஸ்லிம் பிரதேசமாக மாற்றப்பட்டு காத்தான்குடியுடன் இணைக்கும் வகையில் இவ்வாறான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஏற்கனவே கிரான் பிரதேச செயலகப் பிரிவில் காணி அபகரிப்புச் செய்ய முற்பட்ட போது அங்கிருந்த பிரதேச செயலர் வவுணதீவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார். அந்தப் பகுதியில் தற்போது தாராளமாக காணி அபகரிப்பு இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறான நிலையில் ஆரையம்பதி பிரதேச செயலகத்தின் பிரதேச செயலர் இடமாற்றம் செய்யும் நிலையேற்பட்டால் அதனைத் தடுப்பதற்காக போராட்டங்களை நடத்துவோம் என்று ஆரையம்பதி பிரதேச மக்கள் தெரிவித்தனர். (ச)

## நீரில் மூழ்கி மாணவன் சாவு

அம்பாறை,மே 6
அம்பாறை, நாவிதன்வெளிப் பிரதேசத்தின் மத்தியமுகாம் கிராமத்திலுள்ள வாய்க்கால் நீரோடையில் குளிக்கச் சென்ற மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான்.

கல்முனை, பாண்டிருப்பைச் சேர்ந்த கனகநாயகம் வினோஜ் (வயது-18) என்னும் மாணவனே நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

நீர்மட்டம் அதிகரித்ததனால் அவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார் என்று மத்தியமுகாம் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## பொலிஸாரின் ஜீப்புக்கு கல் எறிந்தோர் கைது

மட்டக்களப்பு,மே 6
இலங்கை இளைஞர் நாடாளுமன்றத் தேர்தலின் போது அட்டாளைச்சேனை பிரதேசத்தில் அமைதியின்மை ஏற்படுத்திய இரு இளைஞர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அட்டாளைச்சேனை பிரதேசத்தில் குழப்பநிலை ஏற்பட்டுள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.


சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸாரின் ஜீப் வாகனம் மீது குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள் கற்களைக் கொண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)




மூதூர் மக்கள் அபிவிருத்தி ஒன்றியத்தின் பெண்கள் பிரிவின் ஏற்பாட்டில் பெண்கள் மட்டும் கலந்து கொண்ட இரத்ததான முகாம் மூதூர் அல் ஹிதாயா மகாவித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் மக்கள் அபிவிருத்தி ஒன்றியத்தின் சுகாதாரப் பிரிவுப் பொறுப்பாளர் என்.எம்.நஸ்றொத், மக்கள் அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் ஆர்.எம்.றிபான், மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லால் உடுகம உட்பட பலர் கலந்து கொண்டனர். (40)

## நற்பிட்டிமுனையில் நூலகம் எரிப்பு



நற்பிட்டிமுனை சிவசக்தி வித்தியாலயத்துடன் இணைந்ததாகச் செயற்பட்டு வந்த நூலகமொன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அதிகாலை 3 மணிக்கு எரிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள நூல்கள் மற்றும் தளபாடங்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகியுள்ளன. அதில் ஏற்பட்ட நட்டம் 3 லட்சம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் கல்முனை பொலிஸாருக்கு அறிவித்ததுடன் நிலைமையையும் பார்வையிட்டார்.

அதனையடுத்து கல்முனைப் பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ. டபிள்யூ. அப்துல் கபார் தலைமையிலான குழுவினர் அங்கு சென்று தடங்களைப் பெற்றதுடன் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச)

# பொத்துவில் பட்டதாரிகளுக்கும் ஆசிரியர் நியமனம் வழங்குக

## இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கோரிக்கை

பொத்துவில்,மே 6
வெட்டுப்புள்ளியைக் குறைத்து அம்பாறை, பொத்துவில் பட்டதாரிகளுக்கும் ஆசிரியர் நியமனத்தை வழங்குமாறு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் கிழக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரமவுக்கு இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் அனுப்பி வைத்துள்ள மனுவி லேயே இவ்வாறு வேண்டு கோள் விடுக் கப்பட்டுள் ளது.

இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
கடந்த ஏப்ரல் மாதம் நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைவாக மிக விரைவில் பட்டதாரி ஆசிரியர் நியமனம் வழங்கப்படவுள்ளமை தாங்கள் அறிந்த விடயமாகும்.

அம்பாறை மாவட்டத்தில் ஏழு பேர் மாத்திரமே நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். 45 பேருக்கும் அதிகமானோர் விண்ணப்பித்திருந்த பொத்துவில் கல்விக் கோட்டத்திலிருந்து ஒருவர் மாத்திரமே அழைக்கப்பட்டிருந்தார். இதனால் ஏனைய 44 விண்ணப்பதாரிகளும் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர். இக்கல்விக் கோட்டத்தில் 96 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக அண்மையில் கிழக்கு மாகாண சபையால் எடுக்கப்பட்ட தீர்மானமானது பொத்துவில் கல்விக் கோட்ட பட்டதாரிகளின் ஏமாற்றத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றது.

[illegible] மாவட்டத்துக்கு வழங்கி விட்டு அங்கு தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை பொத்துவிலுக்கு இடமாற்றுவதன் மூலம் இந்த வெற்றிடங்களை நிரப்பமுடியும்'' என்பதே அந்தத் தீர்மானமாகும்.

திருகோணமலை மாவட்டத்தில் தற்போது பணிபுரியும் ஆசிரியர்கள் அனைவரும் கல்முனை வலயத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் அவர்கள் பொத்துவிலுக்கு நியமிக்கப்பட்டாலும் மீண்டும் தமது சொந்தப் பிரதேசத்துக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் போது பொத்துவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் வெற்றிடங்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கும் .-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

**கடை வாடகைக்கு**

யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகில் சேர் பொன். இராமநாதன் வீதியில் இலக்கம் 228 இல் அமைந்துள்ள கடைத் தொகுதியில் அமைந்த கடை ஒன்று குறைந்த வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு:077 783 3807
(37159)(6-11)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் பெண் காயம்

யாழ்ப்பாணம், மே 6

மோட்டார் சைக்கிளும் ஒட்டோவும் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளம் பெண் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் சுன்னாகம் பகுதியில் இடம்பெற்றது. மருதனார்மடத்தில் இருந்து சுன்னாகம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிளும் சுன்னாகத்திலிருந்து கே.கே.எஸ். வீதி ஊடாக வந்த ஓட்டோவும் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த துரைசிங்கம் தர்சனா (வயது-21) என்பவர் காயமடைந்து தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டனர். (ம-14-36)



பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு நெல்லியடி வட்டா லயன்ஸ் கழகம் கணினி உபகரணங்களை அன்பளிப்புச் செய்துள்ளது. இதற்கான கையளிப்பு நிகழ்வு வட்டா லயன்ஸ் கழகத் தலைவர் எஸ்.யோகேந்திரநாதன் தலைமையில் நடைபெற்றபோது, லயன்ஸ் கழக உறுப்பினர்களான லயன் எஸ்.ஞானராஜ் ஆகியோர் இணைந்து வைத்தியசாலை அத்தியட்சகர் நா.விநோதன், இரத்த வங்கிப் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.வாசுதேவன் ஆகியோரிடம் கணினி உபகரணங்களைக் கையளித்தனர். (ஓ-8)

## அரியாலை கிழக்குப் பிரதேச வீதிகளைத் திருத்தத் திட்டம்

யாழ்ப்பாணம், மே.6

அரியாலை கிழக்குப் பிரதேசத்தில் அநேகமான வீதிகளைப் புனரமைக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று நல்லூர் பிரதேச சபையில் உறுப்பினர் அ.இரவீந்திரதாசன் தெரிவித்தார்.

பூம்புகார், உதயபுரம், நாவலடி போன்ற பகுதிகளில் உள்ள அநேகமாக உள்ளக வீதிகள் இவ்வாறு புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

பூம்புகார் முதலாம் குறுக்கில் இருந்து 13 ஆம் குறுக்கு வரையான உள்ளக வீதிகள் புனரமைக்கபடவுள்ளது.

இந்த வீதிகள் தற்போது கிரவல் மண் வீதியாக காணப்படுகின்றன.

இவற்றை தார் வீதியாக புனர்நிர்மானம் செய்யும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனைவிட உதயபுரம் பகுதியில் உள்ள அனேகமான வீதிகள் புரமைப்பு இன்றி காணப்படுகின்றன.

இந்த வீதிகளை புனரமைப்பு செய்யப்படாமையா வீதியால் பயணிக்கும் மக்கள் சிரமப்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக மணியந்தோட்டச் சந்தியில் இருந்து உதயபுரம் நோக்கிச் செல்லும் பிரதான வீதி பெரும் சேதப்பட்ட நிலையில் உள்ளது.

இந்தப் பிரதேசத்தில் உள்ளக வீதிகளும் சேதப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

இந்த வீதிகள் தற்போது தார் வீதியாக மாற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மேலும் கூறினார்.(ம-17)

## தொழில்நுட்ப உலகில் வாசிப்பு வெறும் பூச்சியமாகிள்ளது

### நூல் வெளியீட்டு நிகழ்வில் உரை



யாழ்ப்பாணம்,மே 6

''தொழில்நுட்ப உலகில் வாசிப்பு என்பது பூச்சியம் ஆகிவிட்டது. அனைத்தும் இலத்திரனியல் தொழில்நுட்பமயப்படுத்தப்பட்ட பின்னர் தேடல் என்பது குறைவடைந்து விட்டது'' இவ்வாறு யாழ். பொதுசன நூலகத்தின் முன்னாள் பிரதம நூலகர் எஸ். தனபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

உலக புத்தக தினத்தை முன்னிட்டு யாழ். மாநகர சபையின் பொதுசன நூலகத்தினால் ''தகவலை நோக்கிய வலையின் வீசல்கள்'' என்ற நூல் கடந்த செவ்வாய்க்கிழமை வெளியிடப்பட்டது. பொதுசன நூலகர் சி.என்.எச். சாள்ஸ் இன் தொகுப்பில் வெளிவந்த இந்த நூல் வெளியீட்டு நிகழ்வு பொதுசன நூலகக் கேட்போர் கூடத்தில் திருமதி இமெல்டா கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது. அங்கு உரையாற்றும் போதே மேற்கண்ட கருத்துக்கள் வெளியிடப்பட்டன.

பொதுநல நோக்குடன் தாம் கற்றவற்றை பிறரும் அறியும் வண்ணம் நூல் வடிவாக வெளியிட்டமை பாராட்டுக்கு உரியது.

ஒவ்வொரு நூலையும் பிரசவிக்கும் போது வலி ஏற்படும். ஆனால் அது வாசகர் கரங்களில் தவழும் போது மகிழ்ச்சி ஏற்படும். அதனை சாள்ஸ் உணர்ந்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நூலுக்கான மதிப்பீட்டுரையை யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறை உதவி விரிவுரையாளர் சி.ரமணராஜா வழங்கினார்.

பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமல்லாது பட்டதாரிகளுக்கும் பயனுள்ளதாக இந்த நூல் அமைந்ததாக இந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-ரி)

## 250 படகுகள் தரிக்க வசதியாக பாஷையூர் இறங்குதுறை அமைப்பு

யாழ்ப்பாணம், மே.6

சுமார் 250 மீன்பிடிப் படகுகள் தரித்து நிற்கக் கூடியதாக பாஷையூர் இறங்குதுறை அமைக்கப்பட்டு வருகின்றது. கட்டுமானப் பணிகள் பூர்த்தியாகியுள்ள நிலையில், வெகு விரைவில் இந்தத் துறைமுகம் திறந்து வைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.



சுமார் 59 மில்லியன் ரூபா நிதியில் இந்த இறங்குதுறை புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கான நிதியை சர்வதேச இடம்பெயர்ந்தோர் அமைப்புக்கு ஐ.எம்.ஒ வழங்கியுள்ளது. அண்மையில் இறங்குதுறைக்கு சென்ற பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கட்டுமானப் பணிகளை பார்வையிட்டார்.

கட்டுமானப் பணிகளை விரைவில் பூர்த்தி செய்யுமாறு பொறியியலாளர்களிடம் அமைச்சர் அறிவுறுத்தியிருந்தார்.

வெகுவிரைவில் இந்த இறங்குதுறை திறந்து வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று கடல்தொழிலாளர் கூறினார். (ம-16)

## பேச்சளவில் மட்டுமே ஊடக சுதந்திரம்

யாழ்ப்பாணம், மே 6

ஊடக சுதந்திரதினத்தை முன்னிட்டு ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலைய மாணவர்களால் குறும்படங்கள் வெளியிடப்பட்டன.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் தே.தேவானந் தலைமையில் இடம்பெற்ற இந்த விழாவுக்கு பதில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ். சத்தியசீலன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.புஷ்பரட்ணம் மற்றும் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சிமைய ஒருங்கிணைப்பாளர் பேராசியர் விசாகரூபன் சிறப்பு விருந்தினர்களாக் கலந்து கொண்டனர்.



பதில் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.சத்தியசீலன் உரையாற்றும் போது ''ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் ஊடக சுதந்திர தினம் பிரகடனப்படுத்தப்பட்டு உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படுகின்றது.

இந்தமுறை 20 ஆவது ஊடக சுதந்திர தினமாகும். மூன்றாம் உலக நாடுகளை பொறுத்தளவில் வெறும் பேச்சளவில் மட்டுமே ஊடக சுதந்திரம் காணப்படுகின்றது.

வளர்ச்சியடைந்த, ஊடகங்களை மதிக்கின்ற, மனித உரிமைகளைப் பேணுகின்ற நாடுகள் இந்தத் தினத்தை கொண்டாடுவதில் அர்த்தமுண்டு.

எமது நாடு ஊடக சுதந்திரத்தில் பின்னோக்கி நிற்கக் காரணம் அரசியல் சிந்தனை, நாட்டுச் சிந்தனை போன்றவை இல்லாதிருப்பதாகும். பதவி என்ற மட்டுமே இன்று முக்கியமாகின்றது.

இன்று இந்தத் தினத்தில் நிமலராஜன், தராகி சிவராம் ஆகியோர் கண் முன் நிற்கின்றனர். நடுநிலைமையான போக்கை ஊடகங்கள் கையாள வேண்டும் -என்றார்.

இந்த நிகழ்வில் வறுமையின் வலி, மெழுகுதிரி உயிர்ப்பற்றுப் போகும் பேனா முனைகள், விலையேற்றம் வி (வீ) திகள் போன்ற குறுந்திரைப் படங்கள் வெளியிடப்பட்டன. (ஓ-ரி)

## அரியாலை முனங்கு இறங்குதுறை புனரமைப்பு

யாழ்ப்பாணம், மே 6

அரியாலை முனங்கு இறங்குதுறையை புனரமைப்பதற்கு நட வடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் உள்ள மீனவர்களின் வசதி கருதி இந்த இறங்குதுறை புனரமைக்கப்படவுள்ளது.

கடந்த பல வருடங்களாகப் புனரமைப்பு இன்றி இருக்கும் இந்த இறங்கு துறையை மீள் குடியேற்ற அமைச்சின் உதவியுடன் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த இறங்குதுறை ஆழமாக்கிப் புனரமைப்பதற்கு நல்லூர் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த இறங்குதுறைப் பகுதி ஆழம் குறைந்து காணப்படுவதால் மீனவர்கள் தமது மீன்பிடிப் படகுகளை நங்கூரமிடுவதில் சிரமங்களை எதிர் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-17)

## குடும்பஸ்தரை தீண்டிய பாம்பு

யாழ்ப்பாணம், மே 6

தோட்டக்காணியில் கட்டியிருந்த மாட்டை அவிழ்க்கச் சென்ற குடும்பஸ்தர் பாம்புக்கடிக்கு ஆளானார்.

இந்தச் சம்பவம் அளவெட்டி வடக்கு மயிலோடைப் பகுதியில் கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த கதிரவேலு வைகுந்தவாசன் (வயது-30) என்பவரே பாம்புக்கடிக்கு இலக்கானவர் ஆவார்.

குறித்த நபர் பாம்புக்கடிக்கு இலக்கானது கூடத் தெரியாமல் தனது காலில் வித்தியாசமான வலி ஏற்படவே தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக சென்றுள்ளார். (ம-14-36)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் விவகாரம் கை கலப்பாகியது

## 5 பேருக்கு வாள்வெட்டு



யாழ்ப்பாணம், மே 6

காதல் விவகாரத்தால் இரு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் போது 5 பேர் வாள் வெட்டுக் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த 7 ஆம் திகதி மல்லாகம் குளமங்கால் பகுதியில் இடம்பெற்றது. இளவாலைப் பகுதியைச் சேர்ந்த இளைஞனுக்கும் குளமங்களால் பகுதியைச் சேர்ந்த யுவதிக்கும் இடையில் ஏற்பட்ட காதல் விவகாரம் காரணமாக காதலனின் நண்பர்கள் குழு காதலியின் வீட்டுக்கு வந்து உறவினர்களுடன் வாக்கு வாதப்பட்டுள்ளனர். இதன்போது வாய்த்தர்க்கம் முற்றி வாள் வெட்டில் ஆரம்பித்த போது 3 பேர் வாள் வெட்டுக்கு இலக்காகினர். சம்பவ இடத்தில் வீதியால் படி ரக வாகனத்தில் பயணித்த ஒருவரும், சைக்கிளில் பயணித்த ஒருவரும் வாள்வெட்டுக்கு இலக்காகினர்.

சம்பவத்தின்போது காயமடைந்த 5 பேரும் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சம்பவம் தொடர்பான விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-14-36)



கரவெட்டி பிரதேச செயலகத்தில் சுயதொழில் கொடுப்பனவுப் பணம் அண்மையில் வழங்கப்பட்டது. இதன்போது பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ பயனாளி ஒருவருக்கு சுயதொழில் கொடுப்பனவு வழங்கப்படுவதைக் காணலாம். (ந-253)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



Best Wishes

**திரு. வாமதேவன் மனோகரன்**

இலங்கை வங்கியில் கடந்த 33 வருடகாலமாக அர்ப்பணிப்புடன் கூடிய சேவையாற்றி சுன்னாகம் மேற்தரக் கிளையில் இருந்து 06.05.2013 இல் ஓய்வு பெற்றுச் செல்லும் வாமதேவன் மனோகரன் அவர்களை அவர்தம் ஓய்வு காலத்தில் சீரும் சிறப்பாகவும் ஆரோக்கியமாகவும் தமது குடும்பத்தாருடன் நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

இலங்கை வங்கி,
சுன்னாகம் மேற்தரக்கிளை,
முகாமையாளரும், பணியாளர்களும்.

(C/8811)(10,6)


# அமைதியாக நடந்து முடிந்துள்ளது இளையோர் நாடாளுமன்றத் தேர்தல்

வலி.வடக்கு, மே 6

இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்றுமுன்தினம் மிகவும் அமைதியான முறையில் யாழ். மாவட்டத்தில் நடைபெற்று முடிவடைந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாகவும் இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான வேட்பு மனுக்கள் வழங்கப்பட்டு இருந்தன. வேலணை, தெல்லிப் பழை, கரவெட்டி, மருதங்கேணி, சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய், தெல்லிப்பழை பிரதேசங் களுக்கான இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் போட்டி இன்றி ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டனர்.

ஆனாலும் யாழ். மாவட்டத்தில் உள்ள நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், பருத்தித்துறை ஆகிய ஆறு பிரதேசங்களுக்குமான இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்வதற்கான தேர்தல் பிரதேச செயலகங்களில் காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை இடம்பெற்றது. ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, சங்கானைப் பிரதேசங்களில் மும்முனைப் போட்டியாகவும் நெடுந்தீவு, உடுவில், சண்டிலிப்பாய் பிரதேசங்களில் நேரடிப் போட்டியாகவும் இடம் பெற்றன.

தேர்தல் இடம்பெற்ற பிரதேச செயலகங்களில் பாதுகாப்புக்காக பொலிஸார் கடமையில் ஈடுபட்டு இருந்தனர்.

இலங்கையில் உள்ள அனைத்து மாவட்டங்களில் இந்தத் தேர்தல் இடம்பெற்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் இந்தத் தேர்தல் இந்த முறை இரண்டாவது தடவையாக இடம்பெற்றுள்ளது.

முதல் தடவை இடம்பெற்ற போது பல பிரதேச செயலர் பிரிவுகளில் போட்டி இன்றி இளைஞர் தலைமைகள் பிரதேச மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட போதிலும் இந்த முறை, இந்த நடைமுறை சாத்தியப்படவில்லை.

தமிழ் பிரதேச செயலங்களில் இளையோர் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் போட்டி குறைவாகக் காணப்பட்ட போதிலும் தென் பகுதியைப் பொறுத்த வரையில் கடும் போட்டி காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-86)


## கூறுவிலை கோரல்

திருமுறிகண்டியில் அமைந்துள்ள
வடபிராந்திய பாரவூர்தி உரிமையாளர்
கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் நிரப்பு
நிலையத்திற்குக் கீழ்க் குறிப்பிடப்படும்
வேலைகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட
ஒப்பந்தகாரரிடமிருந்து கூறுவிலை
கோரப்படுகின்றது.

01. எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கான உள் வீதி 100 மீற்றர்
02. இருக்கும் பாலத்தினை அகலப்படுத்துவது
03. எரிபொருள் பம்பிகளுக்குக் கூரை வேலை செய்வது

கூறுவிலைக்கு விண்ணப்பம் செய்ய விரும்புவோர் வேலைத் தளத்தினைப் பார்வையிட்டு மேலதிக விவரங்களுக்குக் கனகாம்பிகைக்குளத்தில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்துடன் நேரில் தொடர்புகொண்டு கூறுவிலை விண்ணப்பத்தினைப் பெற்றுக்கொள்வதுடன் 15.05.2013 ஆம் திகதிக்கு முன்னர் கூறுவிலை விண்ணப்பத்தினை தலைமைச் செயலகத்துக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**க.சிவசுப்பிரமணியம், தலைவர்,**
வடபிராந்திய பாரவூர்தி உரிமையாளர்
கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி. (சி/8844)(6.2)



## ஆறாம் மாத நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

**பார்த்தீபன் திலீப்ராஜ்**

மலர்வு
27.08.2000

உதிர்வு
08.11.2012



கடந்த 08.11.2012 அன்று எம்மைவிட்டுப்பிரிந்த எமது அன்புச் செல்வத்தின் மறைவு கேட்டு நேரிலும், தொலைபேசிமூலமும், மரணச் சடங்கிலும் பங்குபற்றிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் இன்று (06.05.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்குகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
தோப்பு ஒழுங்கை, சாவகச்சேரி. (35013)(4,6)

ஹேமலதா (அன்புத்தாய்),
திவ்யா (தங்கை).


## இந்திய வீட்டுத் திட்டத்துக்கான முதற்கட்ட கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், மே 6

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 80 குடும் பங்களுக்கு இந்தியன் வீட்டுத் திட்டத்துக்கான முதற்கட்ட கொடுப்பனவுகள் வங்கிகள் ஊடாக வழங்கப்படவுள்ளன. நீண்ட காலத்தின் பின்னர் மாதகல் கிழக்கு, மேற்கில் மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கே இந்திய வீட்டுத் திட்டம் வழங்குவதற்கான முதற் கட்ட கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. பிரதேச செயலர் ஊடாக இந்தப் பகுதி மக்களுக்கு அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டு, வீட்டுத் திட்ட உதவிகளும் வழங்கப்பட்டுள்ளன. இதேவேளை- மேலதிக பயனாளிகள் விரைவில் தெரிவு செய்யப்படவுள்ளனர் என்றும் கூறப்பட்டது. (எ-50)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், மே 6

நவாலி சிந்தாமணி விநாயகர் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு விநாயகர் புராணம் எனும் பொருளில் ஆசிரியர் முத்தமிழ் மணி ஜெயரட்ணம் கோகலே பிரம் மஸ்ரீ அ.சுப்பிரமணிய குருக்கள் தலைமையில் தினமும் மாலை 4.30 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றி வருகிறார். (ஒ-50)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அருளப்பு (f)பினியன் அரியநாயகம்**



*மண்ணில்*
*12.12.1937*

*விண்ணில்*
*06.05.2012*

**"சீவியத்தில் உங்களை நேசித்தோம் மரணத்திலும் மறவோம்"**

கலகலப்பான உங்கள் குரலும்
இனிமையான புன்சிரிப்பும் மறைந்து
ஆண்டொன்று ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவு மறையவில்லையே
மீண்டும் ஒரு நாள் சந்திக்கும்வரை
நித்திய வாழ்வில் இன்புற்றிருக்க
இறைவனை வேண்டுகின்றோம். உங்கள் பிரிவால் துயருறும்

மனைவி, மகள், மருமகன்,
பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்
மற்றும் உறவினர்கள்.

54/3, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். (36910)(2,6)



## முதலாம் ஆண்டு நினைவுநாள்



தோற்றம்
*06.06.1942*

மறைவு
*17.04.2012*

**அமரர் குஞ்சர் குணரட்ணம்**

*திதி: 06.05.2013*

எம் குடும்பத் தலைவனே
எம் வாழ்வின் ஒளி விளக்கே!
எம்மையெல்லாம் சீரோடும் சிறப்போடும்
வாழவைத்தீர்களே அப்பா!
நீங்கள் எமைவிட்டுச் சென்று
ஒரு நொடிப் பொழுது போல்
ஓர் ஆண்டும் வந்ததுவே
எமைபிரிந்து சென்றாலும்
எம் நினைவுகளிலெல்லாம்
உங்கள் எண்ணமே.

ஓம் சாந்தி!

மனைவி, மகள்மார்,
மகன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

இல.12,
[illegible] வீதி,
திருநெல்வேலி.

(37042)(10,6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2012ஆம் ஆண்டு யாழ்.மாவட்டத்தில் 9 ஆயிரத்து 346 குழந்தைகள் பிறந்தன



குருநகர்,மே 6

யாழ்.மாவட்டத்தில் 2012ஆம் ஆண்டு காலப் பகுதியில் 9 ஆயிரத்து346 குழந்தைகள் பிறந்துள்ளன என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் திரட்டப்பட்ட புள்ளி விவரத்தின் மூலம் தெரிய வந்துள்ளது.

இதில் 101 குழந்தைகள் பிரசவிக்கும்போதே இறந்துள்ளன. 9 ஆயிரத்து 245 குழந்தைகள் தற்போது உயிருடன் உள்ளன என இந்தப் புள்ளி விவரம் தெரிவிக்கிறது.

இவைகளில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் ஆயிரத்து 698 குழந்தைகளும், யாழ்.போதனா வைத்தியசாலையில் 6 ஆயிரத்து 888 குழந்தைகளும், யாழ்.மாவட்டத்தில் இயங்கும் தனியார் வைத்தியசாலைகளில் 746 குழந்தைகளும், வீடுகளில் 14 குழந்தைகளும் பிறந்துள்ளன.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழ் இயங்கும் வைத்திய சாலைகளில் 7 குழந்தைகளும், யாழ்.போதனா வைத்தியசாலையில் 89 குழந்தைகளும், தனியார் வைத்திய சாலைகளில் 5 குழந்தைகளும் பிறக்கும் போதே இறந்துள்ளதாக இந்தப்புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-51)

# மாற்று வலுவுள்ள பிள்ளைகளின் திறனை பெற்றோர்கள் வெளிக்கொணர வேண்டும்

யாழ்ப்பாணம்,மே 6

மாற்று வலுவுடையவர்கள் பலர் திறன்கள் இருந்தும் அவற்றை வெளிப்படுத்த முடியாமல் வீடுகளில் முடக்கி வைக்கப்பட்டுள்ளார்கள். இதற்குக் காரணம் பெற்றோர்களே.

எனவே பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் திறன்களை வெளிக்கொண்டுவர களம் அமைத்துக் கொடுத்து அவர்களையும் சமூகத்துடன் ஒன்றிணைக்க வேண்டும்.

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி ந.சிவராஜா தெரிவித்தார்.

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் 23 ஆவது ஆண்டு விழா நேற்று இல.47/2, ஆடியபாதம் வீதியில் அமைந்துள்ள சங்க விடுதியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது:-

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் கடந்த 23 வருடங்களில் பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளது.

எதிர்பார்த்த அளவுக்கு இந்த முன்னேற்றங்கள் இல்லாவிட்டாலும் கட்டடம் ஏனைய இதர வசதிகளின் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மாற்று வலுவுடையவர்களில் பலர் முன்னேற்றம் கண்டுள்ளனர்.

இத்தகைய மாற்று வலுவுடையவர்கள் தாங்களே மனப்பக்குவத்தை அடைந்துள்ளார்கள். இதற்கான வசதி வாய்ப்புகள், பயிற்சிகள் தாராளமாக வழங்கப்பட்டுள்ளன.

வலுவிழந்தவர்களுக்குத் தடையாக இருப்பது சமூகம் ஏனெனில்சமூகத்தில் உள்ளவர்கள் மாற்று வலுவுடையவர்களை ஏற்றுக்கொள்வது மிகக் குறைவாகவே உள்ளது. அத்துடன் மாற்று வலுவுள்ளவர்களுக்கு முதல் தடவையாக இருப்பது பெற்றோர்கள்.

பெற்றோர்கள் மாற்று வலுவுடைய தமது பிள்ளைகளை ஏற்றுக்கொண்டால்தான் சமூகமும் அவர்களை ஏற்றுக்கொள்வார்கள். பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு உணவு, இருப்பதற்கு இடம் கொடுத்தால் மட்டும் போதும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அதற்கு அப்பால் அவர்களுடைய கல்வி, ஏனைய திறமைகளை வளர்த்துக் கொள்ள சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

ஒவ்வொருவருக்குள்ளும் ஒவ்வொரு திறமைகள் உள்ளன. அதற்கான வசதி வாய்ப்புகளை வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் வழங்கி வருகிறது. ஒவ்வொரு துறை சார்ந்த ஆசிரியர்கள் உள்ளனர். இதனைவிட அவற்றைக் கற்றுக்கொடுப்பவர்களும் மாற்று வலுவுடையவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மாற்று வலுவுடையவர்கள் தமது திறன்களை வெளிக்கொணரும்போது மனநிலை மாற்றம் ஏற்பட்டு துணிவு உடையவர்களாக சமூகத்தில் வலம் வருவார்கள். எனவே பெற்றோர்கள் தமது மாற்று வலுவுடைய பிள்ளைகளை வீடுகளில் முடக்கி வைக்காமல் சமூகத்துடன் ஒன்றிணைக்க முயற்றிக்க வேண்டும்-என்றார். (ந-14)



## மது போதையில் அட்டகாசம்

தென்மராட்சி,மே 6

சாவகச்சேரி அல்லாரை தம்பு தோட்ட படை முகாமுக்கு அப்பால் இரண்டாம் கட்டைப் பகுதியில் மதுபோதையில் நிற்போரால் மக்கள் பெரும் சிரமம் அடைகின்றனர்.

தினமும் மாலை வேளைகளில் அங்கு கூடுவோர் அந்தப் பகுதியில் கூடியிருந்து மது அருந்திவிட்டு கச்சாய் வீதியால் செல்வோரையும் கடைகளுக்குச் செல்வோரிடமும் தகாத முறையில் நடக்க முயற்சிப்பதாகவும் இதனால் மாலை ஆறு மணிக்குப் பின்னர் இந்த வீதியினைப் பயன்படுத்த மக்கள் அச்சம் கொண்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.

உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை செலுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-9)

## உடுக்கியவளை பிள்ளையார் வீதி புனரமைக்கப்படுமா?

வட்டுக்கோட்டை,மே 6

வட்டுக்கோட்டை உடுக்கியவளைப் பிள்ளையார் கோயில் வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

இதனால் இந்த வீதியூடாகப் போக்குவரத்துச் செய்பவர்களும், பாடசாலை மாணவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதிக்கு சில நாள்களுக்கு முன் மண்போட்டு நிரவப்பட்டது.

எனினும் தற்போது பெய்த மழையால் மண்ணும் கரைந்து பெரும் போக்குவரத்து நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன. இந்த வீதியைப் புனரமைப்பது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களிடம் தெரிவித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ந)

### ஊடக வளங்கள்மற்றும் பயிற்சி மையம்

## சமுதாய அவலங்களை சரிவர ஆவணப்படுத்துகின்றது

சமுதாய அவலங்களைச் சிறந்த முறையில் ஆவணப்படுத்துவதில் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் தன் பணியைச் சரிவரச் செய்துள்ளது என யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத் தின் கலைப்பீடாதிபதி பேரா சிரியர் புஸ்பரட்ணம் தெரிவித்தார்.

ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மைய மாணவர்களின் குறுந்திரைப்பட வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல் கலைக் கழகத்தின் வரலாற்றுத் துறையோடு ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் இணைந்து செயற்பட வேண் டும். அப்போது சிறந்த ஆவணப் படுத்தல்களை வெளிக் கொண்டு வர முடியும்.

சமுதாயம் இன்றைய கால கட்டத்தில் பழைமையைப் பணமாக்கி விடுகின்றது. அவ்வாறில்லாமல் அவற்றைப் பேணவேண்டும் என ஊடகத்துறையினர் இந்தக் கண்காட்சி மூலம் வெளிப் படுத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் ஊடகங்களுக்கு சுதந்திரம் அற்ற நிலைமையே காணப்படு கின்றது. அத்துடன் யாழ்ப் பாணத்தின் பொற்காலம் இன்று பிறழ்வுக்கு உள்ளாகி விட்டது. எனவே ஆரோக்கிய சமுதாயத்துக்கு ஊடக வளங் கள் மற்றும் பயிற்சி மையம் உதவ வேண்டும்- என்றார். (ந-ரி)

> “ யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறை யோடு ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையம் இணைந்து செயற்பட வேண்டும்.

# யாழ்.மாவட்ட பாடசாலைகளின் எழுத்தாக்கப் போட்டி முவுகள்

வடமராட்சி,மே6

அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டியில் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்குகிடையே எழுத்தாக்கப் போட்டிகள் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களினதும், பாடசாலைகளினதும் விவரம் வருமாறு:-

பிரிவு 1

ஆக்கம் எழுத்து:

க.வேக்விழி (பண்ணாகம் மெய்கண்டான் வித்தியா லயம்), ஆ.பாலகுரு பெரு மாள் (யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை), கே.கேஷிகா (நெல்லியடி மெ.மி.த.க. பா).

பிரிவு 2,

கட்டுரை வரைதல்

ஜி.அபிராமி (மூளாய் சைவப் பிரகாச வித்தி.), செ.ஆர்த்திகா (வல்வெட்டித்துறை மகளிர் மகா வித்தி.), க.கவினா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி).

பிரிவு 3,

கட்டுரை வரைதல்

ப.கஸ்தூரி (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), ர.ஆர்த்திகா (கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), சி.வினுஜா (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி).

பிரிவு 4,

கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்

தே.உமையாழினி (அளவெட்டி அருணோதயாக் கல்லூரி), சா.தனுஷா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), வி.அஜிந்தன் (பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி).

பிரிவு-5

தமிழியியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்

தே.காயத்திரி (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி), ச.அருண்யா (கரவெட்டி வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), இ.அபிசா (யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலை).

பிரிவு-4

இலக்கணப் போட்டி

பா.நர்மதா (பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), கு.கௌசிகா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), கு.காருண்யா (உடுவில் மகளிர் கல்லூரி).

பிரிவு-5

இலக்கணப் போட்டி

த.கஜிந்தினி (மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி), க.கோபிகா (பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி), ஸ்ரீ.நிரோஜா (தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி)

பிரிவு-5

திறனாய்வுப் போட்டி

ஞா.சார்த்திகா, த.தீபிகா (இடைக்காடு மகா வித்தியாலயம்). ஞா.சார்த்திகா (வரணி மகா வித்தியாலயம்), சு.சுபஹரி (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

பிரிவு-4

குறுநாடக ஆக்கம்

ம.கவியரசன் (கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி), ம.ஆத்மீகா (நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி), ர.ரதீஸ்வரி (மானிப்பாய் சென். ஆன்ஸ்றோ.க.த.க.பாடசாலை), ஞா.இயேசுதன் (ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி).

பிரிவு-5

குறுநாடக ஆக்கம்

ஜெ.ஜெயஸ்ரிக்கா (கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி), வி.மதுஷாலினி (அளவெட்டி அருணோதயக் கல்லூரி), பி.பிரதீபா (நயினாதீவு மகா வித்தி).

பிரிவு-4

கவிதை ஆக்கம்

றெ.டொறினா (புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தி), சி.வர்ணிகா (தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி), பா.ஜெனிதா (மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தி.), தே.கலைமகள் (நெல்லியடி மத்திய வித்தி).

பிரிவு-5

கவிதை ஆக்கம்

ம.கிருஷாந் (இடைக்காடு மகா வித்தி), கோ.சங்கீதா (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி), பி.பிறேமிஷா (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

பிரிவு-4

சிறுகதை ஆக்கம்

ஸ்ரீ.வேதிகா (அளவெட்டி அருணோதயாக்கல்லூரி), ப.வினுஷியா (யாழ்.வேம்படி மகளிர் கல்லூரி), ந.காயத்திரி (கரணவாய் மகா வித்தி.).

பிரிவு-5

சிறுகதை ஆக்கம்

ஜெ.ஸோபனா (நாவற்குழி மகாவித்தி.), கி.சுபாஜினி (வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி), [illegible] (காரைநகர் [illegible] தியாக ராஜா மத்திய மகாவித்தி.). (ந-8)

# பயிற்சி நிலையத்தை மீள ஆரம்பிக்குக

யாழ்ப்பாணம், மே.6

அச்சுவேலியில் கடந்த காலங்களில் இயங்கி வந்த கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் பயிற்சி நிலையத்தை மீள ஆரம்பிக்க வேண்டும்.

இவ்வாறு யாழ். அரச அதிபருக்கு வலி.தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத் தலைவர் ச.செல்வரத்தினம் எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வலி.கிழக்கில் விடுதி வசதிகளுடன் இயங்கி வந்த பயிற்சி நிலையம் அசாதாரண சூழ்நிலையினால் செயலிழந்து கட்டடங்களும் அழிவடைந்து உள்ளன.

தற்போது குறித்த காணியை மீளவும் கிராம அபிவிருத்தி திணைக்களம் பொறுப்பேற்று, அதில் திணைகளத்துக்கான மாகாண செயற்பாடுகளுக்கு பயன்படும் வகையில் கட்டடங்கள் அமைக்க வேண்டும். அங்கே மாகாண மட்டப் பயிற்சி நிலையத்தினையும் அமைக்க ஆவன செய்ய வேண்டும் என அந்தக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந-50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வங்கி வரி பற்றிய விழிப்புணர்வு அவசியம்

கி. செல்லத்துரை,
ஓய்வுபெற்ற வங்கியினர்

ஒரு முதியவர், 60 வயதிருக்கும்; தனக்கு ஐந்து வருடங்களுக்கு முன்பு கிடைத்த ஊழியர் சேமலாப நிதியை வங்கியொன்றில் நிலையான வைப்பில் இட்டிருந்தார். தொகை ஐந்து லட்சம் ரூபா. 2008 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வங்கிகள் வழங்கிய வட்டி வீதம் அதிகமாக இருந்தபடியால் இருபது வீத வட்டிக்கு வைப்புச் செய்திருந்தார். அவரது கணக்குப்படி ரூ.500,000 வட்டியாக வரவேண்டும். முதல் வட்டி இரண்டும் சேர்ந்து ரூ. 1000.000/ வரும். இதனை வைத்துக் கொண்டு மக்களின் திருமணத்தை முடித்து விடலாம் என்று திட்டமிட்டிருந்தார்.

2008 ஆம் ஆண்டு ஏப்ரல் 3 ஆம் திகதி அவர் பணத்தை வைப்புச் செய்திருந்தார். எனவே இவ்வாண்டு ஏப்ரல் 4 ஆம் திகதி பணத்தை மீளப்பெறுவதற்காக வங்கிக்கு சென்றபோது வங்கிக் காசாளர் ரூ.960,000/ ஐ மட்டுமே வழங்கினார். மிகுதி 40.000 ரூபாவுக்கு என்ன கதி என்று கேட்டபோது அது பிடித்து வைத்தல் வரியாக கழிக்கப்பட்டு விட்டது என்று தெரிவித்தார்.

முதியவர் இடிவிழுந்தது போலானார். உடல் வியர்க்க அங்குள்ள கதிரையொன்றில் சிறிது நேரம் அமர்ந்து விட்டார்.

பின்னர் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு அதுவரை நேரமும் தொலைபேசியில் யாருடனோ உரையாடிக் கொண்டிருந்த முகாமையாளரின் அறைக்குள் சென்று விடயத்தைக் கூறினார். அதற்கு முகாமையாளர் "ஓம் பெரியவரே பிடித்து வைத்தல் வரி என்று ஒன்று இருக்கின்றது. இது 1982 ஆம் ஆண்டிலிருந்தே நடைமுறையில் உள்ளது. உங்களுக்குத் தெரியாதா?" என்றார். மேலும் இது பற்றி பிரசுரம் ஒன்றை சமர்ப்பித்து "பாரும் உங்களுக்கு மும்மொழியிலும் கடிதமும் பிரசுரமும் அனுப்பி வைத்திருந்தோமே கிடைக்கவில்லையா?" என்றார்.

இவர் ஆறு மாதத்திற்கு ஒருமுறை அடிக்கடி வீடு மாற்றிக் கொண்டிருப்பது அவருக்கு எங்கே தெரியப்போகின்றது.

"ஐயா! இப்ப இந்த 40,000 ரூபாவையும் தரமாட்டீர்களா?" என்று அவர் ஏக்கத்துடன் கேட்க அதற்கு முகாமையாளர் "இப்ப கணினி முறை முந்தியைப் போல் இல்லை. ஒரு முறை வரி கழித்தால் கழித்தது தான். அதுக்குள் நாங்கள் கை வைக்க முடியாது" என்றார். "அதுமட்டுமல்லாமல் இதையும் மீறி நாங்கள் ஏதாவது முறையில் வரிக்கணக்கிலிருந்து பணத்தை உங்களுக்கு தர முற்பட்டால் பிறகு 'ஓடிட்' (Audit) வந்து செக் (Check) பண்ணினால் நான் வேலை இல்லாமல் வீட்டில் நிற்க வேண்டியது தான். அது உங்களுக்கு விருப்பமோ?" என்றார்.

அப்போது முதியவர் "ஐயா! என்னால் நீங்கள் வேலை இழக்க வேண்டாம். ஆனால் ஐந்து வருடத்துக்கு முன்பு நான் படிவங்கள் நிரப்பும் போது ஒரு படிவத்தைக் காட்டி இது என்னவென்று கேட்டேன். அப்ப இருந்த தம்பி இது டக்ஸ்போம் (Taxform) அதாவது உங்களுக்கு வரி கழிக்கப்படாமல் இருக்க நீங்கள் இதில் கையெழுத்துப் போட வேண்டுமென்று சொன்னார். பிறகு ஏன் இப்ப 40 ஆயிரம் ரூபாவைக் கழிச்சனீங்கள்?" என்று குற்றக் கோபத்துடன் கேட்டார். அதற்கு முகாமையாளர் பொறுமையாகப் பதிலளித்தார் "ஐயா. இந்த வரி கழிக்காமல் இருக்க வேண்டுமென்றால் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் முதலாம் திகதிக்கு முன்பு அதாவது மார்ச் மாத கடைசிக் கிழமையில் படிவம் நிரப்பிக் கொடுக்க வேண்டும். அதில் உங்கள் பெயர், முகவரி, கணக்கு இலக்கம், வரி மதிப்பு ஆண்டு, அடையாள அட்டை இலக்கம் என்பவற்றை இட வேண்டும். வரி கழிப்பதா? இல்லையா? எவ்வளவு வீத வரி கழிப்பது என்பதைத் தீர்மானிக்க மூன்று வகையான பிரிவுகள் இருக்கு. இதில் உங்களுக்குப் பொருத்தமானதுக்கு எதிரே சரி என அடையாளமிட்டு வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டும். கூட்டுக் கணக்காக இருந்தால் ஒவ்வொருவரும் தனித்தனியாக சமர்ப்பிக்க வேண்டும்.

அந்தப் பிரிவுகள்:-

அந்த வருடத்தில் அவர்கள் எதிர்பார்க்கும் மொத்த வருமானம் ஐந்து லட்சம் ரூபாவுக்குக் குறைவென்று தெரிவித்தால் அவர்களுக்கு வரி கழிக்கப்படமாட்டாது.

5 லட்சம் ரூபாவிலிருந்து 15 லட்சம் ரூபா வரை என்றால் 2.5% வரி பெறப்போகும் வட்டியிலிருந்து கழிக்கப்படும்.

ஆண்டு வருமானம் 15 லட்சத்துக்கு மேல் என்றால் 8% வரி பெறப்படும் வட்டியில் இருந்து கழிக்கப்படும் என்றார்.

"அப்ப எனக்கேன் 8 வீதம் கழிச்சனீங்கள் என்னுடைய மாத வருமானம் வட்டி உட்பட எப்படியும் இருபதாயிரத்தைத் தாண்டாது. அப்படியென்றால் வருட வருமானம் ரூ 240,000 தானே வரும்" என்றார் இவர்.

அதற்கு முகாமையாளர் "அதற்குத்தான் நீங்கள் படிவமே நிரப்பிக் கொடுக்கவில்லையே. படிவம் நிரப்பிக் கொடுக்காதவைக்கும் 8 வீத வரி கழிக்கச் சொல்லி எங்களுக்கு மத்திய வங்கி சுற்று நிருபத்தில் சொல்லியிருக்கு. நாங்கள் என்ன செய்யிறது?" என்றார்.


முதியவரால் அதற்கு மேல்வாதாட முடியவில்லை கண்கள் கலங்கின.

இந்த 40.000 ரூபா எத்தனை தேவைகளை நிறைவேற்றும். வரி செலுத்த தேவையில்லாத நான் அநியாயமாக பாதிக்கப்பட்டு விட்டேன் என்று நினைத்தவாறு தள்ளாடியபடியே வீட்டை நோக்கி நடந்தார். அவ்வேளை அவரது சிந்தனையில் பல கேள்விகள் பிறந்தன.

★ நான் பணம் வைப்புச் செய்யும் போது ஒவ்வொரு வருடமும் இந்தப் படிவம் நிரப்பிக் கொடுக்க வேண்டும் என்று ஏன் எனக்குச் சொல்லப்படவில்லை? ஐந்து வருடம் முடிய இங்கு வாருங்கள் என்று மட்டும் தானே சொன்னார்கள்?

★ படிவம் நிரப்பிக் கொடுக்கவில்லை என்ற ஒரே காரணத்துக்கா என்னை வருடம் ரூ. 1500.000/ இக்கு மேல் வருமானம் பெறும் ஒருவனென்று கணித்தது சரியா?

மக்கள் மனமறிந்தவர்கள், தேசத்தின் வங்கியாளர் உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி, மக்களின் நாடித்துடிப்பு போன்ற கோஷங்களுடன் பல்வேறு வகையான விளம்பரத்திட்டங்களுக்கு எங்களுக்குப் புரியாத சிங்களப் பெயர்களை வைத்துக் கொண்டு ஒவ்வொரு வருடமும் யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகள் உட்பட எல்லாத் தினசரிகளிலும் வட்டி வீதம் அதிகரிக்கும் போது மட்டும் விளம்பரம் செய்கிறீர்களே, இவர்களுக்கு ஒரு பொது அறிவித்தலாக இந்தப் படிவம் மக்களால் நிரப்பிக் கொடுக்க வேண்டும் இன்றேல் வரி மதிப்புக்குள்ளாவீர்கள் என்று ஏன் வைப்புச் சான்றிதழின் பின்புறமும் சேமிப்புப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்திலும் ஆகிய இடங்களில் ஏன் அச்சிடப்படவில்லை. எனவே பொதுமக்களே வங்கியில் பணத்தை வைப்பிலிடும்போது எந்த ஒரு படிவத்திலும் ஏன் கையொப்பமிடுகிறோம் என்று முழுமையாக அறிந்து ஒப்பமிடுங்கள். எதையும் வெற்றிடமாக விடாதீர்கள்.




நீங்கள் ஆரம்பிக்கும்போதும் கணக்குகளுக்கு ஏதாவது மாதாந்த வருடாந்த கட்டணங்கள் உண்டா? வரிக்கு உட்படுமா? என்பவற்றை கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். ஆண்டுக்கு ஒரு முறையேனும் வங்கிக்குச் சென்று உங்கள் கணக்கில் சேர்ந்திருக்கும் வட்டி சரியாகக் கணிக்கப்பட்டுள்ளதா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் வரவு செலவுத் திட்டத்தில் புதிய வரிகள் ஏதேனும் விதிக்கப்படுகின்றனவா? அல்லது அவை தொடர்பாக புதிய பிரசுரங்களை வங்கிக்கு சமர்ப்பிக்க வேண்டுமா என்பவற்றை அறிந்து கொள்ளுங்கள்.

இதன் மூலம் மேலே குறிப்பிட்ட முதியவர் போல் வேதனைக்குள்ளாகாமல் தவிர்த்துக் கொள்ளலாம். ★

# நடுநிலைமையின் சின்னம் செஞ்சிலுவை

இலங்கை
செஞ்சிலுவைச் சங்கம்
யாழ்ப்பாணம்.

ஹென்றி டுனான்ட் என்பவரால் உருவாக்கப்பட்ட சின்னமே செஞ்சிலுவை. தனது நாடாகிய சுவிஸ் நாட்டின் தேசியக் கொடியின் சின்னமாகிய சிவப்புப் பின்னணியில் அமைந்த வெள்ளைச் சிலுவையை மாற்றி வெள்ளைப் பின்னணியில் சிவப்புச் சிலுவையாக உருவாக்கியதே செஞ்சிலுவைச் சின்னமாகும்.

1859 ஆம் ஆண்டு சொல்பரினோ என்ற இடத்தில் நடைபெற்ற யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட போர் வீரர்களையும், பொதுமக்களையும் காப்பாற்றிய தொண்டர்களுக்கான அடையாள சின்னமாக இது உருவாக்கப்பட்டது. இது தொண்டர்கள் பாதுகாப்புடன் செயற்படுவதற்கு உலக அங்கீகாரம் பெற்ற சின்னமாகும். காலங்காலமாக ஏற்படுத்தப்பட்ட பல இணைப்புக்களுடன் மாற்றங்களுடன் இச் சின்னம் உலக அங்கீகாரத்தைப் பெற்றது.

சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட இச் சின்னம் தனியார் நிறுவனங்கள், வைத்தியசாலைகள், மருத்துவர்கள் என பல தரப்புகளால் பயன்படுத்தப்படுகின்றன. இது அதன் நடுநிலைமை கோட்பாட்டுக்கு மாறானதாகும். உலக ரீதியில் அனர்த்த காலங்களில் செஞ்சிலுவைச் சின்னம் நடுநிலைமையின் சின்னமாக அங்கீகரிக்கப்பட்டது.

ஜெனிவா கோட்பாட்டுக்கு அமைவாக மனிதாபிமானம், பாரபட்சமின்மை, நடுநிலைமை, சுயாதீனம், தொண்டர் சேவை, ஒருமைப்பாடு, சர்வதேச மயம் என ஏழு கொள்கைகளுக்காக சர்வதேச ரீதியிலும் தேசிய ரீதியிலும், செயற்படும் செஞ்சிலுவைச் சங்கங்களினால்தான் இச் சின்னத்தை பயன்படுத்த முடியும். ஏனைய அமைப்புக்கள் பயன்படுத்துவது தவறானதாகும். இது செஞ்சிலுவைச் சங்கத்துக்கு உரித்தான செஞ்சிலுவையாகும். இந்த வகையில் அனர்த்த காலங்களிலும் ஏனைய காலங்களிலும் செயற்படும் ஜெனிவாவினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதாபிமான சேவையை செய்கின்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினாலேயே இச் சின்னம் பயன்படுத்தமுடியும். அதற்கு இலங்கையின் வெளிவிவகார அமைச்சின் அங்கீகாரம் செஞ்சிலுவைச் சங்கத்துக்குண்டு.


**செஞ்சிலுவைச் சின்னத்தை பாதுகாத்தல்**

இலங்கையில் 'செஞ்சிலுவைச் சின்னம் தவறான முறையில் பயன்படுத்தப்படுகிறது. செஞ்சிலுவைச் சங்க சின்னம் [illegible] நிலைமையின் சின்னமாக [illegible]களில் அங்கீகரிக்கப்பட்டது.

இச் செஞ்சிலுவைச் சின்னத்தைப் பாவிப்பதன் முக்கிய நோக்கம் காயப்பட்டோருக்கும் துன்புறுத்தப்பட்டோருக்கும் உயிருக்காக போராடிக் கொண்டு இருப்பவர்களுக்கும், உதவுவதற்கும், பாதுகாப்பு அளிப்பதற்கும், உயிரையும், உபகரணங்களையும் காப்பாற்றுவதற்கு பணி புரியும் தொண்டர்களை அடையாளம் கண்டு கொள்வதற்கும் ஆகும்.

மேலும், இக்காலங்களில் பணியில் ஈடுபடும் செஞ்சிலுவைச் சங்க வைத்தியர்கள், பணியாளர்கள், தொண்டர்கள், வைத்திய உபகரணங்கள் நிவாரணப் பொருள்கள் வழங்கும் தொண்டர்களாலும் இச் சின்னம் பயன்படுத்தப்படும்.

எனவே, இச் சின்னம் ஏனைய நிறுவன அமைப்புகளால் பயன்படுத்தும்போது இதன் தனித்தன்மை, நடுநிலைமை, பாதுகாப்புத்தன்மை என்பன பாதிக்கப்படுகின்றது. எனவே இலங்கை சட்டவாக்கத்தின்படி இச் செஞ்சிலுவையை ஏனைய நிறுவனங்கள் பாவித்தல் செஞ்சிலுவைக் கொள்கைக்கு முரணானதாகும். ஏனைய அமைப்புக்களின் சின்னம் எப்படி அமைய வேண்டும் [illegible] சேவைக்காக அங்கீகரிக்கப்பட்ட



செஞ்சிலுவைச் சின்னத்தை பாவிப்பதன் முக்கிய நோக்கம், காயப்பட்டோருக்கும் துன்புறுத்தப்பட்டோருக்கும் உயிருக்காக போராடிக் கொண்டு இருப்பவர்களுக்கும், உதவுவதற்கும், பாதுகாப்பு அளிப்பதற்கும், உயிரையும், உபகரணங்களையும் காப்பாற்றுவதற்கு பணி புரியும் தொண்டர்களை அடையாளம் கண்டு கொள்வதற்கு ஆகும்.

சின்னங்கள், மருத்துவர்களின் சின்னங்கள் வெள்ளை நிறப் பின்னணியில் பச்சை சிலுவை அல்லது பச்சை பின்னணியில் வெள்ளை சிலுவை.

வைத்தியசாலையின் சின்னமாக நீல நிற பின்னணியில் H என்ற வெண்ணிற எழுத்து.

செஞ்சிலுவைச் சின்னத்தை மருத்துவர்கள் பாவிப்பது செஞ்சிலுவைக்கு முரணானதாகும். எனவே ஏனைய நிறுவனங்களும் தனியார்களும் தங்களுக்குரிய சின்னங்களைப் பயன்படுத்தலாம். செஞ்சிலுவைச் சின்னத்தை பயன்படுத்துவது தவறாகும்.

செஞ்சிலுவைச் சின்னம் யுத்த அனர்த்த காலங்களில் நடுநிலைமையுடன் செயற்படும் தொண்டர்கள் அவர்கள் பயன்படுத்தும் உபகரணங்களைக் காட்டும் செயற்பாட்டுச் சின்னமாகும். செஞ்சிலுவைச் சங்கத்தின் சின்னமானது இலங்கை சட்டவாக்கக் கழகத்தின் 2006 ஆம் ஆண்டு 4ஆவது இலங்கை ஜெனிவாச் சட்டத்தின்படி பாதுகாக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவறாகப் பயன்படுத்தும் ஏனைய தனியார் நிறுவனங்கள் இதனைத் தவிர்த்து செயற்பட வேண்டும். செஞ்சிலுவையை பயன்படுத்துவதை தவிர்த்துத் தங்களுக்காக உள்ள சின்னங்களை பயன்படுத்தி செஞ்சிலுவைச் சங்கத்தின் தனித்தன்மையை பாதுகாக்க உதவ வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷ அரசுக்குப் புளிக்கும்
# அமெரிக்க திராட்சை

மூலம்: சுனந்த தேசப்பிரிய
தமிழில்: வி.பஸ்.ரி.

ராஜபக்ஷ அரசு அமெரிக்காவை உள்நாட்டில் கடுமையாக விமர்சித்து வருகிறது. ஜனாதிபதி ஒபாமாவின் உருவப்பொம்மைகள் அமெரிக்காவுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின்போது வீதியில் தீவைக்கப்படுகின்றன. அதேவேளை, ஆங்கிலத்தில் அறிக்கை வாசிக்கின்றனர். கோரிக்கை விடுக்கின்றனர். இறுதியில் அனைத்துச் சுற்றிலும் "ஐயோ, அந்த அமெரிக்கக்காரர்கள் இல்லாது போனால் எமக்கு என்னதான் நடக்கப்போகிறது? எமக்கு 2 ஆயிரத்து 500 வருட வரலாறு இருக்கின்றது. மனித உரிமைகளின் வரலாற்றை உங்களுக்கு எம்மால் கற்பிக்க முடியும். மீண்டும் சில நாள்களில் எங்களுடன் வாருங்கள் மூலோபாயங்களைத் தயாரிக்கலாம்" என அமெரிக்காவுக்கு அழைப்பு விடுக்கின்றனர். இது அனுபவம் வாய்ந்த அரசியல் பண்பாட்டைக் காட்டவில்லை. எமக்கு எமது பாட்டி சொல்லித் தந்த கொடுத்த நரிக்கு திராட்சைப் பழம் புளித்த கதையில், தான் ஏமாற்றத்தை மறைத்துத் தன்னைத் தேற்றிக் கொள்ளவே நரி அந்தக் கதையைக் கூறியது. தற்போதைய இலங்கை அரசின் இத்தகைய கதையில் வருவார் இலங்கையர்கள் பலர்.

இந்தத் திராட்சைப் பழம் புளிக்கும் முன்னர், மேலே குதித்துக் குதித்து அதனைச் சாப்பிட முயலும் அரசின் முயற்சியை வெளிப்படுத்துவதற்காக நாட்டில் நடந்த அண்மைய சம்பவங்கள் மூன்றை உதாரணங்களாக எடுத்துக் கொள்ளலாம்.

### கண்டனம் தெரிவிப்பதிலும் பாசம்

கடந்த மார்ச் மாதத்தில் அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில், இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தீர்மானத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்த பின்னர், இடம்பெற்ற சம்பவங்கள் இவை. இவற்றில் முதலாவது இந்த யோசனையைக் கொண்டுவரப்பட்டமைக்கு காரணமாக அமெரிக்காவுக்கும், ஜனாதிபதி ஒபாமாவுக்கும் எதிராக உள்நாட்டில் கடுமையான, ஆத்திரமான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அண்மையில் அமெரிக்காவின் பொஸ்டன் நகரில், நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டியின் போது அது முடிவடையும் இடத்தில் ஒன்றன்பின் ஒன்றாக வெடித்த குண்டுகளினால் 150க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். மூன்று பார்வையாளர்கள் உயிரிழந்தனர்.

புது வருடத்திற்கு முதல் நாள் அதிகாலை யாழ்ப்பாணத்தின் உதயன் பத்திரிகை அலுவலகத்திற்குள் ஆயுதங்களுடன் புகுந்த குழுவொன்று தாக்கி சூடு நடத்தி, அச்சியந்திரங்களைச் சேதப்படுத்தியமையைக் கண்டிக்காத ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அமெரிக்காவில் மரதன் ஓட்டப் போட்டியின்போது நடந்த குண்டு வெடிப்பைக் கண்டித்தார். சம்பவத்தில் காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு தனது இரங்கலைத் தெரிவித்துக் கொண்டார். ஈராக்கில் அல்லது ஆப்கானிஸ்தானில் இடம்பெறும் குண்டு வெடிப்புகளில் கொல்லப்படும் மக்களுக்காகவோ, இரண்டு மாதங்களுக்கு முன்னர், மெக்சிக்கோவில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் களியாட்ட விடுதியொன்றில் கொல்லப்பட்டதற்கோ ராஜபக்ஷ இவ்வாறு சோகத்தை வெளிப்படுத்தவில்லை.

### அமெரிக்காவின் நல்லெண்ணத்தை ஈட்டும் எத்தனம்

இரண்டாவது, ஜனாதிபதி ராஜபக்ஷவின் உறவினரான அமெரிக்காவுக்கான இலங்கை தூதுவர் ஜாலிய விக்கிரமசிங்க, அண்மையில் ஆங்கிலத்தில் எழுதியிருந்த கட்டுரையில்,

"பொருளாதாரம் மற்றும் அரசியல் அதிகாரம் கிழக்கை நோக்கி மாறி வரும் பின்னணியில், மேற்குலகம், ஆசியப் பிராந்தியம் முழுவதிலும் உள்ள தனது வர்த்தக, போர்க் கட்டமைப்பை வலுப்படுத்துவதன் மூலம் அதற்கு பதிலளித்து வருகிறது. ஜனாதிபதி ஒபாமாவின் வெளிநாட்டுக் கொள்கை ஆசியாவை இலக்கு வைத்து முன்னெடுக்கப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில், அமெரிக்கா, இலங்கையுடனான மூலோபாய தொடர்புகள் குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

பிராந்தியத்தில் நீண்ட கால ஜனநாயக அரசியல் வரலாற்றை கொண்டிருக்கும் இலங்கையில் வர்த்தக, போர் மற்றும் கலாசார பங்காளிகளாக இணைவதற்கு அமெரிக்காவுக்குப் பெரும் சந்தர்ப்பங்கள் உள்ளன. இலங்கையின் முன்னணி பொருளாதார பங்காளி என்ற இடத்தை அமெரிக்காவுக்கு வழங்குவதற்கான பல அம்சங்கள் இலங்கையிடம் இருக்கின்றன.

இரண்டு நாடுகளின் இராணுவத்திற்கும் இடையில் தொடர்புகள் இருப்பதுடன், யு.எஸ்.எயிட் ஊடான அமெரிக்காவின் உதவிகள் தொடர்ந்தும் அதிகரித்துள்ளன. இந்தச் சாதகமான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள இலங்கையும் அமெரிக்காவும் செயற்பாட்டு ரீதியான மூலோபாயங்கள் குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். எதிர்காலத்தில், அமெரிக்காவின் முக்கிய பூகோள அரசியல் ரீதியான மற்றும் மூலோபாய நண்பனாக இலங்கை மாற முடியும்" எனக் குறிப்பிட்டுள்ளது. ராஜபக்ஷ குடும்பத்தின் ராஜதந்திர அரசியல்வாதியான ஜாலிய விக்கிரமசிங்க, ஆசியாவில் எழுச்சி பெற்று வரும் சீனாவின் அதிகாரத்தை சமப்படுத்துவதற்காக அமெரிக்கா, இலங்கையுடன் கூட்டிணைவை ஏற்படுத்த வேண்டும் என்கிறார். ஒபாமாவின் பசிபிக் போர் அரசியலுடன் இலங்கையையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பது அவரது கருத்து. அத்துடன் இலங்கை பொருளாதார ரீதியாகவும் போர் ரீதியாகவும் அமெரிக்காவுக்குப் பயன்படும் என்பதே அவரது கணிப்பு.





மூன்றாவது, அமெரிக்காவின் நெஞ்சத்தை வென்றெடுப்பதற்காக அவ்வப்போது இவ்வாறான கருத்துக்களை அரச தரப்பினர் வெளியிட்டு வருகின்றனர். அதுமட்டுமன்றி தரகர்களையும் சேவையில் இணைத்துக் கொண்டுள்ளனர். அவர்களில் ஒருவர்தான் ரொபர்ட் ஜே. தொம்ஸன். இந்தப் பணிக்காக இயங்கும் அவரது அரசசார்பற்ற ஆலோசனை நிறுவனம் ஒன்றுண்டு. அவருக்கு மாதாந்தம் 8.3 லட்சம் (66 ஆயிரம் டொலர்கள்) ரூபாவை இலங்கை அரசு செலுத்துவதாக தற்போது இணையத்தளங்களில் செய்திகள் வெளிவருகின்றன.

தூதுவர் ஜாலிய விக்கிரமசிங்கவினால் ஒழுங்கு செய்யப்பட்டதாகக் கூறப்படும் இந்தத் தரகர் மூலம், இலங்கையின் ராஜபக்ஷ நிர்வாகம் தொடர்பாகவும், இலங்கை, மனித உரிமைகளை மதிக்கும் நாடு என்ற நல்லெண்ணத்தையும் அமெரிக்க அரசிடம் உருவாக்க இலங்கை அரசு எதிர்பார்த்துள்ளது. அந்தத் தரகருக்கான கொடுப்பனவை இலங்கை மத்திய வங்கியே வழங்குவதாகக் கூறப்படுகிறது.

இதற்கு மேலதிகமாக மாதாந்தம் 33 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் செலுத்தி, 'மெஜோரிட்டி குரூப்' என்ற அமெரிக்க நிறுவனத்தைப் பிரசாரத்துக்காக அரசு வாடகைக்கு பெற்றுள்ளது. இந்த நிறுவனத்திற்கு கடந்த 5 வருடங்களாக இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருவதாகவும் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த உண்மையை ஏன் இலங்கை அரசு நாட்டு [illegible]

[illegible] நிலைப்பாடு

இத்தகைய சூழ்நிலையிலும் அமெரிக்கா, இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை. இந்த நிலையில், இலங்கைக்கு வழங்கும் உதவிகளில் 20 வீதத்தை குறைக்குமாறு அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஜோன் கெரி யோசனை முன்வைத்துள்ளார். அமெரிக்கா, இலங்கை வடபகுதி அகதிகளுக்காக செயற்படுத்த முயற்சித்த பல வேலைத்திட்டங்களை இராணுவமும், அரசும் தலையிட்டு, வேறு வழியில் திசை திருப்பியமையே இதற்கு காரணம் என அவர் கூறியுள்ளார். எனினும் இவ்வாறு வடக்கில் மக்களின் வாழ்க்கையில் இராணுவம் தலையிடுவதில்லை என இலங்கை அரசு தொடர்ந்தும் கூறும் கதைகளை அமெரிக்காவின் இந்தக் கருத்து பொய்த்து வெளிக் கிளம்பச் செய்துள்ளது. அமெரிக்காவின் 2013 ஆம் ஆண்டுக்கான குறைக்கப்பட்ட உதவிகளில் இலங்கைக்கான உதவிகளே அதிக அளவில் குறைக்கப்பட்டுள்ளன. அமெரிக்கா இலங்கைக்கான உதவிகளை குறைத்தமை தொடர்பான செய்தி பகிரங்கப்படுத்தப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர், இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் மிசேல் ஜே. சிசோன், இலங்கையின் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றிய போது, கடந்த மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் நிறைவேற்றப்பட்ட யோசனைகளை செயற்படுத்த இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால், அமெரிக்க அரசு, மனித உரிமை பேரவையிலும் அதற்கு வெளியிலும் எடுக்க வேண்டிய மேலதிக நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்து பார்க்கும் என கூறியிருந்தார். அத்துடன் சுயாதீன சர்வதேச விசாரணையொன்றையும் அவர் அங்கு வலியுறுத்தினார்.

அத்துடன் விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் செயற்பாடுகளில், இலங்கைக்கு அமெரிக்க அரசு பெரும் உதவிகளை வழங்கியதாகவும் தெரிவித்தார். விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பு எனத் தடை செய்து, அந்த அமைப்பு பெற்று வந்த சர்வதேச நிதியுதவிகளை நிறுத்த அமெரிக்காவே முதன்மை இடத்தை வகித்தது எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.


அடுத்து என்ன நடக்கும் என்பது இலங்கை அரசு எடுக்கும் நடவடிக்கையின் அடிப்படையிலேயே தங்கியுள்ளது எனத் தெரிவித்த அவர், இந்த வருடம் செப்டெம்பர் மாதமும், ஐ.நா. அடுத்த மார்ச் மாதமும், மனித உரிமை ஆணையாளர் இலங்கை தொடர்பாக முன்வைக்க உள்ள அறிக்கையின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறினார்.

அமெரிக்காவைப் போன்று, இலங்கை தொடர்பான அறிக்கை ஒன்றை முன்வைத்த பிரித்தானிய வெளிவிவகார அலுவலகம், இலங்கையின் ஊடக சுதந்திரம் தொடர்பாக தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது. ஊடக சுதந்திரத்துக்கு கொடுக்கப்படும் அச்சுறுத்தல்களை நிறுத்தி, போர்க் காலத்தில் ஊடகங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் சம்பந்தமாக விரைவுத் திறனான விசாரணை நடத்தி, இலங்கையில் ஜனநாயக நிர்வாகத்தை ஏற்படுத்துவது அத்தியாவசியமானது என இவ்விரண்டு நாடுகளும் மீண்டும் மீண்டும் கூறியுள்ளன.

அதேவேளை, ராஜபக்ஷ அரசுக்கு அமெரிக்காவுடன் சாதாரணமாக பகிரங்க முனைப்புகளை மேற்கொள்ள ஏன் முடியாதுள்ளது? என்ற கேள்வியும் இங்கு எழுகிறது. இலங்கையில் தனது ஆதரவாளர்களைக் கொண்டு ஒபாமாவின் உருவப் பொம்மைகளை எரித்து, ஏகாதிபத்திய அமெரிக்கா ஒழிக எனக் கூறுவதுடன், மக்களின் பல கோடி ரூபா பணத்தைச் செலவிட்டு, அமெரிக்காவை நண்பனாக மாற்றும் தேவை ஏன் ஏற்பட்டுள்ளது?. இது அரசியல் வரலாற்று வித்தையா? மனித உரிமை மீறல்களை மூடி மறைக்க மேற்கொள்ளப்படும் முயற்சியா?. அல்லது இவை இரண்டும்தானா? ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கை ஓர் நவரைபடம்

■ நிவேதிதா மோகன்.

"அம்மா எனது பிறந்தநாளை இப்படி ஏற்பாடு செய்தது யார் என்று கேட்டாள். அம்மாவின் கை எங்கோ போனது. கை போன பாதையைக் கூர்ந்து பார்த்தாள் நிலா. அதுதான் ஆதவ். நிலாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழியவும் அவள் கண்ணால் நன்றி கூறினாள்.

மறுநாள் நிலா பாடசாலைக்குச் செல்லும் போது நிலாவின் பக்கத்து வீட்டு அக்கா நிலாவிடம், 'கொஞ்சம் பேசலாமா?' என்று கேட்டாள். உடனே நிலா 'தாராளமாக சொல்லுங்கள்' என்றாள்.

'நிலா அந்தப் பையன் யாரு?' என்று கேட்க நிலாவுக்கு உயிர் போய் வந்தது. நிலா ஒன்றுமே பேசாமல் தலையை கீழே குனிந்தவாறு நின்றாள். உடனே அந்த அக்கா 'நிலா, காதலிப்பது தவறு இல்லையம்மா, ஏனென்றால் நானும் காதலித்துத்தான் கல்யாணம் பண்ணினேன். சந்தோசம் தான். ஆனால் உனது வயதில் அம்மாவைப் பற்றி கொஞ்சம் யோசி' என்று சொல்லி விட்டுச் சென்றாள்.

நிலாவுக்கு தான் செய்வது சரியா? பிழையா? என்று மனதுக்குள்ளே பேசிக் கொண்டாள். திடீர் என்று அவள் முன்னால் ஆதவ் வந்து நின்றான். உடனே நிலா 'ஐயோ!' என்று கத்திவிட்டாள். 'நமக்கு இந்தக் காதல் தேவையா?' என்று பதற்றத்துடன் கேட்டாள்.

அதற்கு ஆதவ் 'என்ன?' என்று கேட்க, நிலா மீண்டும் 'இல்லை இந்தக் காதல் தேவையா' என்று கேட்டாள்.

'உங்களுக்கு என்ன பார்த்தா எப்படி தெரியுது? காதலிக்கவில்லை என்றால் அப்பவே சொல்ல வேண்டியது தானே, இப்ப வந்து என்ன இப்படி' என்று கத்தினான். இதைப் பார்த்த நிலாவுக்கு அவள் அப்பா சொன்ன வார்த்தைதான் நினைப்புக்கு வந்தது. 'ஒருத்தருக்குக் கொடுத்த வார்த்தையை உயிர் போனாலும் காப்பாற்ற வேண்டும்' அதனால் நிலா அழுது கொண்டு 'நான் உங்களை விட்டுப் போகவே மாட்டேன்' என்று சொல்லிவிட்டு ஓடிப்போனாள்.

அன்று நிலாவின் பிறந்தநாள்..

நிலாவின் தோழிகள் நிலாவை அவர்களின் வீட்டுக்கு அழைத்தனர்.

நிலாவின் அம்மா முதல் முறையாக நிலாவை அவள் இஷ்டம் போல என்ன வேண்டும் செய்யலாம் என்று அனுமதி கொடுத்தார். நிலா அவளின் அம்மாவின் காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கி விட்டு 'அம்மா நான் இன்று மாலை 4 மணிக்கு வெளியில் தோழிகளோடு போகலாமா?' என்று கேட்டாள். அதற்கு நிலாவின் அம்மாவும் இன்று உன்னுடைய பிறந்தநாள், போய் பத்திரமாக வா'' என்று சொல்லி அனுப்பினார்.

மாலை 4 மணியளவில் நிலா அவளது பிறந்தநாள் உடையில் தோழி வீட்டுக்குச் சென்றாள். அங்கு சென்றதும் தோழிகள் நிலாவின் கண்ணைக்கட்டி நிலாவை வேறு ஒரு இடத்துக்கு அழைத்துச் சென்றனர். நிலாவுக்கு எங்கு போகிறோம், என்ன நடக்கிறது என்று ஒன்றுமே புரியாமல் தவித்தாள். கடைசியாக அந்த மூன்று தோழிகளும் நிலாவை ஒரு அறையில் விட்டு, அவள் கையில் ஒரு பையைக் கொடுத்து அந்த அறையைப் பூட்டினார்கள்.

அறைக்குள் சென்ற நிலா கண்ணில் கட்டப்பட்ட துணியை அவிழ்த்துவிட்டு அந்தப் பையைப் பார்க்கையில் அதற்குள் ஒரு விலைமதிப்புள்ள ஒரு சிவப்பு நிற உடையும், அதற்கேற்ற ஆபரணங்களும் இருந்தன. நிலா அவற்றை எடுத்து அணிந்து, அறையைத் திறந்து வெளியே வந்தாள். அறையை விட்டு வெளியே வந்த நிலாவால் ஒன்றையுமே பார்க்க முடியவில்லை. ஒரே இருட்டு.. அதனால் நிலாவால் எங்கு போவது என்று கூடத் தெரியாமல் அதே இடத்தில் நின்றாள்.

அப்போது அவளது கைகளை யாரோ பிடித்து, எங்கோ அழைத்துச் சென்றனர்.

திடீர் என Happy Birth Day நிலா என்ற சத்தத்தோடு ஒரே வெளிச்சம். நிலாவின் கண்கூசும் அளவுக்கு வெளிச்சம். வெளிச்சத்தில் நிலாவின் அழகைப் பார்த்து அதிர்ந்து நின்றார்கள். பின், நிலா அவள் கைகளை யார் பிடித்தார்கள் என்று திரும்பிப் பார்க்கையில், நிலாவால் அவள் கண்களை நம்ப முடியவில்லை. அதுதான் நிலாவின் அம்மா. நிலா அவளது அம்மாவை அணைத்து அழத்தொடங்கிவிட்டாள். அதற்குப்பின் நிலாவுக்குப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

அம்மா எனது பிறந்தநாளை இப்படி ஏற்பாடு செய்தது யார் என்று கேட்டாள். அம்மாவின் கை எங்கோ போனது. கை போன பாதையைக் கூர்ந்து பார்த்தாள் நிலா. அதுதான் ஆதவ். நிலாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழியவும் அவள் கண்ணால் நன்றி கூறினாள். (தொடரும்)

# ஆற்றலை அதிகரிக்கும் பயிற்சிகள்





**உத்தானாசனத்தின் தழுவல்**

முதலில் நேராக நிற்க வேண்டும். பின்னர் இரண்டு கால்களுக்கும் இடையில் சிறிது இடைவெளிவிட்டு, அகட்டி நிற்க வேண்டும். இந்த நிலையில், மூச்சை இழுத்தவாறே இரு கைகளையும் முன்புறமாக உயர்த்தித் தலைக்கு மேல் கொண்டுசெல்ல வேண்டும். பார்வை நேராக இருக்க வேண்டும். சில விநாடிகளுக்குப் பிறகு மூச்சை வெளியேவிட்டபடி, முன்பக்கமாகக் குனிய வேண்டும். இந்த நிலையில் குனிய முடியவில்லை என்றால், கால்களைச் சற்று மடித்துக்கொள்ளலாம். குனிந்து, கைகளை இரு பாதங்களின் பக்கவாட்டிலும் வைக்க வேண்டும். மூச்சை உள்ளே இழுத்தபடி, உடலை நிமிர்த்திக் கைகளைத் தலைக்கு மேல் கொண்டு செல்ல வேண்டும். அதன் பிறகு மூச்சை வெளியே விட்டபடியே, கைகளைப் பழைய நிலைக்குக் கொண்டுசெல்ல வேண்டும்.

**பலன்கள்:** இந்த நிலை முன்பு செய்த ஆசன நிலையின் எதிர்வினைகளை, வலிகளைப் போக்கி உடலை நடுநிலைப்படுத்துகிறது. முதுகுப் பகுதி மற்றும் தொடைப் பகுதியை நன்கு நீட்சியடையச் செய்து, இந்தப் பகுதிகளுக்கு நல்ல இரத்த ஓட்டம் கிடைக்கச் செய்கிறது.

**குறிப்பு :** யோகாசனம் தொடங்குவதற்கு முன்பு சில நிமிடங்கள் உட்கார்ந்தோ, நின்ற நிலையிலோ உடலையும் மனதையும் அமைதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அதாவது சாதாரணமாக மூச்சை உள்ளிழுத்து ஒரு விநாடிக்குப் பிறகு வெளிவிட வேண்டும். ஒவ்வொருவர் உடல் அமைப்புக்கும் ஏற்றபடி யோகா ஆசனங்களில் சில மாற்றங்கள் தேவைப்படும். எனவே, யோகா பயிற்சியாளரை அணுகி உங்கள் உடலுக்கு ஏற்ற யோகா பயிற்சிகளைக் கற்று, அதன்படி செய்வதே சரியானது.

"யோகா பயிற்சியாளரை அணுகி உங்கள் உடலுக்கு ஏற்ற யோகா பயிற்சிகளைக் கற்று, அதன்படி செய்வதே சரியானது.



# கறுப்பு நிலா

நிலவை மஞ்சள் என்கிறார்கள்
மண்ணில் பலர்.....
வெள்ளை என்கிறார்கள்
வேறு சிலர்....
யாருக்கும் சொல்லவேண்டாம்
உஷ்ணமாகிப் போன
என் ஊமைப் பொழுதுகள்
குளிர்கொள்ளும்
ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும்
என் உள்ளம் கண்டு
பிரமித்து ரசிக்கும்
நிலவின் நிறம் கறுப்பு என்று...!

குப்பிளான், செ.ரவிசாந்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைதுறைப்பற்று ஆயுள்வேத வைத்தியசாலையை இயக்குக

## பிரதேச மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, மே 6

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேசத்தில் உள்ள ஆயுள் வேத வைத்தியசாலையை மீளவும் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இங்குள்ள மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு கரைதுறைப் பற்று பிரதேச சபையினால் நிர்வகிக்கப்பட்டு வந்த கரைதுறைப்பற்று ஆயுள்வேத வைத்தியசாலையை மீள் குடியமர்வின் பின்னர் மீளவும் இயங்கச் செய்வதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வைத்தியசாலை ஆரம்பிக்கப்படுமாயின் சுமார் 4 ஆயிரம் பேர் வரையில் பயன் பெற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கீழ் முல்லைத்தீவு, முள்ளியவளை, செம்மலை, முள்ளிவாய்க்கால், கொக்கிளாய் ஆகிய ஐந்து உப -அலுவலகங்கள் உள்ளன. இதில் கொக்கிளாய் உப - அலுவலகம் தவிர ஏனைய உப - அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. இதைப்போன்று இந்த வைத்தியசாலையையும் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)




வவுனியாத் தமிழ்ச் சங்கம் நடத்திய வேறிக்குமரனின் ஆறு நூல்களின் அறிமுக விழாவில் ஆய்வாளர்கள் விழா மேடையில் அமர்ந்திருப்பதையும் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையுரை ஆற்றுவதையும் சபையினரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (க-402)

## மீண்டும் முளைக்கும் இராணுவச் சாவடி

முள்ளியவளை, மே 6

முள்ளியவளை மத்தி கிராம அலுவலர் பிரிவில் தேக்கம் காட்டுப் பகுதியில் இராணுவச் சாவடி ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

இங்கு நடைபெறவிருந்த குடியேற்றம் நிறுத்தப்பட்ட பின்னர் அரை நிரந்தர வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப் பட்டன.

இந்த நிலையில் தற்போது இராணுவச் சாவடி அமைக்கப்பட்டு வருகின்றது.

முல்லைத்தீவு - மாங்குளம் வீதிக்கு மேற்காக குடியேற்றப் பகுதியைக் கண்காணிக்கக் கூடிய விதத்தில் இந்தக் காவலரண் அமைக்கப்பட்டு வருகின்றது.

சில மாதங்களுக்கு முன்னர் இந்த இடத்துக்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ காவலரண் அகற்றப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (ம-433)

## உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவுகள்

# கிளிநொச்சி வலயத்தில் 3 பாடசாலைகளில்

அக்கராயன், மே 6

கிளிநொச்சி கல்வி வலயத்தில் 3 பாடசாலைகளில் உயர்தரத்தில் கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் தெரிவித்துள்ளார்.

முழங்காவில் மகா வித்தியாலயம் அக்கராயன் மகா வித்தியாலயம், கிளிநொச்சி மகா வித்தியாலயம் என்பனவற்றில் கணித, விஞ்ஞான பிரிவுகள் கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகின்றன என்று தெரிவித்தார்.

முழங்காவில் மகா வித்தியாலயத்தில் பாடசாலை முதல்வர் க.கணபதிப்பிள்ளை தலைமையிலும், அக்கராயன் மகா வித்தியாலயத்தில் முதல்வர் க.மதுரநாயகம் தலைமையிலும், கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் முதல்வர் அ.பங்கையற்செல்வன் தலைமையிலும் தொடக்க நிகழ்வுகள் நடைபெற்றன.

இந்தத் தொடக்க நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ம-18)

# சுயதொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு கிளிநொச்சியில் ஓய்வூதிய பாதுகாப்புத் திட்டம்

கிளிநொச்சி, மே 6

கிளிநொச்சி மாவட்டத்தில் சுயதொழில் முயற்சியில் ஈடுபடுபவர்களின் நன்மை கருதி சமூக ஓய்வூதிய பாதுகாப்புத் திட்டம் கடந்த ஜனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்று யாழ். மாவட்ட சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்ட இணைப்பாளரும், கிளிநொச்சி மாவட்டபதில் இணைப்பாளருமான பாக்கியராசா பிரதீபன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைக் காலத்தில் சமுர்த்தித் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டமும் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் எடுத்த முயற்சி காரணமாக நடைமுறைக்கு வந்துள்ளது.

ஏற்கனவே கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய 23 மாவட்டங்களிலும் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வரும் நிலையில் தற்போது கிளிநொச்சி மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

**"ஓய்வுதியத் திட்டத்தில் தற்போது கிளிநொச்சி மாவட்டத்துக்கு இரண்டாம் திட்டமான சுரக்குமா திட்டமே செயற்படுத்தப்பட்டு வருகின்றது.**

சமூக பாதுகாப்பு ஓய்வுதியத் திட்டத்தில் தற்போது கிளிநொச்சி மாவட்டத்துக்கு இரண்டாம் திட்டமான சுரக்குமா திட்டமே செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆரம்பத்தில் ஏனைய மாவட்டங்களில் செயற்படுத்தப்பட்ட சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தை கிளிநொச்சி மாவட்டத்தில் குறிப்பிட்ட காலமேனும் செயற்படுத்தி சுயதொழில் முயற்சியாளர்களை இணைத்துக் கொள்ள வேண்டும் எனவும் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். (ம-86)

# சட்ட விரோத சிறுபோகத்தை அழிப்பதற்கு நடவடிக்கை

அக்கராயன், மே 6

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு புறம்பாக கூடுதல் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் நெற்பயிர்கள் அழிக்கப்படவுள்ளன என்று கிளிநொச்சி அரச அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குளங்களின் கீழ் சிறுபோக கூட்டங்கள் நடத்தி விவசாயிகளின் கருத்துக்கள் குளங்களின் நீர் மட்டம் என்பவற்றுக்கு அமைவாக சிறுபோக நிலப்பரப்பு தீர்மானிக்கப்பட்டது.



நடத்தப்பட்ட கூட்டங்களில் விவசாயிகள் சட்ட விரோத விதைப்பு தொடர்பாக கருத்துக்கள் கூறி அதனைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றும் எம்மிடம் கோரியிருந்தனர்.

இந்த நிலையில் மாவட்ட மட்டத்தில் செயலணி ஒன்றை அமைத்துச் சிறுபோக நெற்செய்கை நிலங்கள் அளவீடு செய்து இதன் போது கூடுதல் நெற்செய்கை இனங்காணப் பட்டுள்ளது.

இந்த நிலையில் அவை விரைவில் அழிக்கப்படவுள்ளன. சட்டவிரோத பயிர் செய்கையை அழிக்காவிட்டால் உண்மையான விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள். குளங்களின் நீர் மட்டம் குறைந்து வறட்சி ஏற்பட்டு பயிரழிவுகள் ஏற்படும். இதனை தவிர்க்க சட்டவிரோத நெற்செய்கையை அழிப்பதை தவிர வேறுவழியில்லை.- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-18)

# வகை தொகையின்றி கடத்தப்படும் மரங்கள்

முல்லைத்தீவு, மே 6

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தைகிழக்கில் இருந்து சட்ட விரோதமான வகையில் வகைதொகையின்றி காட்டு மரங்கள் கடத்தப்பட்டு வருவதாக இந்தப்பகுதி மக்கள் கவலைத் தெரிவித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள கிராமங்களில் உள்ள காடுகளில் இருந்து பெறுமதி வாய்ந்த முதிரை, பாலை, யாவறணை ஆகிய மரங்கள் சட்ட விரோதமான வகையில் கடத்தப்பட்டு வருகின்றன.

மீள்குடியமர்ந்த மக்கள் தமது கட்டுமானத் தேவைகளுக்குரிய காட்டுமரங்களைப் பெற்றுக்கொள்ளமுடியாத நிலை இங்கு காணப்படுகின்றது. ஆனால். இரவு, பகல் வேளைகளில் காட்டு மரங்கள் கடத்தப்பட்டு வருகின்றன. இதனைக்கட்டுப்படுத்துவதற்கு அரச அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதில்லை எனவும் இந்தப் பிரதேச மக்கள் கடும்விசனம் தெரிவித்துள்ளனர். (க-6)

# திருக்கேதீஸ்வர திருவிழா

மன்னார், மே 6

சரித்திரப் பிரசித்தி பெற்ற கௌரி அம்பாள் உடனுறை திருக்கேதீஸ்வரப் பெருமானின் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 15 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இந்தக் கோயிலின் முதலாம் நாள் இரவுத் திருவிழா இவ்வாண்டும் வழமை போல திருகோணமலை மாவட்ட மக்களால் ஒன்றிணைந்து நடத்தப்படவுள்ளது.

திருக்கேதீஸ்வர பெருந்திருவிழாவுக்கென திருக்கோணேஸ்வர ஆலய பரிபாலன சபையால் கோணேஸ்வரத்திலிருந்து பாவநாச தீர்த்தம் கேதீஸ்வரத்துக்கு எதிர்வரும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை எடுத்துச் செல்லப்படவுள்ளது.

திருகோணமலை மாவட்ட பக்தர்கள் முதலாம் திருவிழாவுக்குச் செல்வதற்கு வசதியாக விசேட போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும், கேதீஸ்வரம் செல்ல விரும்பும் பக்தர்கள் தமது பெயர்களை திருகோணமலை வில்லூன்றி ஸ்ரீ முருகன் தொண்டர் சபையில் பதிவு செய்து கொள்ளுமாறு திருகோணமலை மாவட்ட கேதீஸ்வர ஆலய திருவிழாச் சபையின் செயலாளர் ந.செல்வஜோதி தெரிவித்துள்ளார். (ம-8)

# சிவில் நிறுவனங்களின் மன்றம் அமைப்பது குறித்து ஆராய்வு

வவுனியா, மே 6

சிவில் நிறுவனங்களின் மன்றம் அமைப்பது சம்பந்தமான கூட்டம் நேற்று முன்தினம் காலை வவுனியா நெல்லிஸ்ட்டார் விடுதியில் இலங்கை மனித உரிமைகளுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் வவுனியா மாவட்ட மனித உரிமைக்குழு இணைப்பாளர் எஸ்.ராஜ்மோகன் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் சமகால அரசியலில் தமிழ், சிங்கள, முஸ்லிம் சிவில் சமூகத்தின் பங்களிப்பு தொடர்பான கருத்து பகிர்வு இடம் பெற்றது.

வடமாகாணத்திலும் தேசிய அடையாள அட்டை காட்டுமாறு தமிழ், சிங்கள, முஸ்லிம்கள் ஓமந்தை சோதனைச் சாவடியில் இராணுவத்தினர் நிற்பந்திப்பது ஏன்?, போர்க் காலத்தில் காணப்பட்ட நடைமுறைகளை இன்னமும் இராணுவத்தால் ஏன் கடைப் பிடிக்கப்படுகிறது.

ஓமந்தை சோதனை சாவடியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் கடுமையாக சோதனை செய்யப்படுவது ஏன்? மாணவர் விசேட அடையாள அட்டை காட்டப் பட்டாலும் தேசிய அடையாள அட்டை காட்டுமாறு இராணுவம் நிர்ப்பந்திப்பதன் மூலம் ஜனநாயகத்தில் மாணவர் சமூகம் ஒதுக்கப்படுகிறது.

நான்கு பேர் கூடி கதைத்து கருத்து ஒன்றை வெளியிட்டால் அந்தக் கருத்து தொடர்பாக சிவில் சமூகத்தினர் சிலர் அரசால் இன்னமும் பயங்கரவாத தடை சட்டத்தின் மூலம் கைது செய்யப்படுகிறார்கள்.

இப்படியான நடைமுறைகளால் ஜனநாயகத்தை குழி தோண்டி இலங்கையில் சட்டம் உரிய முறையில் கடைப்பிடிக்கவில்லை என்ற கருத்துக்கள் பொது மக்கள் தரப்பில் இருந்து இதன் போது கருத்துத் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் இலங்கை மனித உரிமைக்கான நிலைய பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன், இலங்கை மனித உரிமை நிலை குருநாகல் இணைப்பாளர் எஸ்.மாமங்கராஜா, முன்னாள் கிழக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் அகமட் முனாஸ் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள் தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் தொண்டர் அங்கத்தவர்கள் பல்கலைக் கழக மாணவர்களும் கலந்து கொண்டனர். (ம-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள்

தருவது வித்தியா

## உங்களுக்கு எப்படி?

**மேஷம்:** மனசாட்சிக்கு விரோதமின்றிச் செயற்பட வேண்டுமென நினைப்பீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். சக ஊழியர்களுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**இடபம்:** சகோதரரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். உங்கள் ஆலோசனையை ஏற்றுக்கொள்வார்கள். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் மூத்த அதிகாரிகள் முக்கிய அறிவுரைகள் தருவார்கள். நீண்ட நாள் பிரார்த்தனைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** உங்களை அறியாமலேயே ஒருவித படபடப்பு, தாழ்வு மனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். வியாபாரத்தில் புதிய முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களை கற்றுக் கொள்வீர்கள். தடைகள் யாவும் நீங்கும். யர்களைப் பற்றி குறை கூற வேண்டாம்.

**கடகம்:** புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். எதிலும் முன்யோசனையுடன் செயற்படப்பாருங்கள்.

**சிங்கம்:** உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். எதிர்பாராத பண வரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**கன்னி:** குடும்பத்தில் அமைதி நிலவும். சகோதர வகையில் நன்மை கிடைக்கும். வெளிவட்டாரத்தில் கௌரவம் கிட்டும். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**நாளை**

*சித்திரை-24 செவ்வாய்க்கிழமை 07.05.2013*
*திதி: திரயோதசி பி.இ. 04.25 வரை*
*நட்சத்திரம்: ரேவதி பி.இ. 05.23 வரை*
*சுபநேரம்: 10.25- 11.55 வரை*
*இராகுகாலம்: 02.55- 04.25 வரை*

**துலாம்:** சகோதரர்களால் பயனடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபார ரீதியாக பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார்.

**விருச்சிகம்:** உறவினர்கள் ஒத்துழைப்பார்கள். இங்கிதமாகப்பேசி கடினமான காரியங்களையும் சாதிப்பீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். உத்தியோகத்தில் உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்து கொள்வீர்கள்.

**தனுசு:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் அனுபவம் உள்ள வேலையாள்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**மகரம்:** கடந்தகாலத்தில் கிடைத்த நல்ல வாய்ப்புகளையெல்லாம் சரியாகப் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருந்துவீர்கள். வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். எதிர்ப்புகள் அடங்கும்.

**கும்பம்:** யாரையும் பரிந்துரை செய்ய வேண்டாம். வியாபாரத்தில் இழப்புகள் ஏற்படும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் விவாதம் வேண்டாம். எதிலும் பொறுமையுடன் செயற்படப்பாருங்கள்.

**மீனம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | | 2 | | | | | 1 |
| 3 | 9 | | | | | | 6 | |
| | 2 | | | 4 | 9 | 7 | | 3 |
| | 3 | | | | 7 | | | 6 |
| 8 | | 2 | 4 | | 6 | 1 | | 9 |
| 1 | | | 3 | | | | 7 | |
| 4 | | 9 | 5 | 6 | | | 2 | |
| | 1 | | | | | | 9 | 8 |
| 2 | | | | | 3 | | 1 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 9 | 6 | 2 | 3 | 1 | 7 | 8 | 5 |
| 3 | 8 | 5 | 4 | 7 | 6 | 1 | 2 | 9 |
| 2 | 1 | 7 | 5 | 9 | 8 | 4 | 6 | 3 |
| 1 | 7 | 4 | 3 | 8 | 2 | 5 | 9 | 6 |
| 8 | 6 | 2 | 9 | 5 | 7 | 3 | 1 | 4 |
| 9 | 5 | 3 | 1 | 6 | 4 | 8 | 7 | 2 |
| 6 | 3 | 1 | 8 | 2 | 5 | 9 | 4 | 7 |
| 7 | 4 | 9 | 6 | 1 | 3 | 2 | 5 | 8 |
| 5 | 2 | 8 | 7 | 4 | 9 | 6 | 3 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரண்டு தடவை வராமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில்


# 27 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

1986 சித்திரை 29
வைகாசி 06



# அமரர் சிறீ சபாரத்தினம்

**உன்னத வீரர்கள் ஒருபோதும் மரணிப்பதில்லை**

விடுதலையை நேசித்து
வீறு நடைபோட்ட ஒப்பற்ற தலைவன்
சிறீ சபாரத்தினம்!
மற்றும் அவரோடு கூட சகோதரப் போரில்
படுகொலை செய்யப்பட்ட போராளிகள்,
இயக்க ஆதரவாளர்கள்,
பொதுமக்களுக்கும்
மீண்டும் எமது கண்ணீர் அஞ்சலிகள்!

(37039) (2-6)

TELO
தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)
TAMIL EELAM LIBERATION ORGANIZATION (TELO)
இணையத்தள முகவரி : www.telo.org

## காணி தேவை

தொழில் மையம் அமைப்பதற்கு நிலாவரை, அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு அண்மித்த பகுதியில் 40-60 பரப்புக் காணி குறைந்த விலையில் தேவை.

தொடர்பு: 077 316 8650

(37071)(6.11)

## நிலக்ஷன் கட்டடப் பொருள்

சகல விதமான, கொங்கிறீற் கற்கள்(35/=), வீட்டுத் தூண், வேலித் தூண், பூக்கல், தூக்கம், லூவாஸ் கற்கள், அனைத்தும் ஒரே இடத்தில்..... உங்கள் தெரிவுக்கு.

(35011)(5-6)

அல்லாரை வீதி,
077 925 8935 மீசாலை கிழக்கு, மீசாலை.


## பெறுகைகளுக்கான அழைப்பு

### விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சு வட மாகாணம்

வட மாகாண காணி நிர்வாகத் திணைக்களத்தின் தென்னம் நாற்றுமேடைக்கு தேவையான நல்லின விதைத் தேங்காய்களினைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு வழங்குநர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| தாய்த்தாவரத்தின் தன்மை | தேவையான அளவு | தேங்காய் ஒன்றின் விலை | வழங்கக்கூடிய விதைத்தேங்காய்களின் அளவு |
|---|---|---|---|
| 25-30 ஆண்டிற்குட்பட்ட நோயற்ற நல்லின தென்னை | 100,000 | | |

நாட்டமுள்ள வழங்குநர்கள் மேற்குறிப்பிட்ட விவரங்களை உள்ளடக்கி சுயமாசத் தயாரிக்கப்பட்ட கூறுவிலைப் படிவங்களினை முத்திரையிடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "விதைத்தேங்காய் வழங்குவதற்கான கூறுவிலை" எனக்குறிப்பிட்டு 20.05.2013 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்பதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ கீழ்காட்டப்பட்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும். மேலதிக விவரங்களினை **வட மாகாணக் காணி நிர்வாகத் திணைக்களம் இல.295, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்** எனும் முகவரியில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். (தொ.பே. இல: 021 321 5539)

முத்திரையிடப்படாத, தாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

கூறுவிலைகள் யாவும் 20.05.2013 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு திறக்கப்படும். கூறுவிலைகள் திறக்கப்படும் போது கூறுவிலைதாரர் அல்லது அவரின் பிரதிநிதி அனுமதிக்கப்படுவர்.

கிடைக்கப்பெற்ற கூறுவிலையினை நிராகரிப்பதற்கு, ஒரு பகுதியை மட்டும் ஏற்பதற்கு அல்லது ஒரு பகுதியினை மட்டும் நிராகரிப்பதற்குப் பெறுகைக் குழுத் தலைவருக்கு அதிகாரமுண்டு.

**பு.எல்.எம்.ஹால்தீன்**
**தலைவர்**
**மாகாண அமைச்சு பெறுகைக்குழு,**
**விவசாய, கால்நடை அபிவிருத்தி, காணி, நீர்ப்பாசன, கடற்றொழில் அமைச்சு, வ.மா**
**இல.04, புது லேன்,**
**கண்டி வீதி, அரியாலை,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி முதல்வர் அஸாத் சாலியை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரிக்கை விடுத்து வெள்ளிக்கிழமை கொழும்பு தெமட்டகொடை ஜும்ஆப் பள்ளிவாசலில் ஜும்ஆத் தொழுகையின் பின் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தைக் காணலாம். (ஒ-பி)

# கைதான அஸாத் சாலி மீது சர்வதேசத்தால் அங்கீகரிக்கக் கூடிய குற்றச்சாட்டு வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்து

கொழும்பு,மே 6
கைது செய்யப்பட்ட முன்னாள் கொழும்பு மாநகர முதல்வர் அஸாத் சாலி மீது சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப் படக் கூடிய குற்றச்சாட்டை முன்வைக்க வேண்டும் அல்லது உடனடியாக விடு விக்கப்பட வேண்டும் எனச் சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பில் சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய பசுபிக் பிராந்திய வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பொலி ட்ரஸ் கொட் தெரிவித்திருப்பதாவது:-

இலங்கை அரசை விமர்சித்து வருபவரான அஸாத் சாலி முஸ்லிம்களுக்கு எதிரான போக்குடைய பொதுபல சேனா அமைப்பைக் கடுமையாக விமர்சித்து வந்துள்ளார். இந்த அமைப்பு கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவ சமய நிறுவனங்கள் மீது தாக்குதல் நடத்தி வருவதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

அரச ஊடகங்களினால் தாம் அச்சுறுத்தப்பட்டதால் தலைமறைவாக வாழ்வதாக கடந்த 29 ஆம் திகதி ஊடகங்களுக்கு அஸாத் சாலி தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் அஸாத் சாலி கைது செய்யப்பட்டிருப்பது இலங்கையில், அரசுக்கு எதிராகக் கருத்து வெளியிடுபவர்களுக்கு உள்ள அச்ச சூழ்நிலையை தெளிவாக எடுத்து காட்டுகிறது.

சமீப காலங்களில் மாற்றுக் கருத்துக்களைத் தெரிவிப்பவர்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் தீவிரமடைந்து வரும் நிலையில் மிகப் பிந்திய தாக்கத்துக்குள்ளானவராக அஸாத் சாலி உள்ளதாகத் தெரிகிறது. தற்போது பொதுநலவாய மாநாடு நடைபெறவுள்ள நிலையில் அந்த நாட்டுத் தலைவர்கள், இலங்கை அரசினால் மாற்றுக் கருத்து கூறுபவர்கள் மீது பிரயோகிக்கப்படும் வன்முறைகளுக்கு எதிராக வலுவான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். போர்க் குற்றங்கள் மற்றும் மானிடத்துக்கு எதிரான குற்றங்களை செய்தவர்களை நீதியின் முன் நிறுத்தாமல் தவறிழைத்து வருவது குறித்து இந்த மாநாட்டில் வலுவான கருத்துக்களை தெரிவிக்க வேண்டுமெனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார். (ப-16)

## குடும்பக் கட்டுப்பாட்டு ஊசி கொண்டுவந்த சந்தேகநபருக்கு சிறை

கொழும்பு,மே 6
மூன்று கோடி ரூபா பெறுமதியான ஒருதொகை குடும்பக் கட்டுப்பாட்டு ஊசிகளை சட்டவிரோதமாக இலங்கைக்கு கொண்டுவந்தமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட பாகிஸ்தான் நபர் எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

புதுக்கடை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

உருளைக்கிழங்குடன் குடும்பக் கட்டுப்பாடு ஊசிகளை கொண்டுவருவதற்கு வேறொரு நபரே பணம் அறவிட்டதாக பாகிஸ்தான் நபர் தெரிவித்துள்ளதாக சுங்க வருமான கண்காணிப்பு பிரிவின் பணிப்பாளர் மாலி பியசேன குறிப்பிட்டார்.

அதற்கமைய மேலும் இரண்டு சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்படுகிறது என்று அவர் கூறினார். (ச)

# காணி, பொலிஸ் அதிகாரங்களை பறிக்கவே '19' திருத்தச் சட்டம்

கொழும்பு,மே 6
வடக்கு மாகாணசபைக்கான தேர்தலை நடத்துவதற்கு முன்னதாக, மாகாணங்களின் காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பறிக்கும், 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள், இலங்கை அரசால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்துள்ளது.

இலங்கை ஜனாதிபதியின் பதவிக் காலத்தை 5 ஆண்டுகளாக குறைத்தல், 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள காணி, பொலிஸ் அதிகாரகளை விலக்கிக் கொள்வது ஆகிய விடயங்கள் 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் இடம்பெறவுள்ளன.

19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை வரையும் பணிகள் தீவிரமாக இடம் பெற்று வருகின்றன என்று அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இந்த திருத்த யோசனைகள் சில, சட்டமா அதிபர் திணைக் களத்தின் ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளன.

அரசமைப்புத் திருத்த வரைபுப் பணிகள் அடுத்து மூன்று வாரங்களுக்குள் நிறைவடையும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய திருத்தங்களின் படி, ஜனாதிபதி ஒருவர் பதவியேற்று நான்கு ஆண்டுகளின் பின்னரே புதிய தேர்தல் அறிவிப்பை வெளியிடலாம் என்ற கால எல்லையை மூன்று ஆண்டுகளாகக் குறைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**திருத்த யோசனைகள் சில, சட்டமா அதிபர் திணைக் களத்தின் ஆலோசனைக்காக அனுப்பப் பட்டுள்ளன.**

மாகாணசபைகளிடம் உள்ள காணி மற்றும் பொலிஸ்துறை அதிகாரங்களை அரசின் கீழ் கொண்டு வருவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ச)

# பிணை செலுத்த முடியாத 2,500 பேர் சிறைச்சாலையில்

கொழும்பு,மே 6
பிணை செலுத்தமுடியாது இரண்டாயிரத்து 500 பேர் சிறையிலுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக் களம் தெரிவித்துள்ளது.

இதுதவிர, அபராதம் செலுத்த முடியாத ஆயிரத்து 554 பேர் சிறையில் உள்ளனர் என்று திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.



கால அவகாசம் விதிக்கப்படாது விளக்கமறியலில் 241 கைதிகள் இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவ்வாறான நபர்கள் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளமையால், சிறைச்சாலைகளுக்குள் அதிக நெருக்கடி காணப்படுகின்றமை ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் தற்போது 22 ஆயிரத்து 699 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று சிறைச்சாலைகள் திணைக் களம் குறிப்பிட்டுள்ளது.(ச)

# மகாராணி வருகை உறுதியாகவில்லை

## பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு,மே 6
இலங்கையில் நடைபெறவுள்ள கொமன்வெல்த் தலைவர்களின் உச்சி மாநாட்டில் பிரிட்டன் மகாராணி கலந்து கொள்வாரா என்பது இன்னமும் உறுதியாகவில்லை என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனும், வெளிவிவகார அமைச்சர் வில்லியம் ஹேக்கும் கலந்து கொள்வார்கள் என்று எனக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால் மகாராணி எலிசபெத் வருவது குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை



என்று அவர் கூறினார்.

போருக்குப் பிந்திய நிலைமைகளை காட்டுவதற்கு இந்த மாநாடு எமக்கு நல்லதொரு வாய்ப்பு. எமது விருந்தினர்கள் உண்மை நிலைமையை தமது கண்களால் பார்க்க முடியும் என்று அவர் மேலும் கூறியுள்ளார். (ச)

# எதிர்க்கட்சிகளின் மீள் எழுச்சி; சிந்தனையில் மஹிந்த


கொழும்பு, மே 6
இலங்கையில் எதிர்க்கட்சிகளின் மீள் எழுச்சியை ஜனாதிபதி உணர்ந்துள்ளார் என்று ஆங்கில பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

பொதுமக்களை தொடர்ந்தும் முட்டாள்களாக்கும் செயற்பாட்டை மஹிந்த ராஜபக்ஷவின் அரசு மேற்கொண்டு வருகின்றது. எனினும் அதில் மாற்றங்கள் ஏற்படவேண்டும் என்பதையே மின்சாரக் கட்டண உயர்வின் போது மக்கள்

**மேதினக் கூட்டங்களில் அரசுக்கு எதிராக திரண்டமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சிந்திக்க வைத்துள்ளது**

மத்தியில் இருந்து எழுந்த கருத்துக்கள் உணர்த்தியுள்ளன.

இந்தநிலையில் ஐக்கிய தேசியக் கட்சியினால் குருநாகல், ஸ்ரீகொத்தா, பதுளை ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மேதினக் கூட்டங்களில் அரசுக்கு எதிராக திரண்டமை ஜனாதிபதி மஹிந்த



ராஜபக்ஷவை சிந்திக்க வைத்துள்ளது என்று ஆங்கிலப்பத்திரிகை குறிப்பிட்டுள்ளது. (ச)

# ஏற்றுமதித் தடையில் இருந்து தப்பிக்க வாக்குறுதிகளை வழங்குகிறது இலங்கை

கொழும்பு, மே 6
ஐரோப்பிய ஒன்றியத்தின் ஏற்றுமதித் தடையில் இருந்து தப்பிப்பதற்காக இலங்கை பல்வேறு வாக்குறுதிகளை வழங்க முன்வந்துள்ளது என்று கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அனைத்துலக மீன்பிடிச் சட்டங்களுக்கு முரணான வகையில், இலங்கை மீன்பிடி நடவடிக்கைகளை மேற்கொள்வதால், இலங்கையில் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கான மீன் ஏற்றுமதிக்குத் தடைவிதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த மாதம் ஐரோப்பிய நாடாளுமன்றக் கூட்டத்தில் இலங்கை மீது மீன் ஏற்றுமதித் தடைகளை விதிப்பது குறித்து முடிவு செய்யப்படவுள்ளது.

ஏற்கனவே அனைத்துலக சட்டங்களை மீறி மீன்பிடித்தலில் ஈடுபடுவது தொடர்பான குற்றச்சாட்டில், இலங்கைக்கு மஞ்சள் அட்டை எச்சரிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் விடுத்திருந்த நிலையில், இந்தமுறை ஏற்றுமதி தடைவிதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதனால், இலங்கையில் மொத்த ஏற்றுமதியில் சுமார் 5 வீதமாக உள்ள மீன் ஏற்றுமதி கடுமைமையாகப் பாதிக்கப்படும் என்று கருதப்படுகிறது.

அது இலங்கை அரசுக்கு கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ள நிலையில், அனைத்துலக சட்ட திட்டங்களுக்கு அமைவாக, மீன்பிடித்தலை மேற்கொள்வது குறித்து பல்வேறு வாக்குறுதிகளை வழங்க இலங்கை முன்வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அனைத்துலக சட்ட நடைமுறைகளை மீறும் மீனவர்களுக்கு 15 லட்சம் ரூபா அபராதம் விதிப்பது, மீன் வளங்களைப் பாதுகாப்பது, உள்ளூர் மீன்பிடிக் கலங்களைக் கண்காணிக்கும் பொறிமுறையை உருவாக்குவது ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவது குறித்த வாக்குறுதிகளை இலங்கை வழங்கியுள்ளது.

இலங்கையின் கடற்றொழில் நீரியல் வளங்கள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தலைமையிலான குழு ஐரோப்பிய ஒன்றியத்திடம் இந்த வாக்குறுதிகளை வழங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## திருமதி மரகதம் ஆறுமுகம்



அல்வாயைப் பிறப்பிடமாகவும், 177/1, முரசுமோட்டையை வதிவிடமாகவும், தற்போது வேலணை மேற்கு 6 ஆம் வட்டாரம் சிற்பனையில் வசித்து வருமான திருமதி மரகதம் ஆறுமுகம் கடந்த (04.05.2013)சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் -சின்னப் பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மாணிக்கம் மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், வளர் மதியின் பாசமிகு தாயும், நகுலேஸ்வரனின் மாமியும், நிலோஜன் (ஆஸ்திரேலியா), நிரோஜன், நிஷாந்தினி, ஈசன்-ஜெனா, அர்ச் சனா, தர்ஷனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மதுஷிகாவின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2013) திங்கட் கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அம்பலவி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிற்பனை வீதி,
வேலணை மேற்கு, வேலணை-06.
0217210219

தகவல்:
நிலோஜன்
(ஆஸ்திரேலியா)

(36110)(6.11)

### அறைகள் வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட அறைகள், பல்கலைக்கழக மாணவிகளுக்கு வாடகைக்கு உண்டு.

தொ.பே: 077 548 7167

(37121)(6)

### தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள வைத்திய நிறுவனம் ஒன்றுக்கு தாதிகள் (Nurses) தேவை.
நேர்முகம்: 07.05.2013
இடம்: Global Medicals,
No-769, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
மேலதிக தொ.பே: 077 317 9062

(37119)(6.11)

### கண்ணீர் அஞ்சலி

## கந்தையா தேவராசா

(சிவநகர், உருத்திரபுரம்) )



ஆசிரியர் நலன்புரிசங்கம்

எமது பாடசாலையின் ஆய்வுகூட உதவியாளர் சிறீதேவன் (கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம்) அவர்களின் அன்புத் தந்தையார் தேவராசா அவர்கள் 4.5.2013 அன்று இறைவனடி சேர்ந்ததை அறிந்து நாமும் அவரது பிரிவுத் துயரில் பங்கு கொள்வதோடு, அன்னாருடைய ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

கிளி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம்

### கண்ணீரால் அஞ்சலி

தொல்புரம் கலாலயம் நாடக மன்றத்தின் தலைவரும், பிரபல ஆர்மோனிய கலைஞருமாகிய மு.ச ட் சரம் அவர்களின் துணைவியார்

## திருமதி கோமதி சடாட்சரம்



அவர்கள் மறைந்த செய்தி கேட்டு கலாலயம் நாடகமன்றம் மிகுந்த மனவேதனை அடைகிறது. அன்னாரின் பிரிவால் வாடி நிற்கும் அவரது குடும்பத்தினருக்கும், உற்றாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா பொன்னாலைக்கண்ணன் பாதம் சேர இறைஞ்சி நிற்கின்றோம்.

தொல்புரம்.

கலாலயம் நாடக கலைஞர்கள்.

(37120)(6.11)





நாடு முழுவதும் துரிதமாக விஸ்தரிக்கப்படும்
NDB கிளை வலையமைப்புடன்
புதிதாக இணைந்து கொள்கிறது
நெல்லியடி கிளை

NDB வழங்கும் விசேட சேவைகளை அனுபவியுங்கள்!

* நடைமுறைக்கணக்குகள் * சேமிப்புக் கணக்குகள் * நிலையான வைப்புக் கணக்குகள் * வீட்டுக்கடன் * தனிநபர் கடன் * அடகு வைக்கும் சேவை * வாகனக் குத்தகை வசதிகள் * வெஸ்ரேன் யூனியன் பணப் பரிமாற்றல் சேவை * சிறிய நடுத்தர வியாபாரத்திற்கான கடன் வசதி - நீண்ட கால கடன் வசதி (குறைந்த வட்டிக்கு), குறுகிய கால கடன் வசதி

இல.109, யாழ்ப்பாண வீதி, நெல்லியடி.
தொ.இல.021 2263402/3 ஃபெக்ஸ்:021 2263399
கொடுக்கல் வாங்கல் செய்யும் நேரம்:
வாரநாள்களில் காலை 9.00 - மாலை 6.00 வரை

www.ndbbank.com

அழையுங்கள் 011 244 8888

NDB வங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

# தெங்கு பயிர்ச் செய்கையாளருக்கு ஊக்குவிப்பு

## வரணியில் அமைச்சர் புஸ்பகுமார தலைமையில் நிகழ்வுகள்

தென்மராட்சி, மே 6

கடந்த 2010 ஆம் ஆண்டு தென்மராட்சி பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'கப்புறுக புரவற' திட்டத்தின் பயனாளிகளை ஊக்குவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயத்துக்கு அருகில் இடம்பெற்றது.

தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் தென்னை வள அபிவிருத்தி அமைச்சர் ஜெகத் புஸ்பகுமார, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், தென்னை வள அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிஸார் சோமவீர ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

தென்னைப் பயிர்ச் செய்கை சபை, தென்னை அபிவிருத்தி அதிகார சபை, தெங்கு ஆராய்ச்சி சபை ஆகியவற்றின் உயர் அதிகாரிகளும் தென்மராட்சி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய பிரதேசங்களின் 'கப்புறுக புரவற' திட்டப் பயனாளிகள் சங்கங்கள், சமாசங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் சிறந்த தென்னம் செய்கையாளர்களுக்கு ஊக்குவிப்பு நிதிகளும் கப்புறுக புரவற சங்கப் பயனாளிகளை ஊக்குவிக்க தென்மராட்சி பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய சங்கங்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கான காசோலைகளும் சாவகச்சேரி, கொடிகாமம், வரணி, கைதடி, பருத்தித்துறை ஆகிய சமாசங்களிடம் வழங்கப்பட்டன.

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6 வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கான தென்னம் பிள்ளைகள் வழங்கும் திட்டங்களையும் விருந்தினர்கள் ஆரம்பித்து வைத்தனர்.

குடமியனில் அமைக்கப்பட்டுள்ள நாற்றுமேடையும் விருந்தினர்களால் பார்வையிடப்பட்டது. (ஒ-9)


தென்னை வள அபிவிருத்தி அமைச்சர் ஜெகத் புஸ்பகுமார தென்னங்கன்றை நடுகிறார்.

### ஆலோசனைக் கூட்டம்

தென்மராட்சி, மே 6

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலய பெருந் திருவிழா தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்.

பெருந்திருவிழா காலத்தில் குடிதண்ணீர், சுகாதாரம், பாதுகாப்பு, போக்குவரத்து உட்பட்ட சேவைகளை வழங்கவுள்ள அனைத்துத் திணைக்களத் தலைவர்களையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ந-9)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 6

இளைஞர்களின் தேவைகள் மற்றும் ஒழுக்க விழுமியங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று 9 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு மாநகர சபை முதல்வர் மாநாட்டு மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறும்.என யாழ். மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் தெரிவித்துள்ளார். (ந)

### விளையாட்டு விழா

வடமராட்சி மே 6

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவு விளையாட் விழா எதிர்வரும் 11ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பிரதேச செயலர் சி.த. ஜெயசீலன் தலைமையில் வல்வெட்டித்துறை நெற்கொழு விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்வார். (ந-8)

### அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 6

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தின் ஒன்றிய அங்குரார்ப்பண நிகழ்வு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ந)


சுன்னாகம் கதிரமலை சிவன் ஆலய கொடியேற்றத்தின் போது.... (ந-9)

# பாரம்பரிய விதிமுறைகளை கணக்கெடுக்காத அமைச்சர்கள்

## மேலங்கிகளுடன் ஆலயத்தினுள்

தென்மராட்சி, மே 6

வரணி சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜையில் கலந்துகொண்ட அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் பாதுகாப்பு பிரிவினர் மேலங்கியுடன் ஆலயத்தினுள் சென்றமை குறித்து ஆலய அடியார்கள் கவலை தெரிவித்தனர்.

பழைமை வாய்ந்த இந்த ஆலயத்தில் பாரம்பரிய விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் ஆலயத்துக்கு அருகில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தென்னை அபிவிருத்திச் சபையின் நிகழ்வு தொடர்பாக விசேட பூஜை ஆலயத்தில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஆண்கள் நிகழ்வில் கலந்து கொள்ள வருகை தந்திருந்த போதிலும், ஆண்கள் மேலங்கி அணிந்திருந்ததால் 100 மீற்றருக்கு அப்பால்நின்றிருக்க வாகனங்களில் வந்த அமைச்சர்கள், தென்னிலங்கையைச் சேர்ந்த அமைச்சின் உயர் அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மேலங்கியுடன் ஆலயத்தினுள் சென்றமை குறித்து அடியார்களால் கவலை தெரிவிக்கப்பட்டது. (ம-9)

### இருபது மாணவருக்கு புலமைப் பரிசில்

காரைநகர் பிரதேச செயலர்பிரிவில் 2011 ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்து 2012 ஆம் ஆண்டு தொடக்கம் உயர்தரக் கல்வியைத் தொடரும் 20 மாணவர்களுக்கு சமுர்த்தி "சிப்தொற" புலமைப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை ஊர்காவற்றுறை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் காரைநகர் பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த 20 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்பட்டது.

மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் 2012 செப்ரெம்பர் மாதத்திலிருந்து விடுமுறைக் காலங்கள் உள்ளடங்கலாக உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் மாதம் வரையிலான 24 மாதங்களுக்கு இந்தப் புலமைப் பரிசில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. (ந-250)

# புத்தகம் கட்டும் பயிற்சிநெறி

கல்வி அமைச்சின் முறைசாராக் கல்விப் பிரிவின் செயற்பாட்டின் கீழ் வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாரக் கல்வி பிரிவினரால் புத்தகம் கட்டும் பயிற்சி நெறி இணுவில் பொது நூலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சி வகுப்பினை வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோகரன் அண்மையில் ஆரம்பித்து வைத்தார்.

மாலை வேளைகளில் நடைபெறும் இந்தப் பயிற்சி நெறியில் ஆர்வமுள்ளவர்கள் இணுவில் பொதுநூலகத்துடன் தொடர்பு கொண்டு பயிற்சி நெறியில் இணைந்து கொள்ளமுடியும். (ந)

மரண அறிவித்தல்

சபாரத்தினம் இரத்தினசபாபதிப்பிள்ளை

காரைநகர், நீலிப்பந்தனையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் இரத்தினசபாபதிப்பிள்ளை நேற்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற சபாரத்தினம் -தங்கரத்தினம் தம்பதியரின் பாசமிகு சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்ற மாரிமுத்து மற்றும் விசாலாட்சி தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற கமலாம்பிகையின் அன்புக் கணவரும், ஜெயந்தினி, மணிவண்ணன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சகுந்தலாதேவி, காலஞ்சென்ற கனகசபாபதி (முன்னாள் கிராம சேவையாளர்J/42) மற்றும் சண்முகரத்தினம் (முன்னாள் தபால் அதிபர், காரைநகர்), ஆறுமுகம்பிள்ளை (பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், காரைநகர்), சறோஜினிதேவி, குணநாயகம், இராசநாயகம் (பிரதம லிகிதர், ஆதார வைத்தியசாலை, ஊர்காவற்றுறை), சுந்தரேஸ்வரன் (நல்லைக்குமரன் ரெக்ஸ் நல்லூர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், விமலதாசனின் (சரவணா ரெக்ஸ், நல்லூர்) மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது நீலிப்பந்தனை இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஜெயந்தினி (மகள்),
மணிவண்ணன் (மகன்),
சகோதரர்கள்.

நீலிப்பந்தனை,
காரைநகர்.



31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு 04.04.1981
உதிர்வு 06.04.2013

அமரர் பொன்னம்பலநாதன் ஆதீசன் (ஆதி)

கடந்த (06.04.2013) சனிக்கிழமை எம்மை விட்டுப் பிரிந்த எமது அன்புச் செல்வத்தின் மறைவு கேட்டு நேரிலும், தொலைபேசியிலும் மரணச் சடங்கிலும் பங்கு பற்றி அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (06.05.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.62, படித்த மகளிர் திட்டம்
மிருசுவில்.
077 314 4886

தந்தை, தாய், சகோதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக ஆர்வலர்களின் நிழல் படங்களை உலகறிய செய்யும் தபால் திணைக்களம்

## சென்.ஜோன்ஸ் கல்லூரி ஆண்டு நிறைவு நிகழ்வில் தபாலதிபர் அபேரத்ன



யாழ்ப்பாணம், மே 6

தேசிய ஒற்றுமைக்காகவும் மக்களது நலன்களுக்காகவும் தம்மை அர்ப்பணித்த சமூக ஆர்வலர்கள், சமயப் பெரியார்கள் ஆகியோரது நிழல் படங்களை உலகளாவிய ரீதியில் வெளிப்படுத்தும் செயற்பாட்டை இலங்கை தபால் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது என்று இலங்கை தபால் திணைக்களத்தின் தபால் மா அதிபர் டி.எல்.பி. ஆர்.அபேரத்ன தெரிவித்தார்.

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியின் 190 ஆவது ஆண்டு நிறைவு தொடர்பான முத்திரைக் கண்காட்சியும் ஆரம்ப நிகழ்வும் கடந்த புதன் கிழமை இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்த கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் தேசிய ஒற்றுமைக்காகவும், மக்களது நலனுக்காகவும் சேவையாற்றிய பெரியார்களை நாம் நினைவு கூர்ந்து அவர்களது சேவைகளை உலகறியச் செய்ய வேண்டிய பொறுப்பு உள்ளது.

இத்தகைய பொறுப்புமிக்க சேவையை இலங் கைத் தபால் திணைக்களம் செய்து வருகிறது.

இதன் மூலம் அவர்களது சேவைகள் உலகறியச் செய்யப்படுவதுடன் காலாதிகாலமாக அவர்களது நிழல்படங்கள் பொக்கி ஷங்களாக சேமித்து வைக்கப்படுகின்றன.

அத்துடன் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி உலகளாவிய ரீதியில் பிரபல்யம் அடைந்த கல்லூரி. இத்தகைய கல்லூரி இன்று 190 ஆவது ஆண்டை நிறைவு செய்வது பாராட்டப்படக் கூடியது. என்று அவர் மேலும் தெரிவித்தார். (வ-14)

# பட்டதாரிப் பயிலுநருக்கும் தலைமைத்துவப் பயிற்சி

யாழ்ப்பாணம்,மே 6

பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு உள்வாங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர்களும் தலைமைத்துவப்பயிற்சி வழங்கப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர அறிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கு கண்டி நந்தம்பை இராணுவ பயிற்சிக்கல்லூரியில் வைத்துத் தலைமைத்துவப்பயிற்சிகள் இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்தன.

தற்போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள பட்டதாரிப் பயிலுநர்களுக்கும் தலைமைத்துவப்பயிற்சி வழங்கப்படவுள்ளது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படவுள்ள பயிலுநர்களுக்கான திறன் அபிவிருத்தி வேலைத்திட்டம் என்ற பெயரில் தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது. இந்த மாதம் 8 ஆம் திகதி முதல் 24 ஆம் திகதி வரை இது இடம் பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்படவுள்ள பயிலுநர்களுக்கான திறன் அபிவிருத்தி வேலைத்திட்டம் என்ற பெயரில் தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளது.**

இந்தப் பயிற்சிக்காக பட்டதாரிப் பயிலுநர்கள் ஒரு தொகைப் பொருட்களைக் கொண்டுவரவேண்டும் என்றும் அமைச்சின் செயலாளரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பட்டதாரிப் பயிலுநர்களுக்கு மாதாந்தம் பத்தாயிரம் ரூபா சம்பளம் வழங்கப்படுகின்ற நிலையில் அந்தப் பணத் தொகையை விட அதிகமான பெறுமதிக்கு தலைமைத்துவப்பயிற்சிக்குக் கொண்டு செல்ல வேண்டிய பொருட்களை வாங்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுறது. (த-5)

# யாழ்.மாவட்ட பாடசாலைகளின் கூத்துப் போட்டிகளின் முடிவுகள்

வடமராட்சி, மே 6

அகில இலங்கை தமிழ்த் தினப் போட்டியின் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கூத்து வகைப் போட்டிகள் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

**சிந்து நடைக் கூத்து**

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி, கொட்டடி நமசிவாய வித்தியாலயம், அம்பன் அ.மி.த.க.பாடசாலை.

**இசை நாடகம்**

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, கரவெட்டி ஸ்ரீநாரதா வித்தியாலயம், வரணி மகாவித்தியாலயம்.

**[illegible] கூத்து**

பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய மகாவித்தியாலயம்,

**தென்மோடி**

யாழ்.திருக்குடும்பம் கன்னியர் மடப் பாடசாலை, மணற்காடு றோ.க.த.க.பாடசாலை.

**முல்லைமோடி**

திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயம், ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்.

**வடமோடி**

கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை, ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம். (ந-8)





யாழ்.பிராந்திய இறைவரித் திணைக்களம் நெல்லியடியில் நடத்திய வரி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கில் நெல்லியடி இலங்கை வங்கிக் கிளை முகாமையாளர் ஆர்.சிவதாஸ் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் பிராந்திய ஆணையாளர் பாலசுந்தரம் சிவஜோதியும் கலந்துகொண்ட வர்த்தகர்களையும் காணலாம். (ஒ-8)

# தடை செய்யப்பட்ட கிருமிநாசினிகள் வேறு பெயர்களில் விற்பனையில்

கொழும்பு, மே 6

விவசாய அமைச்சினால் இறக்குமதிக்கும் விற்பனைக்கும் தடை செய்யப்பட்ட சில வகைக் கிருமிநாசினிகள் வேறுபெயர்களில் விற்பனைக்கு விடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஏற்கனவே இறக்குமதி செய்யப்பட்டு, அமைச்சினால் விற்பனைக்குத் தடை செய்யப்பட்ட சில வகை கிருமிநாசினிகளை ஏதோ வகையில் விற்பனை செய்துவிட வர்த்தகர்கள் முயற்சிக்கின்றனர். பொய்யான பெயர்களைப் பயன்படுத்தியோ, வேறு வகைகளிலோ அவற்றை விற்பனை செய்ய வர்த்தகர்கள் முயற்சிப்பார்களானால் அவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்த விதம் தடைசெய்யப்பட்ட கிருமிநாசினி வகைகளின் பாவனையை முற்றாகத் தடுத்து நிறுத்த ஓராண்டு காலம் வரை அவகாசம் தேவைப்படுமென்றும், எதிர்காலத்தில் பொது மக்களது ஆரோக்கியத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துமென துறைசார் வல்லுநர்கள் கிருமிநாசினி வகைகள் குறித்து உறுதிப்படுத்துவார்களாயின் அது தொடர்பாக உடனடியாகக் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ)

# மீண்டும் தலைதூக்கும் பன்றிக்காய்ச்சல்

## மக்களை எச்சரிக்கிறது சுகாதார அமைச்சு

கொழும்பு, மே 6

பன்றிக் காய்ச்சல் நோய் மீண்டும் தலைதூக்கும் ஏது நிலை உருவாகியுள்ளதால் மக்களை அவதானமாக இருக்குமாறு சுகாதார அமைச்சு அறிவித்தல் விடுத்துள்ளது.

நாட்டின் சில பிரதேசங்களில் இந்த நோயால் பீடிக்கப்பட்ட நோயாளர்கள் சிலர் இனங் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

சிறு குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், 60 வயதைக் கடந்தவர்கள் மற்றும் தீராத நோய்களால் அவதியுறுவோருக்கு இந்த நோயை ஏற்படுத்தும் வைரஸ் உட்செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகளவில் இருப்பதாகவும், இருமல், காய்ச்சல் மற்றும் சுவாசிப்பதற்குச் சிரமப்படுதல் என்பன இந்த நோயின் அறிகுறிகள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோய் நாடளாவிய ரீதியில் பரவுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள்தாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். (க-22)

# பாடசாலையை விட்டு விலகியோருக்கு தொழில் திறன் விருத்திப் பயிற்சிகள்

வவுனியா,மே 6

பாடசாலையை விட்டு விலகிய இளைஞர் யுவதிகளை பின்வரும் தொழில் திறன் விருத்திப் பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொள்ளுமாறு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.அன்ரன் சோமராஜா கேட்டுக் கொண்டுள்ளார்.

உலோக ஒட்டுகள் பயிற்சி நெறி 6 மாத காலமும், கேக் ஐசிங் பயிற்சி நெறி 3 மாத காலமும், மணப்பெண் அலங்காரப் பயிற்சிநெறி 3 மாத காலமும், கணினிப் பயிற்சிகள் மற்றும் சிங்கள பாடம் என்பன 3 மாதமும் இடம்பெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயிற்சியின் நிறைவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகவும், ஆர்வமுள்ள இளைஞர் யுவதிகள் வவுனியா தெற்கு கல்வி வலயக்கல்வி அலுவலகத்தில் உள்ள முறைசாராக் கல்விப்பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளுமாறும் வவுனியா தெற்கு வலயக்கல்வி பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்தப் பயிற்சி நெறிகளை வவுனியா தெற்கு கல்வி வலயத்தினால் நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-402)

# 10 லட்சம் தடுப்பூசி மருந்துகள் இந்தியாவிடம் கொள்வனவு

கொழும்பு, மே 6

அம்மை, கூகைக்கட்டு மற்றும் ருபெல்லாவுக்கான 10இலட்சம் தடுப்பூசி மருந்துகளை [illegible] சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான கேள்விக் கோரல் ஒன்றை இந்திய நிறுவனம் ஒன்றிடம் கையளிப்பதற்கான அனுமதியை [illegible] வழங்கியுள்ளது.

அம்மை, கூகைக்கட்டு மற்றும் ருபெல்லா எதிர்ப்புச் சக்தி கொண்ட 34 லட்சம் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வது தொடர்பாக சுகாதார அமைச்சினால் கேள்விக் கோரல்கள் ஏற்கனவே கோரப்பட்டுள்ள நிலையில் அவை கையளிக்கும் வரையில் இந்த ஆண்டு தேவைப்படும் தடுப்பூசி மருந்துகளே இந்தவிதம் கொள்வனவு செய்யப்படவுள்ளன. (க-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் 1933ஆம் ஆண்டு T.R. 35ஆம் இலக்க வழக்கில் தென் இந்தியா, சிதம்பரம் அம்பலவாணசுவாமி கோயில் படிக்கட்டளைத் தருமத்தின் சிவபுரி மடத்திற்கு உரிய வலிகாமம் மேற்குப் பகுதி, தென்மராட்சிப் பகுதி மற்றும் தீவுப் பகுதியில் அமைந்துள்ள 130 ஆதனங்களுக்கு குறித்த வழக்கில் வெஸ்ரிங் ஓடர் என்னும் அதிகாரப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதுடன் சிதம்பரம் சிவபுரிமடத்தின் தர்மகர்த்தாவான **வைத்திலிங்கம் தம்பிரான் சிவராஜன் சொக்கநாதன்** குறித்த ஆதனங்களை முகாமைத்துவம் செய்யவும் பராமரிக்கவும் நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமையை சங்கானை ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த **வைத்திலிங்கம் தம்பிரான் துரைராஜன்** ஆகிய எனக்கு அற்றோனித்தத்துவம் ஊடாக வழங்கியுள்ளார் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன். ஆகவே மேலேகுறிப்பிட்ட ஆதனங்களின் குத்தகைக்காரர்கள் என்னுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தொடர்புகளுக்கு

**0213006382, 0778332954**

இப்படிக்கு

**வ.த.துரைராஜன்**

சிவபுரிமட மடாதிபதி

சி.சொக்கநாதனின் அற்றோனித் தத்துவக்காரன்.

(8863) (23-16-14)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



முல்லைத்தீவு மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்

**ஆர்.பாலச்சந்திரன்**

அவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகத்தர்கள், நலன்புரி சங்கத்தினர்.*

# ரிப்பர் தேவை (5 அல்லது 3 கியூப்

பரந்தன் பூநகரி வீதி, வேலைகளுக்கு வாடகைக்கு (கி.மீ அடிப்படையில்) ரிப்பர் உடனடியாகத் தேவைப்படுகின்றது.

தொடர்புகளுக்கு:-

K.D.EBERT & SONS HOLDINGS (PVT) LTD

பூநகரி வீதி, பரந்தன்.

தொ.பே.:- 0776135350 0771234774

# 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில் மகிழ 21-01-1941 — மண்ணில் நெகிழ 06-04-2013

கடந்த 06.04.2013 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் **மனுவேற்பிள்ளை குணரத்தினம்**

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து உடன் வந்து ஆறுதல் சொல்லியும் அன்னாரின் இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்டும் சகல வழிகளிலும் ஒத்தாசை நல்கி எம் தந்தையின் பிரிவுத் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் தொலைபேசி, தொலைநகல், இணையம் ஊடாகத் தூர தேசங்களில் இருந்து கொண்டும் எம்மைத் தேற்றியவர்களுக்கும் எல்லா வழிகளிலும் உதவி நல்கிய அன்பு உறவுகள் அனைவருக்கும் எம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டி கிரியைகள் நேற்று முன்தினம் 04.05.2013 கீரிமலை புனித தீர்த்தக் கரையில் சிறப்பாக நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (06.05.2013) திங்கட்கிழமை மு.ப. 11.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.194, கட்டுடைச் சந்தி,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

# பொது பல சேனாவுக்கு எதிராக நீதிமன்றம் சென்று போராடுவேன்

## மு. கா. உறுப்பினர் தெரிவிப்பு

கல்முனை, மே 6

கல்முனைப் பிரதேசத்தில் பொது பல சேனாவின் அலுவலகத்தைத் திறக்கும் நிலை ஏற்படுமானால் அதனை எதிர்த்து நீதிமன்றம் சென்று போராடுவேன் என கல்முனை மாநகர சபையின் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எம்.ஐ.எம். பிர்தௌஸ் தெரிவித்தார்.

கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப் தலைமையில் இடம்பெற்ற மாநகர சபையின் மாதாந்த அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

பொது பல சேனா என்ற அமைப்பின் நடவடிக்கைகளைத் தடைசெய்ய வேண்டும் எனக் கோரி கல்முனை மாநகர சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் இதன் அலுவலகம் ஒன்று எதிர்காலத்தில் கல்முனைப் பிரதேசத்தில் அமைவது தொடர்பான கதையைக் கூட ஏற்றுக்கொள்ள முடியாது.

பொதுபல சேனா அமைப்பின் பின்னால் சர்வதேச சக்திகளான நோர்வே, மொசாட் போன்றவைகள் இருந்து கொண்டு முஸ்லிம்களைப் பிளவுபடுத்தி முஸ்லிம் தமிழ் உறவை குலைக்கும் நடவடிக்கையில் இறங்கியிருக்கின்றன.

கல்முனை மாநகர சபை பொதுபல சேனா அமைப்பைத் தடைசெய்ய பிரேரணை கொண்டுவந்ததைப் போன்று. இலங்கையிலுள்ள சிறுபான்மைச் சமூகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து உள்ளூராட்சி அமைப்புக்களும் இதனைத்தடை செய்து பிரேரணை கொண்டுவர வேண்டும் என்றார்.

(கு-ரி)

# தவறிவிட்டது

NPGH 5881 இலக்கமுடைய மோட்டார் சைக்கிளின் இலக்கத்தகடு 28.04.2013 அன்று பண்டத்தரிப்புக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையே தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள்.

தொடர்புகொள்ளவும்: 077 8473425

# காணி வீடு விற்பனைக்கு

நல்லூர் நாவலர் வீதியில் நல்ல சுற்றாடலில் 01பரப்பில் அமைந்த சுற்றுமதில் கொண்ட காணி வீடு விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை

தொடர்பு:- 077 4339741, 077 9498531, 077 6848840

# காணி விற்பனைக்கு

உடுவில் பெரிய மதவடி வீதியில் (பிள்ளையார் கோயிலுக்கு அருகில்) இரண்டு பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- **077 9002039**

# மரண அறிவித்தல்கள்

## பொன்னுத்துரை குருக்கள் விநாயகமூர்த்தி ஐயர்

(ஓய்வுபெற்ற இ.போ.ச. உத்தியோகத்தர், மட்டுவில் மருதடிப் பிள்ளையார் பூசகர்)



மட்டுவில் மருதடிப் பிள்ளையார் கோயிலடியை வசிப்பிடமாகவும் தற்போது கோப்பாய் தெற்கில் வசித்தவருமாகிய பொன்னுத்துரை குருக்கள் விநாயக மூர்த்தி ஐயர் நேற்று (05.05.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை குருக்கள் சரஸ்வதியம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற திலகவதியம்மாவின் அன்புக் கணவரும் சிவம் ஐயர் (பூசகர்), தீட்சாயினியம்மா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நளாயினி, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமனும் கவிப்பிரியாவின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2013) திங்கட்கிழமை கோப்பாயில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக பிற்பகல் ஒரு மணியளவில் கோண்டாவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராமநாதன் ஒழுங்கை,
கோப்பாய் தெற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
0776848645

## திருச்செல்வம் அலோசியஸ் மரியநாயகம்

(ஓய்வுநிலை உத்தியோகத்தர், இலங்கை புகையிரதத் திணைக்களம்)



இளவாலையைப் பிறப்பிடமாகவும், நெல்லியடி, கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் அலோசியஸ் மரியநாயகம் நேற்றுமுன்தினம் (04.05.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இளவாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவரான பிலிப்புப் பிள்ளை திருச்செல்வம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்)- மற்றும் திரேசம்மா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) தம்பதியரின் அன்பு மகனும், நெல்லியடி, கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சவரிமுத்து மனுவேற்பிள்ளை-இசபெல்லா தம்பதியரின் அன்பு மருமகனும், சுகிர்தம் மரியநாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற யேசுரட்ணம் (Supt.Small industries Atchchuvely) மற்றும் மங்களநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர் St.Hentry's college), மதுரநாயகி தவப்பிரகாசம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, ஆஸ்திரேலியா), Rev.Fr. தேவராஜன் (ராஜன்-லண்டன்), தர்மபாலன் (லண்டன்), அமிர்தராணி அலோசியஸ் (இளைப் பாறிய ஆசிரியை-புத்தளம்), T.X. தேவமனோகரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற Dr.மங்களநாயகம் (சுவீடன்) மற்றும் மதுரநாயகம் (பிரான்ஸ்), தேவநாயகம் (U.S.A- முன்னாள் கெயின்ஸ் கல்வி நிலைய இயக்குநர்), மன்மதநாயகம் (மன்னண்ணா-சமாதான நீதிவான், நெல்லியடி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் நாளை 07.05.2013 செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்று அவரின் இல்லத்திலிருந்து பூதவுடல் கரவை, புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் கரவைச் சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலாம் குறுக்குத்தெரு,
நெல்லியடி, கரவெட்டி.

(37105) (10.6)

தகவல்:
ம.ம.மன்மதநாயகம்
(மைத்துனர்) 0770267711


# MODERN BODY ARTS

TATTOOS (பச்சை குத்துதல்)



நவீன இயந்திரங்கள் மூலம் உங்கள் விருப்பத்துக்கேற்ப 12 வகையான வர்ணங்கள் மூலம் மிகவும் அழகாகவும் நேர்த்தியாகவும் உங்கள் அபிமான வடிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

- BOYS & GIRLS
- 10 YEARS EXPERIENCE
- ONE PERSON FOR ONE NEEDLE (NO SIDE AFFECT BECAUSE OF ORIGINAL PRODUCT)

MOBILE 0777414086


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## லயன் இரத்தினம் பொன்னுராஜா J.P.

தோற்றம் 12.10.1927

மறைவு 17.04.2012



ஆண்டொன்று போனாலும் ஆறவில்லை எம்
துயரம் மீண்டும் ஒரு பிறப்பு உண்டெனில்
வந்திடுமப்பா எம்மிடம்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காய்ப் பிரார்த்திக்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

வட்டுத் தெற்கு,
வட்டுக்கோட்டை.

பொ.போகராணி,
(மனைவி)

# மரண அறிவித்தல்

## திருமதி கோமதி சடாட்சரம்



காரைநகரைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோமதி சடாட்சரம் நேற்றுமுன்தினம் (04.05.2013) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சடாட்சரத்தின் அன்பு மனைவியும், துசியந்தினி, கண்ணதாசன்(பிரான்ஸ்), கிருசாந்தினி, குகரஞ்சினி ஆகியோரின் தாயும், பிரியதர்சினி, சிவானந்தன், கஜேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.05.2013) திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக் காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி, திருநெல்வேலிதெற்கு.
திருநெல்வேலி. (கர்பஸ்லேன்)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய ஆட்டம்



கைதடி, மே 6

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் அனுமதியுடன் சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரங்கள்:

இரவு 7 மணி

இணுவில் அண்ணா வி.க. 'ஏ' அணி எதிர் ஆலடி சிந்து வி.க. 'பி' அணி.

இரவு 8 மணி

சுழிபுரம் பைவ்ஸ்ரார் வி.க. எதிர் பண்டத்தரிப்பு சாந்தை வி.க. (ற-288)

# கரப்பந்தில் ஐங்கரன் சம்பியன்



தென்மராட்சி, மே 6

தென்மராட்சி பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் ஐங்கரன் விளையாட்டுக் கழக அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இந்த இறுதியாட்டத்தில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக அணியும் சாவகச்சேரி கோயிற்குடியிருப்பு ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழக அணியும் மோதிக் கொண்டன.

மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் மட்டுவில் ஐங்கரன் விளையாட்டுக் கழக அணி 25:18, 25:22 என்ற நேர் செற்களில் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவாகியது. (ற-9)

பிரதேச செயலகங்களுக்கு இடையேயான கரப்பந்து

# தெல்லிப்பழை செயலக அணி சம்பியனாகத் தெரிவாகியது



வலி.வடக்கு, மே 6

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு இடையே நடத்திய கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி ஆவரங்கால் நடராசா இராமலிங்கம் வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் கோப்பாய் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பம் முதல் இரு அணிகளும் சமபலத்துடன் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் முதல் இரண்டு நேர் சுற்றுக்களையும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 26:24, 25:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

ஆட்ட நிறைவில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி கோப்பாய் பிரதேச செயலக அணியை 2:0 என்ற சுற்றுக்கள் அடிப்படையில் வெற்றி பெற்று யாழ். மாவட்ட சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (ற-86)

# மாவட்ட மட்ட எறிபந்தில் வவு. வடக்கு முன்னிலை

மாங்குளம், மே 6

வவுனியா மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான எறிபந்து போட்டியில் பெண்கள் பிரிவில் முதல் மூன்று இடங்களையும், ஆண்கள் பிரிவில் 2 ஆம், 3 ஆம் இடங்களையும் பெற்று வவுனியா வடக்கு கல்வி வலயம் முன்னிலையில் உள்ளது.

நேற்றுமுன்தினம் ஓமந்தை மத்திய கல்லூரியில் நடைபெற்ற பெண்களுக்கான எறிபந்து இறுதியாட்டத்தில் கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தை எதிர்த்து சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் மோதியது. அதில் சுந்தரபும் சரஸ்வதி 25: 19, 25: 23 என்ற புள்ளிகளில் வெற்றி பெற்று 1 ஆம் இடத்தையும், கனகராயன் குளம் மகாவித்தியாலயம் 2 ஆம் இடத்தினையும் பெற்றது.

3 ஆம் இடத்துக்கான போட்டியில் சின்னடம்பன் பாரதி வித்தியாலயத்த எதிர்த்து கணேஸ்வரா வித்தியாலயம் மோதியது. அதில் சின்னடம்பன் பாரதி வித்தியாலயம் 25: 16, 25:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று 3 ஆம் இடத்தையும் பெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் முஸ்லிம் மகா வித்தியாலயத்தை எதிர்த்து மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலை மோதியது. இதில் முஸ்லிம் மகா வித்தியாலய அணி 25: 23, 25:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று 1 ஆம் இடத்தையும், மாதர் பனிக்கர் மகிழங்குளம் 2 ஆம் இடத்தையும் பெற்றது.

3 ஆம் இடத்தற்கான போட்டியில் கனகராயன்குளம் மகா வித்தியாலயத்தை எதிர்த்து தவசிகுளம் அ.த.க. பாடசாலை மோதியது. இதில் கனகராயன்குளம் மகா வித்தியாலய அணி 25: 13, 25: 16 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று 3 ஆம் இடத்தைப் பெற்றது. (ற-422)

இந்த இறுதியாட்டங்கள் நேற்றுமுன்தினம் ஓமந்தை மத்திய கல்லூரியில் நடைபெற்றன.

# பல்கலைக்கழக ஒலிம்பிக் மொறட்டுவவில் ஆரம்பம்

இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான ஒலிம்பிக் போட்டி என்று வர்ணிக்கப்படும் விளையாட்டுப் போட்டிகளை கடந்த வியாழக்கிழமை மொறட்டுவ பல்கலைக்கழக மைதானத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்தார்.

இந்தப் போட்டிகளில் இலங்கையில் உள்ள 17 பல்கலைக் கழகங்கள் பங்குபற்றுகின்றன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இருந்து 119 வீரர்களும் 70 வீராங்கனைகளும் சுமார் 13 போட்டிகளில் பங்குபற்றுகின்றனர்.

மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடத்தப்படும் இந்தப் போட்டிகள் தற்போது 11 ஆவது முறையாக நடைபெறுகின்றது. அதில் கிரிக்கெற், உதைபந்தாட்டம், ஹொக்கி மற்றும் தடகளப் போட்டிகளுமாக 35 போட்டிகள் இடம்பெறவுள்ளன.



நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் மொறட்டுவ பல்கலைக்கழக அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக் கழக அணி மோதிக்கொண்டது. இதில் யாழ்.பல்கலைக்கழக அணி 4:1 என்ற கோல்கணக்கில் சம்பியனாகியது. (ற-16)

# வவு. மாவட்ட மட்ட கரப்பந்தாட்டம் பெண்கள் பிரிவுகளுக்கான முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 6

வவுனியா மாவட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட பெண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 15 வயதுப்பிரிவில் மாதர்பனிக்கர் மகிழங்குளம் அ.த.க பாடசாலையும், 17, 19 வயதுப் பிரிவுகளில் கிடாச்சூரி கருவேலங்குளம் அ.த.க. பாடசாலையும் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டன.

இந்த இறுதியாட்டங்கள் கடந்த செவ்வாய்க்கிழமை கிடாச்சூரி கருவேலங்குளம் அ.த.க பாடசாலையில் இடம்பெற்றது.

முதலில் இடம் பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் மாதர் பனிக்கர் மகிழங்குளம் அ.த.க. பாடசாலையும், தர்மபால மகா வித்தியாலயமும் மோதின. அதில் 25:15, 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் 2:0 என்ற நேர் செற்களில் தர்மபால மகா வித்தியாலயத்தைத் தோற்கடித்து மகிழங்குளம் அ.த.க பாடசாலை சம்பியனாகியது.

மூன்றாமிடத்தினை பரக்கும் மகா வித்தியாலம் பெற்றது.

அடுத்து இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் கிடாச்சூரி கருவேலங்குளம் அ.த.க பாடசாலையும், தர்மபால மகா வித்தியாலயமும் மோதின. அதில் 25:15, 25:18 என்ற புள்ளிகளைப் பெற்றது. கிடாச்சூரி அ.த.க. பாடசாலை 2:0 என்ற நேர் செற்களில் வென்று சம்பியனாகியது.

மூன்றாமிடத்தினை சின்னடம்பன் பாரதி வித்தியாலயம் பெற்றது.

19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் கிடாச்சூரி அ.த.க. பாடசாலையும், ஸ்ரீ சுமண மகா வித்தியாலயமும் மோதின. அதில் கிடாச்சூரி அ.த.க. பாடசாலை 2:0 என்ற செற் கணக்கில் வென்று சம்பினாகியது.

மேற்படி போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற அணிகள் மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளன என்று வவுனியா வடக்கு கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.மங்கள குமார தெரிவித்தார். (ற-400-42?)

# முல்லைத்தீவு மாவட்ட மட்ட கரப்பந்து முடிவுகள்

புதுக்குடியிருப்பு,மே 6

முல்லைத்தீவு மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டிகளில் 15 வயது ஆண்கள் பிரிவில் வெலிஓயா கிரிவன் வெவ அ.த.க பாடசாலையும் 17 வயது ஆண்கள் பிரிவில் முள்ளியவளை கலைமகள் மகாவித்தியாலயமும் 19 வயது ஆண்கள் பிரிவில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியும் சம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை சிலாவத்தை தமிழ் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.

இதில் 15 வயதுப்பிரிவினருக்கான இறுதி ஆட்டத்தில் முல்லைத்தீவு கல்விவலயத்தைச் சேர்ந்த கிரிவன் வெவ அ.த.க பாடசாலையும், எஹது ஹத் வெவ அ.த.க பாடசாலையும் மோதின. அதில் 2:0 என்ற நேர் செற்றில் கிரிவன் வெவ அ.த.க பாடசாலை வென்று சம்பியனாகியது.

மூன்றாமிடத்தினை முள்ளியவளை கலைமகள் மகாவித்தியாலயம் பெற்றது.

அடுத்து இடம்பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் முள்ளியவளை கலைமகள் மகாவித்தியாலயமும், சிலாவத்தை தமிழ் வித்தியாலயமும் மோதிக் கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற அந்த ஆட்டத்தில் முதலாவது செற்றை கலைமகள் மகா வித்தியாலயம் மிகுந்த போராட்டத்தின் மத்தியில் 25:23 என்ற புள்ளிகள் அடிப்படை யில் வெற்றி பெற்றது.

அடுத்து இரண்டாவது செற்றில் களமிறங்கிய சிலாவத்தை தமிழ் வித்தியாலய அணியினர் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு ஆக்ரோசத்துடன் விளையாடினர். இதனால் இரு அணி வீரர்களும் மாறி மாறிப் புள்ளிகளைப் பெற்ற வண்ணம் இருந்தனர். இருந்த போதும் சிலாவத்தை தமிழ் வித்தியாலய அணியினர் மிகவும் அற்புதமாக விளையாடி 26:24 புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றனர்.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்கான 3 ஆவது செற்றிலும் இரு அணி வீரர்களும் [illegible] பங்குபற்றினர். இறுதியில் கலைமகள் வித்தியாலய அணியினர் 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

மூன்றாமிடத்தை எஹதுஹத் வெவ அ.த.க பாடசாலை பெற்றுக் கொண்டது.

அடுத்து இடம் பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான ஆட்டத்தில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியும் எஹத் வெவ அ.த.க பாடசாலை அணியும் மோதிக்கொண்டன. மிகவும் விறுவிறுப்பாக இடம்பெற்ற ஆட்டத்தில் 25:20, 22:25, 25:23 என்ற புள்ளிகளைப் பெற்று 2:1 என்ற செற்கணக்கில் முள்ளியவளை விதிதியானந்தாக் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியனாகியது. இதில் மூன்றாமிடத்தினை [illegible] வித்தியாலயம் பெற்றுக் கொண்டது. (ற-400-433)

# வடமராட்சி வலய தடகள முடிவுகள்

கரணவாய், மே 6

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான வலய மட்ட தடகளப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளது. போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்றுக் கொண்ட வீர வீராங்கனைகளின் விவரங்களின் தொடர்ச்சி:

5000 மீற்றர்:- பி.விதுஷா - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஆர்.மதுஜா - பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை, உ.சிந்துரூபி வட இந்து மகளிர் கல்லூரி.

குண்டு எறிதல்:- என். சாமந்தி - நெல்லியடி மகா வித்தியாலயம், எஸ்.சயந்தினி - பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப் பாடசாலை.

800 மீற்றர்:- எம்.தர்மினி - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ஈ.மேரி கனிஸ்ரலா - சென்தோமஸ் மகா வித்தியாலயம், ஆர்.மதுரா - பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப்பாடசாலை.

தட்டெறிதல்:- என்.சாமந்தி - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், ரி.விதுசனா - பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள்உயர்தரப் பாடசாலை, கே.சந்தியா நிருசா - செம்பியன்பற்று அ.த.க.பாடசாலை.

உயரம் பாய்தல்:- எஸ்.தயாளி - நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், பி.கயல்விழி - பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்தரப்பாடசாலை, எஸ்.கஜுஜா - அம்பாள் அ.த.க.பாடசாலை. (ற-400-8)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இறுதிக்கு முன்னேறும் கொல்கத்தா

### ஷாருக் நம்பிக்கை?



ஐ.பி.எல். 6ஆவது தொடரில் இதுவரை நடந்துள்ள ஆட்டங்களில் தடுமாறினாலும் நடப்பு சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி இறுதியாட்டத்துக்கு முன்னேறும் என்று அந்த அணியின் உரிமையாளர் நடிகர் ஷாருக் கான் நம்பிக்கை தெரிவித்துள்ளார். மும்பை, வாங்கடே ஸ்டேடிய பாது காவலருடன் வாக்குவாதம் செய்த சம்பவத்துக்கு வருந்துவதாகவும் அவர் கூறியுள்ளார். (ற)

# தொப்பிகள் சென்னையிடம்




கொழும்பு, மே 06
ஐ.பி.எல். தொடரில் சகல துறைகளிலும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பிரகாசித்து வருகிறது.
போட்டியில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரர், மற்றும் அதிக இலக்குகளை வீழ்த்திய வீரர்களுக்கு வழங்கப்படும் ஒரேஞ், ஊதா தொப்பிகள் சென்னை வீரர்கள் வசமாகியுள்ளது.
அதிகூடிய ஓட்டங்களைப் பெற்ற வீரருக்கான ஒரேஞ் தொப்பியை 11 போட்டிகளில் 507 ஓட்டங்களைப் பெற்ற மைக்கல் ஹஸியும் அதிகூடிய இலக்குகளை வீழ்த்திய வீரருக்கான ஊதா தொப்பியை 12 போட்டிகளில் 20 இலக்குகளை வீழ்த்திய ருவான் பிராவோவும் பெற்றுள்ளனர்.

அதி கூடிய
ஓட்டங்களை
ஹசியும், அதிக இலக்கு
களை வீழ்த்தி
பிராவோவும்
தொப்பிகளை
பெற்றுள்ளனர்.

புள்ளிகள் அடிப்படையில் சகல அணிகளையும் பின் தள்ளி சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முதலிடத்தில் உள்ளது.
அதே வேளை நேற்று இடம் பெற்ற மும்பை இந்தியன்ஸ் அணிக்கெதிரான போட்டியில் சென்னை படுதோல்வியை சந்தித் திருந்தமை குறிப்பிடத் தக்கது. (ங-16)

## சம்பியன்ஸ் டிராபி தென்னாபிரிக்க அணி அறிவிப்பு

சம்பியன்ஸ் டிராபி தொடருக்கான மேற்கிந்திய தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அணியின் டொரன் சமிக்கு பதிலாக பிராவா அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் டொரன் சமி டெஸ்ட் மற்றும் '20/20' தொடருக்கு அணித் தலைவராக நீடிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
அணி விபரம்:
வெய்ன் பிராவோ (அணித் தலைவர்), தினேஷ் ராம்தின் (துணை அணித் தலைவர்), டாரன் பிராவோ, சார்லஸ், கிறிஸ்கெய்ல், ஹோல்டர், சுனில் நரேன், பொலார்ட், ரவி ராம்பால், கேமர்ரோச், டாரன்சேமி, சாமுவேல்ஸ், சர்வான், தேவன் சுமித். (ற)

## ஓய்வு பெறப் போகிறாரா வீரேந்திர ஷேவாக்?




இந்திய அணியின் அதிரடி ஆரம்ப வீரர் ஷேவாக் ஓய்வு பெறுவதற்குத் திட்டமிட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
ஷேவாக் சமீபகாலமாக மிக மோசமான முறையில் விளையாடியதால் இந்திய அணியிலிருந்து நீக்கப்பட்டார். அதே போன்று தற்போது ஐபிஎல்-ன் 6வது பிரிமியர் தொடரிலும் ஏமாற்றி வருகிறார். முதலில் விளையாடிய 6 போட்டிகளில் 200 ஓட்டங்கள் மட்டும் எடுத்தார். மும்பைக்கு எதிராக திடீரென மிரட்டல் ஆட்டத்தை வெளிப்படுத்திய இவர், 95 ஓட்டங்கள் சேர்த்தார். மற்றைய 5 போட்டியிலும் பெரியளவில் சாதிக்கவில்லை.
தனது இழந்த திறமையை மீட்டு, இந்திய அணியில் இடம் பெறுவதற்கான எவ்வித நடவடிக்கையிலும் இவர் இறங்கியதாக தெரியவில்லை. இந்திய அணியில் இருந்த போது, பயிற்சியில் கால்பந்து விளையாடுவதை ஷேவாக் அதிகம் விரும்புவாராம். சமீபத்தில் பெங்களூர் அணிக்கு எதிரான போட்டிக்கு தயாராக டில்லி வீரர்கள் கால்பந்து விளையாடினர். ஆனால் ஷேவாக் மட்டும் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தது, அவர் ஓய்வு பெறுவதை காட்டுகின்றது பரபரப்பான பேச்சு நிலவுகிறது.(ற)

# ஸ்வானுக்கு அபராதம்

இங்கிலாந்து சுழற்பந்து வீச்சாளர் கிரீம் ஸ்வானுக்கு கவுண்டி கிரிக்கெட் நிர்வாகம் அபராதம் விதித்துள்ளது.
கவுண்டி சம்பியன்ஷிப் கிரிக்கெட் போட்டியில் துர்ஹாம் அணியுடன் நாட்டிங்காம் ஷேர் அணி மோதியது.
அப்போது நாட்டிங்காம்ஷேர் அணிக்காக விளையாடிய சுழற் பந்துவீச்சாளர் கிரீம் ஸ்வான், நடுவர் ஆட்டமிழப்புக் கொடுத்தவுடன் வெளியேறாமல் களத்தில் நின்று அதிருப்தியை வெளிப்படுத்தினார்.
இதுகுறித்து நடுவர்கள் முறைப்பாடு செய்ததை அடுத்து ஸ்வானுக்கு கவுண்டி கிரிக்கெட் நிர்வாகம் அபராதம் விதித்துள்ளது. மீண்டும் இதுபோன்ற தவறை செய்தால் போட்டியில் விளையாட தடை விதிக்கப்படும் என கடுமையாக எச்சரித்துள்ளது. (ற)



### யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான கபடி

# 15, 19 வயது பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ் சம்பியன்



யாழ்ப்பாணம், மே 6
யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 15 வயதுப்பிரிவு மற்றும் 19 வயதுப்பிரிவு பெண்கள் அணிகளுக்கு இடையேயான கபடிப் போட்டியில் இரு பிரிவுகளிலும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் முதலில் இடம் பெற்ற 15 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையேயான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை பெண்கள் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து குருநகர் சென்.ஜேம்ஸ் வித்தியாலய அணி மோதியது.
அதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை அணி 26:24 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.
19 வயதுப்பிரிவு பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தர பாடசாலை அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகா வித்தியலய அணி மோதிக் கொண்டது.
இதில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி 62:52 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (ற-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், மே 6
தெல்லிப்பழை நாமகள் சனசமுக நிலையத்தினதும் விளையாட்டுக்கழகத்தினதும் 50 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று திங்கட்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:
பி.ப 3.30 மணி
ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் எதிர் ஞானகலா விளையாட்டுக்கழகம்
பி.ப 4.30 மணி
பாசையூர் சென் .அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழகம். (ற-23)

## 19 வயது ஹொக்கியில் உடுவில் சம்பியனானது



யாழ்ப்பாணம் மே 6
யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஹொக்கிப் போட்டியின் இறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
கடந்தவாரம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி மோதியது
இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாநிலையில் ஆட்டத்தின் வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.
அதில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனாகத் தெரிவாகியது. அதனைத் தொடர்த்து இடம் பெற்ற மூன்றாமிடத்திற்கான ஆட்டத்தில் கனகரெட்ணம் மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து பண்டத் தரிப்பு மகளிர் கல்லூரி அணி மோதியது.
இரு அணியினரும் ஆட்ட நேரமுடிவில் ஏதுவித கோல்களையும் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டத்தின் வெற்றியை தீர்மானிப்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன இதில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று மூன்றாமிடத்தை தனதாக்கிகொண்டது.(ற-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஸாத் சாலிக்கு 3 மாத தடுப்பு



கொழும்பு, மே.6

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்ட கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அஸாத் சாலிக்கு 3 மாத கால தடுப்புக்காவல் உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இதற்கமைய அடுத்துவரும் 3 மாதங்களும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் நேரடிக் கட்டுப் பாட்டின்கீழ் அஸாத் சாலி மீது விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதேவேளை, அஸாத் சாலி தொடர்ந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டு வரு கிறார். இதனால் அவரது உடல்நிலை மிக மோசமான கட்டத்தை அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-சி)

# மாடு கடத்தியவர்கள் மாட்டினர் படையிடம்

யாழ்ப்பாணம், மே.6

வன்னியில் திருடப்பட்ட மாடுகளை வவுனி யாவுக்கு கடத்திச் சென்ற இருவர் சிராட்டிக் குள இராணுவத்தினரிடம் மாட்டிக் கொண் டனர்.

இவர்கள் கடத்திச் சென்ற 30 மாடுகளை இரா ணுவத்தினர் மீட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் இராணுவத்தினரால் கால்நடை அபிவிருத்தி திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, மேற்படி மாடுகள் மல்லாவி, பாண்டியன்குளம் பகுதி மக்களிடமிருந்து திருடப்பட்டவையே என அதிகாரிகளால் இனங்காணப்பட்டுள்ளன.

இந்தப் பகுதி மக்களுக்கு வாழ்வாதார உத வித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கால் நடைகள் திருட்டுப் போகும் சம்பவங்கள் அண்மைக் காலமாக இடம் பெற்று வருகின் றன.

இவ்வாறு திருடப்பட்ட மாடுகளில் சில வவு னியாவுக்கு கடத்திச் செல்லப்பட்ட போதே இராணுவத்திடம் பிடிபட்டுள்ளன.

மாடுகளை கடத்தியவர்களிடம் மேற்கொள் ளப்பட்ட விசாரணைகளில் உள்ளூர் நபர்க ளிடம் தாம் மாடுகளை வாங்கியதாக தெரி வித்துள்ளனர்.

இரு முஸ்லிம் வியாபாரிகளே இவ்வாறு மாடு களை கடத்திச் சென்ற போது இராணு வத்திடம் பிடிபட்டுள்ளனர். தற்போதும் மாடுகள் திருட்டுச் சம்பவம் அதிகரித்துள்ள நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸாருக்கு இராணுவத் தினரால் அறிவிக்கப்பட்டும் இது தொடர்பில் எவரும் கைது செய்யப்படவில்லை என பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

பிடிபட்ட மாடுகளில் சிலவற்றை அதன் உரிமையாளர்கள் அடையாளம் காட்டியுள்ள நிலையில் ஏனைய மாடுகள் சிராட்டிகுள இராணுவ முகாமில் உள்ளன என்று அந்தப் பகுதி கால்நடை அபிவிருத்தி உத்தி யோகத்தர் செ. பாலசுப்பிரமணியம் தெரிவித் தார்.

(ஒ-16-ரி)

# க.பொ.த. (உ/த) ஓகஸ்ட் 5 இல்

கொழும்பு, மே 06

இந்த வருடத்துக்கான க.பொ.த. (உயர்தரப் பரீட்சை) எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி ஆரம்பமாகி ஓகஸ்ட் ஆம் 31 ஆம் திகதி வரை நடைபெறும் என பரீட்சைகள் திணைக் கள ஆணையாளர் நாயகம் டபிள்யூ.எம். என்.ஜே. புஸ்பகுமார அறிவித்துள்ளார்.

இதேவேளை 5 ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி நடை பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ந-400)

# யாழ்.வர்த்தகர்களிடம் கப்பம் வாங்கியோர் கைது

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த சிங்களவர் வர்த்தகர்களிடம் தான் இராணுவச் சிப்பாய் என அறிமுகப்படுத்தி, பின் னர் அவர்களை மிரட்டி கப்பமாகப் பெருந் தொகைப் பணத்தை வாங்கியுள்ளார். இவ ருக்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவரும் உடந்தையாகச் செயற்பட்டனர். வர்த்தகர்க ளின் முறைப்பாட்டின் பேரில் களமிறங்கிய யாழ்.பொலிஸார் நேற்று அதிரடியாக இந்த மூவ ரையும் கைது செய்து நீதிமன்றில் முன்னி லைப்படுத்தினர். சந்தேக நபர்கள் மூவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(ந-4-ரி)

# காணி சுவீகரிப்பு; வழக்கு இந்த வார இறுதியில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மாவட்டத்தை விட்டு வெளி மாவட்டங்களில் வசிக்கும் வலி.வடக்கு மக்களும் வழக்குத் தாக்கல் செய்வதற்கு முனைப்புக் காட்டி வருகின்றனர். இதனால், பிரதேச சபையில் இது தொடர்பான பதிவு நடவடிக்கை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை நீடிக்கப் பட்டுள்ளது'' -என்று வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரி வித்தார்.

வலி.வடக்கு பிரதேச சபையில் மக்கள் பதி வுகளை மேற் கொண்ட பின்னர் இந்த வார இறுதியில் வழக்குத் தாக்கல் செய்யப்ப டும்- என்றார் சுமந்தி ரன்.

(ந-5)


கனடா கையில் உள்ள காசே போதும்

A/L சித்தியுடன் - மிகக்குறைந்த ஆலோசனைக் கட்டணத்துடன் கனடாவில் படிக்க, உழைக்க அரியவாய்ப்பு

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

021 221 9016, 021 568 9090



விற்பனைக்கு

(இஞ்சின் கியர் பொக்ஸ்)

TOYOTA -MITSUBISHI-ISUZU வாகனங்களுக்கான இஞ்சின் கியர் பொக்ஸ் விற்பனைக்கு உண்டு

(4BD1,4BE1, 4BC2,4D32, 4D33, 4D34, 3L,1KZ, 2C)

என்பன விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 723 8615



மானிப்பாய் மற்றும் நெல்லியடியில் ஆரம்பம்!!

Diploma in Mobile Phone Repairing

(Hardware and Software Repairing)

சகலவகையான கைத்தொலை பேசிகளையும் மிகக்குறுகிய காலத்தில் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு கற்கைநெறி!!!

Apple iphone unlock செய்யும் முறையும் கற்பிக்கப்படும்

(வகுப்புக்கள் ஆரம்பம் -10/05/2013) By :- Selvathashan, M.Sc

மேலதிக விபரங்களுக்கு :-

UNI - ICT Education (PVT) LTD

Jaffna Road, Manipay. (மானிப்பாய் பிரதேசசபை முன்பாக)

T.P :- 021 7201420 / 0777 110 862



பதவி வெற்றிடம்

உதவி முகாமையாளர் (ஆண்-1 பெண்-1) தற்காலிகம்

01.05.2013 அன்று 26 வயது- 40 வயதிற்குட்பட்டவர்கள். யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேசத்தில் தற்போது ஆகக் குறைந்தது ஒரு வருடம் வசிப்பவர்கள் மாத்திரம் நேர்முகத்தேர்விற்குத் தோற்றலாம். ஏனையோர் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கல்வித்தகைமை:

பெண்கள்: அடிப்படைத் தகைமையாக G.C.E A/L 3 பாடங்களில் சித்தி. அத்தோடு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் உள்ளகப் பட்ட தாரியாக இருந்தால் நேர்முகத்தேர்வில் மேலதிக புள்ளிகள் வழங்கப்படும்.

ஆண்கள்: கட்டாயமாக அடிப்படைத் தகைமையாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் கணக்கியலை ஒரு பாடமாகக் கொண்ட உள்ளகப் பட்டம். வெளிவாரியாக அல்லது கணக்கியல் டிப்ளோமா ஏற்கப்பட மாட்டாது.

வேதனம்: 18,000 மாதாந்த வேதனமாக வழங்கப்படும். ஞாயிறு ஓய்வாகும்.

கடமை நேரம்:

காலை 9 மணி பி.ப 5.30 வரை (மதிய ஓய்வு உள்ளடங்கலாக)

நேர்முகத்தேர்வு:

புதன் 08.05.2013 அன்று பி.ப 5.30 மணிக்கு பின்வரும் முகவரியில் இடம் பெறும். தேர்வு செய்யப்பட்டால் 3 வருட சேவை ஒப்பந்தம் கைச்சாத்திடுதல் வேண்டும்.

பொது முகாமையாளர்

திசைகாட்டி பிறைவேற் லிமிட்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி. யாழ்ப்பாணம். (37122)(6.11)



புதிய நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி, யாழ்நகர்

O/L DAY CLASS

பிரிவு-II ஆரம்பம்

08.05.2013 புதன் காலை 8.00 மணி

புதிய அனுமதிகளை உடன் பதிவு செய்யவும்



சிறிராம் ஜுவல்லர்ஸ்

யாழ்.நகரில் தங்க நகைகளின் கரட் பரிசோதனை இயந்திரத்தை முதன் முதலில் அறிமுகப்படுத்திய சிறிராம் ஜுவல்லர்ஸ் ஸ்தாபனத்தார் குறையாத செல்வத்தை வளமாக அள்ளித்தரும் அதிசயத் திருநாளாம் "அட்சய திருதியை" 22 KARAT ONLY

எதிர்வரும் 12,13ஆம் (ஞாயிறு, திங்கள்) திகதிகளில் வருகின்றது.

இத் திருநாளில் உங்கள் வாழ்வில் சுபீட்சத்தை உருவாக்கும் பெறுமதி மிக்க நகைகளை சிறிராம் ஜுவலரியில் வாங்கி மகிழுங்கள்!

அன்றைய தினத்திற்காக....

- அட்சய திருதியை முன்னிட்டு அதி நவீன டிசைன்களை அறிமுகம் செய்வதோடு நம்ப முடியாத விசேடவிலைக்கழிவுகள் வழங்கப்படும்.
- அன்று குறிப்பிட்ட சில நகைகள் செய்கூலி சேதாரமின்றி தங்கவிலைக்கே விற்கப்படும்.
- அன்றைய தினம் நகைகளைக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் விசேட பரிசுகள் காத்திருக்கின்றன.
- அன்றைய தினங்களில் உங்களது சிரமத்தினைத் தவிர்த்துக்கொள்ள இன்றுமுதல் முற்பணம் இன்றி உங்கள் நகைகளைத் தெரிவு செய்து அட்சயதிருதியை திருநாளில் பெற்றுக்கொள்ளலாம்.
- அட்சயதிருதியை தினங்களில் எமது காட்சியறை காலை 7.30 தொடக்கம் இரவு 8.30 வரை உங்களுக்காகத் திறந்திருக்கும்.
- அனைத்து கொள்வனவுகளுக்கும் பற்றுச்சீட்டுடன் தரநிர்ணய சான்றிதழ் வழங்கப்படும்.

இல. 158,193 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 8334, 077 773 0567



யாழ். நகர் மத்தியில் வர்த்தக கட்டடம் வாடகைக்கு

யாழ். நகர் மத்தியில் K.K.S றோட்டில் வங்கிகளுக்கு அருகில் கீழ் தளம் (Ground Floor) 15X65 சதுர அடி, மேல் மாடி (1st Floor) 30X65 சதுர அடி விஸ்தீரணம். இரண்டும் சேர்த்தோ தனித்தனியாகவோ கொடுக்கப் படும். அலுவலகத்துக்கோ, காட்சி அறைக்கோ உகந்தது.

விவரம்: T.P- 075 498 5735

e-mail: redparrot3541@yahoo.com

(37069)(6.11)



சுன்னாகம் ஸ்ரீ கதிரமலை சிவன் தேவஸ்தான 10 ஆம் நாள் - சகோபுரக் காட்சி, சப்பரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 06.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.